

# வளர்

காலாண்டிதழ் ஆவணி 2024 இதழ் : 08 வெளியீடு : மகாஜனா '79

உள்ளே ...


- சுப. கிருஷ்ணானந்தன்
- செயபாலன்
- தர்மினி
- க. ஆதவன்
- விஜி நாகராஜா
- தீபிகா
- வடகோவை வரதராஜன்
- சின்னையா ரவீந்திரன்
- மனோ
- ஆலகாலன்
- சஞ்சயன் செல்வமாணிக்கம்
- கவல்கணன்
- புனிதா கணேஸ்
- அகரன்
- பஞ்சகல்யாணி
- மாயோன்
- நெற்கொழுதாசன்
- ஜலீலா முஸம்மில்
- பார்த்தீபன் பத்மநாதன்
- புஷ்பராசா பவஸ்ரீனா
- வித்தகபுரத்தான்
- ரஞ்ஜிற் கஜேந்திரா


தீதும் நன்றும் பிறர் தர வாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறக் கட்டளைகளின் கடமை நற்குடிகளை உருவாக்குவதே!

**வேரை** மறக்காத விழுதுகள் போல் தாங்கி, இட்டார் பெரியோர் எனும் முதுமொழிக்கிணங்கி, தாயகத்தில் இன்னல் படும் மக்களின் துன்பங்கண்டு இரங்குபவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்களே. ஆயினும் பாத்திரமறிந்து நன்கொடையைக் கொடு எனும் புதுமொழிக்கிணங்க பணத்தைக் கொடுக்கவேண்டும்.

தாயகத்தின் வசதி படைத்தவர்களும் சரி, புலம் பெயர் தேசத்தவர்களும் சரி, தங்கள் அறக்கட்டளைகளின் மூலம் கோவில்களைக் கட்டியும் ஏழை மாணவர்களுக்குக் கல்வி புகட்டியும் தாங்கள் படித்த பாடசாலைகளுக்கும் ஏனைய கல்விக்கூடங்களுக்கும் பல்வேறு வகையான நிதி உதவிகளையும் புரிந்துவருகிறார்கள். இத்தாராள உதவி விழலுக்கு இறைத்த நீர்போலாகிவிடுவது மட்டுமல்ல எதிர்விளைவுகளையும் ஏற்படுத்திவிடுகிறது.

தொண்டு நிறுவனங்களின் சார்பாகத் தாயகத்தில் பணத்தைக் கையாள்பவர்களின் தார்மீகக் கடமை, பொறுப்புக்கூறல் (Accountability) மற்றும் வெளிப்படைத்தன்மை (Transparency) இரண்டுமே உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கும் நிதி சரியான வழியில் பயன்படுத்தப்படுவதை பணம் கொடுப்போருக்கு உறுதி செய்வதற்குமுரிய வழிமுறைகளாகும். ஒவ்வொரு செலவுக்கும் பற்றுச்சீட்டு முதற்கொண்டு, வங்கிக் கணக்கு வழக்குகளை நன்கொடை கொடுப்பவர்களுக்கு காலண்டின் அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டும். இப்படி இருக்கும் அறக்கட்டளைகளுக்கு மென்மேலும் பணம் தருவதற்குப் பலர் முன்வருவார்கள். பணம் கொடுப்பவர்கள், சக நன்கொடையாளர்களுடன் கலந்து பேசி ஒவ்வொரு செலவுக்கும் கணக்கு காட்டாத அறக்கட்டளைகள் காலாவதியாவதை உறுதிசெய்யவேண்டும்.

இப்படியான பொறுப்புக்கூறல் (accountability) இல்லாவிடின் நற்குடிகளை உருவாக்கத் தவறிய தில் நன்கொடையாளருக்கும் பங்குண்டு. நன்கொடையாளர்கள் இளம் சிறார்களை நற்குடிகளாக மாற்றுவார் மட்டுமன்றி அப்பணத்தைக் கையாள்பவர்களையும் நற்குடிகளாக தொடர்ந்து வைத்திருப்பதற்குரிய தொடர்ச்சியான கண்காணிப்புப் பொறிமுறைகளைத் தம்வசம் வைத்திருப்பதும் அவசியமானதே. இல்லையெனில் ஊழல் நிறைந்த தொண்டுக்கு உபகாரம் செய்தவர் ஆவீர்.

எது எப்படி இருந்த போதும் கொடுப்பவர்களுக்குப் பொறுப்பிருக்கிறது. கொடுத்துவிட்டுத் தம் கடமை முடிந்தது என்று உண்டியலில் போட்ட காசுபோல இருந்து விடமுடியாது. அந்தப் பணம் உரிய வழியில் செலவு செய்யப்படுகிறதா? என்பதைக் கண்காணியுங்கள்! தவறுகள் ஏற்படத் துணைபோகாதீர்கள். உங்களுக்கு நேரமில்லை என்றால் உங்களுக்கு மிகவும் நம்பிக்கையானவர்மூலம் உதவுங்கள், கண்காணியுங்கள்!

எங்கள் முதல் ஏழு இதழ்களுக்கான ஆதரவுக்கும் கருத்துகளுக்கும் நன்றி. மற்றும் எட்டாவது இதழுக்கான ஆக்கபூர்வமான விமர்சனத்தை எதிர்பார்க்கிறோம். "வளர்" காலாண்டு இதழில் எழுத, முதற்படி எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கிறோம். நமது இதழில் வாசகர்களுக்குப் பயன்படும் உங்கள் வாழ்க்கை அனுபவம் மற்றும் கதை, கவிதை, கட்டுரை எழுதி உங்கள் உள்ளார்ந்த திறமையை வெளிக்கொணரவும். உங்கள் தரமான படைப்புகள் வெளியிடப்படும்.

ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு.

- சுப. கிருஸ்ணானந்தன்
தொடர்புகளுக்கு : (Krishnasubram7@gmail.com)

"வளர்"
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
1979 ம் வருட
உயர்தர வகுப்பு மாணவர்
இலக்கிய குழாமின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# - ஆலகாலன் பக்கம் -

## அன்புள்ள ஈழத்தமிழ் யூரியூப்பர்களுக்கு,

வணக்கம். இது உங்களுக்கான காற்று. உங்களுக்கான காலம். சமூகக் களையெடுப்பிற்காக, உங்கள் பங்கு உரங்களை விசிற வேண்டிய சந்தர்ப்பம். வெறும் விளையாட்டுப் பிள்ளைகளாக இராமல், உங்கள் ஊடக பலத்தை, உச்சாணியாகக் களத்தில் இறக்க வேண்டிய பொறுப்பு மிகுந்த தருணத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். அருச்சுனா என்கிற தனிமனிதன், ஒரு கல்லில் எறிந்து விழுத்திய பல மாங்காய்களை, நீங்கள் சந்தைக்கு கொண்டு வர வேண்டும். அந்தத் துணிவு மிக்க மனிதன், தன் பணியை முடித்துக் கொண்டு திரும்பி விட்டான். மீளவும், மீளவும் அவனது காருக்கு பின்னால் ஓடிக் கொண்டே இருக்காதீர்கள். அவனை எல்லாக் கேள்விகளும் கேட்டாயிற்று. தோண்டித் தோண்டி, ஈரைப் பேனாக்க அங்கு எதுவுமில்லை.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவன் ஒளிபாய்ச்சி விட்டிருக்கும், ஊழல் பெருச்சாளிகளையும், பணம் தின்னும் முதலைகளையும், கட்டியிழுத்துச் சந்திக்கு கொண்டு வருவதுதான். பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிச் செல்லுங்கள். புற்றுகளுக்குள் நொந்திருக்கும், நலிந்த குரல்களை வெளியே கொண்டு வாருங்கள். அருச்சுனா சொன்னதொன்றும் பொய்யல்ல என்பதற்கான, மக்கள் ஆதாரங்களே, எங்கள் விடிவுக்கான பலம். இன்று, யூ-ரியூப்பர்களாகிய உங்களின் பலத்தையும், முக்கியத்துவத்தையும், அருச்சுனா எத்தனையோ மடங்கு உயர்த்தி விட்டிருக்கிறான்.

நீங்கள், உங்களின் பலம் தெரியாது நிற்கிறீர்கள். உங்களுக்கான களப்பணிகள் நிறையவே கொட்டிக் கிடக்கின்றன. அருச்சுனா சொன்ன "மீடியா மார்க்கெற்றிங்" என்ற சொல்லின், மகத்தான சக்தியை, நீங்கள் உள்ளங்கையில் ஏந்திக் கொண்டு, வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஓடினால், ஒன்றன் பின் ஒன்றாக, பட்டிமாடுகளைப் போல ஒரே திசையில், ஓடாதீர்கள். உங்களைச் சுற்றி எல்லாத் திக்குகளிலும், ஏராளம் சிடுக்குகள் உருமறைந்து கிடக்கின்றன. நீங்கள் பலமாகுங்கள். மேலும் மேலும் கற்றுக் கொள்ளுங்கள். அடம்பன் கொடியாகத் திரளுங்கள். ஒரு பெருஞ் சங்கமாக உருவெடுத்து, நீங்களும் உழைத்து, சமூகத்தையும் முன்னேற்றுங்கள்.

மருத்துவத் துறையை மட்டும் நோண்டிக் கொண்டிருக்காதீர்கள். மணற் கொள்ளை, கல்விக் கொள்ளை, இலக்கியத் திருடர்கள், அறக்கட்டளை அத்துமீறல்கள், காணி பிடிப்புக்கள், வெளிநாட்டுச் சண்டித்தனங்கள், உள்ளூர் அடாவடிப் பஞ்சாயத்துக்கள், வங்கித்துறை இடமாற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்கல்கள், பாலியல் சீண்டல்கள், மதுபானக்கடை திறப்புக்கள் என்று, கேட்க நாதியற்ற பல பிரச்சனைகள், மிகச் சாதாரணமாக அரங்கேறிக் கொண்டேயிருக்கின்றன. இங்கு ஒரு அருச்சுனா வந்து, யன்னல்களைத் திறந்து காட்டினான். மற்றெங்கும், இதுவரை யாருக்கும் அந்தத் தெம்பு வரவில்லை. அவ்வளவு தான்.

உங்கள் கமராக்கள், சமூகத்தின் இருட்டுகளைத் துடைத்து, வெளிச்சம் பாய்ச்சட்டும். ஒவ்வொரு மனிதனும், குற்றம் செய்ய நேர்கிற போது, யூ-ரியூப்பர்களின் கமராக் கண்களுக்குப் பயப்படுகிற ஒரு நிலையை உருவாக்குங்கள். அறத்திற்கும், சட்டத்திற்கும் கட்டுப்பட்ட, ஒழுங்கமுள்ள ஊடகவியலாளர்களாக உங்களை வளர்த்துக் கொண்டு, அடுத்த தலைமுறை அணிகளையும் உருவாக்குங்கள். வெறும் கமராவால் மட்டும், ஒரு பொறுப்பான ஊடகவியலாளன் உருவாக முடியாது. நிரம்ப வாசியுங்கள். நிரம்பத் தேடுங்கள். நிரம்பப் பயணியுங்கள். நிரம்பக் கதையுங்கள். புதிது புதிதாகச் சிந்தித்து செயற்படுத்துங்கள்.

அற்ப பொருளாதாரத்திற்காகவும், வெறும் பிரபல்யத்திற்காகவும், மலினமான தலைப்புக்களை இட்டு, உங்கள் பக்கங்களைப் பார்வையிட வைக்கிற அருவருப்பூட்டும் ஊடகவியலை, ஒருபோதும் செய்யாதீர்கள். ஒரு நாணயமுள்ள இதழியலாளனாக, ஆதாரங்களுடனான செய்திகளை எப்போதும் எடுத்து வையுங்கள். பணத்துக்குக் குழைகிற வால்களாக இருக்க வேண்டாம் உங்கள் தன்மானம். ஒரு ஊடகவியலாளராக, உங்களை யாரும் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள். முதுகெலும்போடு நிமிர்ந்து நில்லுங்கள்.

உங்கள் நீடித்த நிலைப்பும், உயர்வும், நீங்கள் பின்பற்றுகிற ஊடக அறத்திலேயே தங்கியிருக்கும். சிறக்கட்டும் உங்கள் பொறுப்பு மிக்க பணி.

•

**- தர்மினி -**

இன்று அப்படி என்ன தான் நடந்துவிட்டது?
ஒன்றுமில்லை
எல்லோரும் வெள்ளண வீட்டுக்கு வந்துவிட்டனர்.

இப்போது அப்படியென்ன குதூகலம்?
சொல்வதுபோல ஒன்றுமில்லை
அனைவரும் கூடியிருந்து சாப்பிட்டோம்.

இந்த நாளுக்கு அவ்வளவு விசேசமா?
அதெல்லாமில்லை
நமது கிண்ணங்கள் ஒன்றோடொன்று
உரசிக்கொண்டன.

அதற்கு மேலும் எதுவோ நடந்துவிட்டது
இவ்வளவு நேரமாக உறங்காமலிருக்கிறாயே?

பெரிதாகச் சொல்ல முடியாது
அதுவொரு இரகசியம்.

அந்தளவு என்ன கதையிருக்கு உனக்கு?

என்னிடம்
நீ கேட்கச் சொல்லும் கதையொன்றுமில்லை
நடந்தவற்றை நினைத்துக் கொண்டிருக்கிறேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு துளி

- கவல்கணன் -

இன்றும் அவன் நின்ற இடத்தில், நிலத்தில் ஒரு துளி. அதைக் கண்டதும் அவனுக்குக் கடுப்பேறியது. ஒழுங்காக ஒண்டுக்கிருக்க முடியாதவர்களெல்லாம் இந்த நிறுவனத்தில் எப்படிப் பெரும் பதவிகளை வகிக்கிறார்கள் என்று அவன் மீண்டும் நினைத்துக் கொண்டான். அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தில் ஆயிரத்திற்கும் சற்றுக் குறைவானவர்கள் பணி புரிகிறார்கள். நகரத்தின் மையப்பகுதியில் பணிமனை. உயர் மாடிக் கட்டிடம் ஒன்றில் இரண்டு மாடிகளை அவன் பணியாற்றும் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. பத்து வருடக் குத்தகையாம். அதனால், கோவிட் பெருந்தொற்றின் போது வீட்டிலிருந்தே வேலை செய்யலாம் என்று கூறியிருந்த அவனது நிறுவனம், இப்போது வாரத்தில் நான்கு நாட்களாவது பணிமனைக்கு வந்து போக வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளது. அதனால் அவனுக்கொரு சிரமமும் இல்லை. அவன் வீட்டிலேயே வாழும் அவனது மாமியாருக்கு வீட்டிலிருந்து வேலை செய்வது என்பது பழக்கப்படாத விடயம். புருஷ இலட்சணம் அல்லவா? தனது மகள் கொண்டு வந்தவன் வீட்டோடு இருப்பதென்றால், மன்னார் அண்ட் கொம்பனியோ என்று தனது நண்பர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடும் போது அவர் குறிப்பிட்டது அவன் காதில் விழுந்திருந்தது. அதைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை என்றாலும், அவனுக்கு அது தேவையில்லை என்று தோன்றியது. வேலைக்கு வந்தால், இந்த 'ஒரு துளியைக்' கண்டு அவன் ஒவ்வொரு முறையும் அருவருத்ததுண்டு. மாமியாரின் பேச்சே பரவாயில்லையோ?

அந்த ஒரு துளியைப் பார்க்கும் போதெல்லாம் அவனது நண்பனின் மின்னஞ்சல் ஞாபகத்திற்கு வரும். 'oruthuli@ என்று தொடங்கும் அவனது மின்னஞ்சலுக்கான காரணம் என்ன?' என்று கேட்டபோது, "எல்லாமே ஒரு துளியில் இருந்துதானே ஆரம்பிக்கின்றன" என்று அவனது நண்பன் கொடுத்த பதில் அடிக்கடி நினைவுக்கு வரும்.

அவன் வேலை செய்யும் மாடியில் நான்கு கழிப்பறைகள். ஆண்கள் பெண்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. நல்ல வேளை, பாலின வேறுபாடில்லாத கழிப்பறைகளை அவனது நிறுவனம் இன்னும் அறிமுகப்படுத்தவில்லை. அதனை ஏற்றுக் கொள்வது அவனுக்குக் கடினமானதாக இருக்கிறது. பெண்கள், இப்படி ஒரு துளியை, நிலத்தில் விட்டுச் செல்ல மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். இருந்தாலும், ஆண்கள் (மட்டும் கற்ற) பாடசாலையில் படித்ததாலோ என்னவோ, கழிப்பறையில் பெண்களைக் காண்பது அவனுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இந்த 'ஒரு துளியை விட்டு செல்பவன் யார்' என்று கண்டுபிடித்து ஒரு வழி செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் யோசிப்பான். மனித வளத்துறை அதிகாரியிடம் முறையிடலாமா என்று சில சமயம் சிந்திப்பான். மேசைக்குச் சென்றதும் ஒரு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும் என்று அவனுக்குத் தோன்றும். ஆனால், மேசைக்கு வந்த பின்னர், "ஏன் இந்த வம்பு?," "தேவையில்லாமல் அவர்களது விசாரணைகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்" என்று யோசித்து விட்டு அதனைக் கைவிட்டு விடுவான். கூடவே, புகார் என்று வந்துவிட்டால், "யார் மீது சந்தேகப் படுகிறீர்கள்?" என்று மனித வளத்துறையினர் கேட்பார்கள். யாராவது பெயரைச் சொன்னால், சில வாரங்களின் பின்னர் பெயரிடப்பட்டவரின் வயது, இனம், அல்லது கலாச்சாரப் பின்னணியைக் காரணம் காட்டி, அவன் பாகுபாட்டைக் காட்டினான் என்று, ஏதாவது 'பாகுபாட்டிற்கு எதிரான பயிற்சி' வகுப்பிற்கு அனுப்பி விடுவார்கள் என்று எண்ணி, அந்த சிந்தனையைக் கைவிட்டு விட்டான்.

ஆனால், ஒவ்வொரு முறை அவன் இந்தக் கழிப்பறைக்குச் செல்லும் போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த 'ஒரு துளி' அவனை விசனப் படுத்திக் கொண்டே இருந்தது. யாராயிருந்தாலும் அவனிடம் ஒரு வார்த்தை சொல்லி அதனை நிறுத்த வைக்க வேண்டும் என்று நினைப்பான். ஆனால் யாரென்று எப்படி அடையாளம் காண்பது? அவன் இருக்குமிடத்திலிருந்து அவன் செல்லக்கூடிய நான்கு கழிப்பறைகளில், இந்தக் கழிப்பறைதான் அவன் பயன்படுத்த மிகவும் சௌகரியமான கழிப்பறை. ஏதாவது அச்சிட வேண்டுமென்றால், அதற்கான கட்டளையை அவன் மேசையிலிருந்தே கணினி வழியாகக் கொடுத்து விட்டு, கழிப்பறைக்குப் போக முன்னர் அச்சு இயந்திரத்தில் அவனது அடையாள அட்டையை ஒட்ட வைத்து, அவன் அனுப்பிய ஆவணத்தை அச்சு செய்யத் தொடக்கி விட்டு கழிப்பறைக்குச் சென்று விட்டு வெளியே வரும்போது அச்சடித்த பிரதிகள் அவனுக்காகக் காத்திருக்க, அவற்றை எடுத்துக் கொண்டு அவனது இருக்கைக்குச் செல்வது அவனது வழக்கம். இதை மாற்றி இந்த ஒற்றைத் துளிக்காக வேறொரு கழிப்பறைக்குச் செல்வதென்றால் அவனது பழக்கத்தை மாற்ற வேண்டும். அதற்கும் அவன் தயாராக இல்லை.

அந்த ஒரு துளியைப் பார்க்கும் போதெல்லாம் அவனது நண்பன் ஒருவனின் மின்னஞ்சல் ஞாபகத்திற்கு வரும். 'oruthuli@ என்று தொடங்கும் அவனது மின்னஞ்சலுக்கான காரணம் என்ன?' என்று கேட்டபோது, "எல்லாமே ஒரு துளியில் இருந்துதானே ஆரம்பிக்கின்றன" என்று அவனது நண்பன் கொடுத்த பதில் அடிக்கடி நினைவுக்கு வரும். ஒரு பானை சோறுக்கு மட்டுமல்ல இந்த நிறுவனத்திற்கே ஒரு துளிதான் பதம் போல. இன்று இன்னொரு விடயத்தையும் அவன் அவதானித்தான். கோவிட் பெருந்தொற்று பரவியிருந்த காலத்தில் எல்லோரும் கழிப்பறையை விட்டு வெளியேறும்போதும் மற்றைய சில வேளைகளின் போதும் தத்தமது கைகளை நன்றாகக் கழுவிக் கொள்வார்கள். இன்று இரண்டு பேரை அவதானித்தான், அவர்கள் உள்ளே சென்றார்கள், தங்கள் வேலையை முடித்தார்கள், வந்த வேகத்திலேயே திரும்பினார்கள். கைகளைக் கழுவியதாகத் தெரியவில்லை. நல்ல பழக்கங்கள் பயத்தினால் மட்டுமே உருவாகுகின்றனவா என்று யோசித்த அவன், அந்த ஒரு துளிக்குச் சொந்தக்காரன் இவர்களில் ஒருவனாக இருக்கலாமோ என்று சந்தேகப்பட ஆரம்பித்தான். இவர்கள் கழிப்பறைக்குச் செல்வதைக் கண்டால் அவனும் அவர்களைத் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தான். அந்த 'ஒரு துளி' அவர்களதா என்பதை உறுதி செய்வதில் அவ்வளவு ஆர்வம் அவனுக்கு.

ஆனால் பல சமயங்களில் அவர்கள் கழிப்பிடம் செல்ல முன்னரும் சென்று திரும்பியதும் அந்த இடம் காய்ந்து இருப்பதை அவதானித்துள்ளான். அதனால் அது அவர்கள் இருவரும் இல்லை என்ற முடிவிற்கு வந்தான். இதுவே அவனது பொழுது போக்காக மாறி விட்டது. முடிந்தவரை நாசூக்காக, செய்தவர் யார் எனும் தேடுதலில் ஈடுபட்டான். சில சமயங்களில் ஒரு முறை சென்று பார்க்கும் போது இருக்கும் அந்தத் துளி, ஓரிரு மணி நேரத்தினுள் காணாமல் போய் விடும். அதற்கிடையில் கழிப்பறையைச் சுத்தம் செய்பவர்கள் வந்து போனதாகத் தெரியவில்லை. கழிப்பறையைச் சுத்தம் செய்ய ஒரு குத்தகைக்காரரை அவன் நிறுவனத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். இங்கு மாணவர்களாக வந்திருப்பவர்கள்தான் அனேகமாக அந்தத் தொழிலை செய்து, அவர்களின் முதலாளியின் இடை-யைப் பருமனாக்கி வருகிறார்கள். சுத்தம் செய்ய வருபவர்கள் அண்மித்தாலே தலையை நிமிர்த்தாமல் அவனுக்குத் தெரிந்து விடும். உடம்பில் வெங்காயமும் உள்ளியும் கலந்த வியர்வை. மற்றவர்கள் எப்படி சகித்துக் கொள்கிறார்கள் என்று அவன் யோசிப்பான். கூடவே தனது உடலில் இருந்து அந்த மணம் வருகிறதா என்று பரீட்சித்தும் பார்ப்பான்.

கழிப்பறையைச் சுத்தம் செய்தவர்கள் வந்து போகாமலே நிலம் காய்ந்து போவதை அவன் அவதானித்த போது, தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் சென்னை அடையாறில் ஒரு கோவில் பிள்ளையார்சிலை பால் குடித்த சம்பவம் நினைவுக்கு வந்தது. துந்திக்கையில் ஒரு சிறு குவளை பாலை வைத்தால் பிள்ளையார் உறிஞ்சிக் குடிக்கிறார் என்று பார்த்தவர்கள் பலரும் சொல்ல, அயலவர் மட்டுமல்ல பல்வேறு இடங்களிலிருந்தும் பால் கொடுக்கப் பக்தர் கூட்டம் பெருகி விட்டது. பக்கத்துத் தெருவில் இன்னொரு பிள்ளையாரும் பால் குடிக்கிறார் என்று அங்கும் பக்தர்கள் படையெடுத்தார்கள். இந்தப் படையெடுப்பெல்லாம் சில நாட்கள் தான். எந்தக் கடவுள் என்றாலும், எந்த ஊரில் அவருக்குக் கோவில் இருந்தாலும் அவர்களெல்லாம் பால் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். பின்னர்தான் தெரியவந்தது நுண்துளை உள்ள கற்கள் காய்ந்து இருந்தால் அவை நீரை உறிஞ்சிக் கொள்ளும் என்று. இதற்கிடையில் அடையாறில் வீற்றிருந்த பிள்ளையார் (முதலில் பால் குடிக்க ஆரம்பித்த அவரேதான்!) கோவில் நிறைய சம்பாதித்து, அதன் சுற்றுவட்டாரத்திலிருந்த சில நிலத்தையும் விலை கொடுத்து வாங்கி, கோவில் (மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் இடைகளும்) இப்பொழுது பெரிதாகி விட்டது.

அதே போலத்தான், அவன் வேலை பார்க்கும் நிலத்திலுள்ள கருங்கல்லும் நுண்துளை கொண்டது. ஆனால் அது பால் குடிக்க வில்லை. அந்தக் கழிப்பறையில் அவ்வப்போது அவன் காணும் 'ஒரு துளி' அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. ஒரு முறை வார இறுதி நாள் அவன் பணிமனைக்கு வரவேண்டிய சூழ்நிலை. வீட்டில் ஏதோ இடித்துக் கட்டும் வேலை நடக்கிறது. அடுத்த வாரத்திற்குள் அவன் முடித்துக் கொடுக்க வேண்டிய அறிக்கை இன்னமும் முடியவில்லை. அமைதியாக இருந்து வேலை செய்ய வேண்டும் என்பதால் அவன் பணிமனைக்கே வந்து விட்டான். யாரும் இல்லை. அந்த அமைதியை அவன் எந்த மயானத்திலும் கேட்டதில்லை. அப்படி ஒரு அமைதி. ஆள் அரவம் மட்டுமல்ல எந்த ஒரு இயந்திரமும் இயங்காமல் இருந்ததால் அந்த அமைதி. வந்தவுடன் கழிப்பறைக்கு சென்று பார்த்தான். சுத்தமாக இருந்தது. எந்தத் துளியும் இல்லை. மனதில் ஏதோ ஒரு மகிழ்ச்சி. ஒரு நீண்ட பெருமூச்சுடன் சிறுநீர் கழித்தான்.... களித்தான். கைகளைக் கழுவி விட்டு அவனது மேசையில் இருந்து ஒரு மணிநேரம் அவனது அறிக்கையில் மூழ்ந்தான். யாருமே பணிமனையில் இல்லை. எந்தத் தொந்தரவும் இல்லை. மற்றவர் குடும்பக் கதைகளோ, அவர்கள் எங்கு விடுமுறைக்கு சென்றார்களோ என்று கேட்க வேண்டிய அவசியமில்லை. மீண்டும் ஒரு அழைப்பு வந்தது. கழிப்பறைக்குச் சென்றவன் மனம் "பகீர்" என்றது. அவனைப் பல விடயங்கள் சலனப்படுத்தாது. பயம் என்பது அவனுக்குத் துளி கூட கிடையாது என்று அவனது பாட்டி கூட அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவன் கண்ட 'ஒரு துளி'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை ஆட்டம் காட்ட வைத்து விட்டது.

அவனது பாட்டி சொன்ன ஒரு கதை அவனுக்கு ஞாபகம் வந்தது. ஒருவனுக்கு கருவாடு என்றாலே பிடிக்காதாம், அந்த மணம் அவனுக்கு ஏதோ செய்யுமாம். ஒரு நாள் அவன் வீட்டில் கருவாடு மணக்கிறது என்று தாயிடம் கேட்டால், "உன்னால்தான் நான் கருவாடு சமைப்பதில்லை, வீட்டில் ஒரு துண்டு கூடக் கிடையாது" என்று சொல்லிவிட்டாராம். அயலவர் அனைவரின் வீட்டிலும் கேட்டாயிற்று. அதே பதில்தான். வெறுப்படைந்த அவன், வெளியே சென்று நல்ல காற்றோட்டமுள்ள ஒரு வெளியில் போய் அமர்ந்தால் அங்கும் அதே வயிற்றைக் குமட்டும் கருவாட்டு மணமாம். தற்செயலாக அவன் மூக்கின் மேல் விரலை வைத்தால், அவன் மீசையில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு சிறு கருவாட்டுத் துண்டு கையில் வந்ததாம். அந்தக் கதையை சொல்லிவிட்டு அவன் பாட்டி சொல்வார், "முதலில் உன் மேல் பிழை இருக்கிறதா என்று யோசி, அதுக்குப் பிறகு மற்றவனைப் பற்றி கவலைப் படலாம்" என்று. தான் ஏன் அதை மறந்து விட்டிருந்தேன் என்று இப்பொழுது சிந்திக்க ஆரம்பித்தான்.

கதை இத்துடன் முடிந்து விடவில்லை. தானும் குற்றம் புரிந்தவன் என்ற எண்ணம் அவன் கழிப்பறைக்குச் செல்லும் போதெல்லாம் தோன்றும். எனவே அவன் மிகக் கவனமாக அந்த வெள்ளைச் சட்டிக்குள் மட்டுமே செல்லக் கூடியதாக அவன் சிறுநீர் கழித்தான். சில மாதங்கள் ஓடியிருக்கும். ஒரு நாள் அவன் அவதானத்துடன் தனது வேலையை கழிப்பறையில் செய்து கொண்டிருக்கிறான். கவனச் சிதறல் இல்லையென்றால்தான் வேறு எதுவும் சிதறாது என்பது அவனுக்குத் தெரியும்.

ஒரு சொட்டு தண்ணீர், மேலேயிருந்து – அவன் நின்றிருந்த தளத்தின் மேல் தளத்திலிருந்து விழுந்து அவன் வலது கையில் படிந்தது. மேல் நோக்கிப் பார்த்தான். அவன் தலைக்கு நேர் மேலே இருந்த இடம் மற்றைய இடங்களை விட சற்று ஈரலிப்பாக இருந்தது.

○



"தண்பதப் பெருவழி" நூலில் மற்றோர் சிறுகதையின் காட்சிப்படிமம்.

21.07.2024 அன்று யாழ்.பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 36வது ஆண்டுவிழாவில் நிகழ்வு முழுவதையுமே அரங்க வடிவத்தில் நிகழ்த்தப்பட்டது.

சிறுகதைகள் சிலவற்றின் காட்சிகள் 1-2 நிமிடங்களில் இசைப்பின்னணியுடன் மேடையில் வீழ்த்தப்பட்டன

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# இடுமணல்

- நெற்கொழுதாசன் -

அடுத்த மூன்று நிமிடத்திற்குள் வேலைத் தளத்தில் நிற்கவேண்டும். உள்ளங்காலிலிருந்து சூடுபரவி உடலெங்கும் பரபரப்பைத் தூண்டியது. மெட்றோவின் திரையைப் பார்த்தாள். இன்னும் இரண்டு நிறுத்தங்கள் இருந்தன. எப்படியும் நேரம் கடந்துவிடும். வாசலில் பல்லைக் காட்டிக்கொண்டு மூஸா நிற்பான். அவன்தான் வேலையிடத்து மேற்பார்வை நிர்வாகி. தன்னைவிட்டால் பெரிய ஆள் இல்லையென நினைப்பு அவனுக்கு. ஆப்பிரிக்காவிலிருந்து நேரே இங்கேயே வந்தவன்போல கத்தித்தான் பேசுவான். மூஸாவைப் பார்க்கும் போதெல்லாம் பனைமரம்தான் நினைவுக்கு வரும். அவ்வளவு உயரம். அது மட்டுமில்லாமல், குறுகிச் சடைத்து அங்குமிங்குமாய் குத்தித் தெறித்தபடி தலை-மயிர் இருந்ததாலும் பார்த்த முதல்நொடியே இவனென்ன பனைமாதிரி வளர்ந்து இருக்கிறான் என தோன்றிவிட்டது. பின் அதுவே அவனாக, அவளது நினைவுகளில் படிந்துபோய்விட்டது. இப்போதெல்லாம் அவனை அதே இயல்புடன் ஏற்றுக்கொள்ளப் பழகிவிட்டாள். அவனுக்கும் என்ன பிரச்சனையோ என தனக்குள் சொல்லிக் கொள்வாள். இருந்தாலும், அவளையும் மீறி சிலநாள்களில் கோபம் வந்துவிடும் அப்போது பனைமரமெனத் தனக்குள் திட்டிக்கொள்வாள்.

அடுத்தது அவள் இறங்கவேண்டிய இடம். கைகளை உதறி தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டாள். மெட்றோவின் கதவு திறந்தவுடன் பாய்ந்து இறங்கி ஓடவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டாள். இன்றாவது மூஸாவிடம் ஏச்சு வாங்காமல் உள்ளே போய்விடவேண்டும் கடவுளே என்று தனக்குள் சொல்லிக்கொள்ளவும் மெட்றோவின் கதவு திறக்கவும் சரியாக இருந்தது. ஒரு காலைத் தூக்கிவைத்தாள். கால்வைக்க இடம் கிடைத்ததுதான் தாமதம் எட்டித் தாவியொரு பாய்ச்சல். தரையில் நின்றாள். மெட்றோவுக்குள் எழுந்த சலசலப்பை என்ன ஏதென்று பார்க்கவில்லை. ஓடத்தொடங்கினாள். இரண்டு எட்டலில் நான்கு படிகளென ஏறி வெளியில் வந்துநின்று மூச்சு வாங்கினாள். அதிகாலை மெல்லிய கூதலையும் மீறி நகரம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. அருகிலிருந்த பேக்கரியிலிருந்து எழுந்த வாசம் மூக்கினூடாக வயிற்றுக்குள் நிரம்பிக்கொண்டது. சற்றுத் தொலைவிலிருந்த நடைபாதைக் கடவைக்குச் செல்லுமளவுக்கு பொறுமையில்லாதவளாக நின்ற இடத்திலிருந்தே பிரதான வீதியை கடந்தாள்.

வேலைத்தளத்தின் வாசலை அடைந்தபோது மூஸா யாருடனோ தொலைபேசியில் வாக்கு வாதப்பட்டுக் கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் ஒப்பிடமிடவேண்டிய கணினியை நீட்டி 'காலை வணக்கம்' என்றான். பின் அவளைக் கவனிக்காமல் தொலைபேசியில் தொடர்ந்தும் சத்தமாக பேசியபடியே இருந்தான். அநேகமாக மறுபக்கத்தில் மாலியில் இருக்கும் அவனது இரண்டாவது மனைவியாகத்தான் இருக்குமென எண்ணியபோது அவளையறியாமலேயே உதட்டுக்குள் ஒரு குறும்புப் புன்னகை மின்னலென ஓடி மறைந்தது.

மூஸாவுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி இங்கேயும் இரண்டாவது மனைவி மாலியிலும் இருந்தார்கள். இங்கு இருக்கும் மனைவி பதிவு செய்து திருமணம் செய்துகொண்ட மனைவியல்ல. பெரியவர்களுக்கும் மதத்திற்கும் கட்டுப்பட்டு அந்த இணைப்புக்குள் சேர்ந்து வாழ்பவள். மாலியில் இருக்கும் இரண்டாவது மனைவி சட்டப்படி பதிவு செய்துகொண்ட உறவாக இருந்தது. மூஸா எந்தவொரு வஞ்சகமும் இல்லாமல் தன் குடும்பப் பிரச்னைகளை அறிமுகமானவர்களுக்குச் சொல்வான். அப்படி சொல்லும்போதே மாலியில் இருக்கும் மனைவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பிரியத்துடன் இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும். காரணத்தைக் கேட்டால், அவள் பாவம் சின்னப்பிள்ளை சமூகக் கட்டாயத்துக்காகக் கட்டி வைத்துவிட்டார்கள். தவிர இங்கிருக்கும் மனைவிமாதிரி ஜீன்சும் ரி சேட்டும் போட்டுக்கொண்டு தலையை மூடாமல் திரிவதில்லை. அதனால் அவளைக் கொஞ்சம் அதிகமாகப் பிடிக்குமென்று சொல்லியிருக்கிறான்.

மூஸா தொடர்ந்துசத்தமாகப்பேசியபடியே இருந்தான். நேரத்தைப் பார்த்தாள் ஆறுமணி ஐந்து நிமிடமெனக் காட்டியது. நல்லவேளை வந்துவிட்டேன். இன்னும் பிந்தியிருந்தால் அரைமணிநேரச் சம்பளத்தை வெட்டியிருப்பாங்கள் எனத் தனக்குள் திருப்திப் பட்டுக்கொண்டாள். பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் வேலை செய்யும் இடமென்பதால் நடந்தபடியே சுற்றிலும் பார்த்தாள். தான் ஓடிவந்ததை யாரும் கண்டுபிடித்து விடாமலிருக்க தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். வேலை செய்யவேண்டிய பகுதியை நோக்கி நடையிலேயே களைப்பைப் போக்கிவிடுபவள்போல ஆறுதலாக நடக்கத் தொடங்கினாள். ஆடைமாற்றும் பகுதிக்கு சென்று ஆடை மாற்றிவிட்டு, வழமைபோல அங்கிருக்கும் கஃபே இயந்திரத்தை நோக்கிச் சென்றாள். அந்த இருந்த இடம் வெறுமையாக இருந்தது. கஃபே இயந்திரம் இருந்ததற்கான அடை யாளமாக நிலத்தில் பிணைக்கப்பட்டிருந்த இரும்புச் சலாகைகளில் நான்கு ஆணிகள் நீண்டிருந்தன.

அங்கே வேலை செய்பவர்களுக்கு கஃபே இலவசமாகியிருந்தது. முதல் இரண்டு நாட்கள் கூடவந்தவர்களின் ஆக்கினைக்காக அடித்து எடுத்தவள் கடும் கசப்பான அதன் சுவையால் உடனேயே ஊற்றிவிட்டாள். பால்குடி மறக்காத பிள்ளைக்கு வேப்பெண்ணை கொடுக்கிற கதை யாக இருக்கு என வாய்விட்டு சொன்னாள். பிறகு மற்றவர்களைப் பார்த்து கொஞ்சம் கொஞ்சமாக குடிக்கப்பழகி இப்போது வேலை தொடங்க முதல் கஃபே குடிக்காமல் வேலை செய்யமுடியாதளவுக்கு மாறிவிட்டாள். இயந்திரம் பழுதான நாட்களில் வேலைக்கு வந்ததும் இயந்திரத்தை பார்த்துவிட்டு ஒரு செல்லத்தட்டு தட்டிவிட்டுத்தான் வேலைக்கு செல்வாள். வேலைமுடிந்தது வரும்போதும் இயந்திரத்தைத் திருத்தி விட்டார்களா எனப் பார்த்துவிட்டுதான் செல்வாள். அவசர அவசரமாக வெளிக்கிட்டு மெட்றோ எடுத்துச் சரியான நேரத்திற்கு வேலைக்கு வந்துவிடவேண்டுமென ஓடிவருவதில் இருக்கும் பதற்றம் அந்த கஃபேயை குடித்தவுடன் காணாமல் போய்விடும். வேலை செய்யப் புதிதாக ஒரு உற்சாகச்சூடு உடலெங்கும் பரவும். அதேபோல வேலை முடிந்து கிளம்பும்போதும் ஒரு கஃபேயை பிடித்துக்கொண்டுதான் புறப்படுவாள்.

ஆறுமணி தொடக்கம் ஒன்பதுமணிவரை வேலை. ஒருமாடியில் இருக்கும் பத்து அறைகள் மற்றும் நான்கு கழிப்பறைகளைச் சுத்தம் செய்யவேண்டும். கூட்டித்துடைத்து குப்பை வாளிகளைச் சுத்தம் செய்துவிட்டு, நான்கு கழிப்பறைகளையும் கழுவி மருந்து மற்றும் துடைக்கும் பேப்பர்களை மாற்றிவிடவேண்டும். இறுதியாக வாசனை மருந்தை தெளித்துவிடவேண்டும். கஷ்டமான வேலையென்றில்லை. ஆனால் ஆறுமணி வேலைக்கு ஐந்துமணிக்கு ரெயின் எடுக்கவேண்டும். ஐந்து மணிக்கு ரெயின் எடுக்கவேண்டுமென்றால் அதிகாலை நான்குமணிக்கு எழுந்திருக்க வேண்டும். அவளைப் பொறுத்தவரை நான்குமணிக்கு நித்திரையால் எழும்புவதென்பது வயிற்றுவலிபோல. மூன்றுநாள்களுக்கு தாங்கமுடியாத அந்த வலியை எல்லா நாளும் சுமந்துகொண்டு திரிவதுபோல என்பாள். வேலைமுடிந்து பிரதான வாசலைக் கடந்ததும் ஒரு பெருமூச்சு வரும். அந்த விடுபடல் ஊஞ்சலில் ஆடும்போது வயிற்றில் எழும் குளிர்மையை ஒத்திருக்கும். மாதமுடிவில் வங்கியில் வந்துசேரும் சம்பளத்தொகையை ஊர் காசிற்கு மாற்றிப் பார்ப்பாள். இரண்டு லட்சம்வரும் என வாய்விட்டு சொல்லிக்கொள்வாள். அந்தவொரு கணம் நடையில் பெருமிதம் தொற்றிக் கொள்ளும்.

இதுவரை அவளது வேலை குறித்து யாரும் எதுவிதமான குற்றச்சாட்டுகளும் சொன்னதில்லை. வேலைக்கு வந்த முதல் நாளில் அந்த வேலைத்தளத்தின் மேற்பார்வையாளர் என்னென்ன வேலைகளை எப்படியாகச் செய்ய வேண்டுமெனக் காட்டிக்கொடுத்திருந்தார். அந்த ஒழுங்கில், அவரைவிட சுத்தமாக வேலைகளை செய்து முடிப்பாள். ஒருதடவை மேசை மீதிருந்த ஒருதொகுதி ஆவணங்களைக் கொஞ்சம் இடம்மாற்றி வைத்துவிட்டுத் துடைத்திருந்தாள். மறுநாள் அந்த அலுவலகப்பெண் அவளை அழைத்து மேசைமீதிருக்கும் பொருள்களை இடம்மாற்ற வேண்டாம் என்று அன்பாகச் சொன்னதுதான் கடைசியாக நிகழ்ந்தது. அதன்பின் அவதானமாகத் தனது வேலைகளை செய்துமுடிப்பாள். நான்கு கழிவறைகளையும் சுத்தம் செய்யும்போது என்றாவது ஒருநாள் ஒருதடவையாவது இந்தக் கழிவறைகளில் நிம்மதியாக இயல்பாக இருந்து மலம் கழிக்கவேண்டும் என்று நினைப்பாள். அதிகாலை எழுந்து வருவதால் அந்தநேரத்தில் காலைக் கடன்களை இயல்பாக முடிக்க இயலுவதில்லை. மதியம் வீடுசென்று குளிக்கும் முன்பாக அவற்றை செய்துகொள்வாள். ஆரம்ப நாட்களில் சிரமமாக இருந்தாலும் பழக்கத்தில் கொண்டுவந்த பின் அது ஒரு பொருட்டாக இருந்ததில்லை.

சிலநாட்களில் வயிறு கனத்து அவஸ்தையாகிவிடும். அந்த நாட்களில் அவசர அவசரமாக கழுவி சுத்தப்படுத்தும் கழிப்பறைகளில் ஒன்றைப் பாவித்துக்கொள்வாள். அதுவும் இருப்பதுவும் எழும்புவதுமாகத் தான் நிகழும். கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நேரமெடுத்தாலும் செய்யவேண்டிய வேலை ஏதாவது குறையில் நின்றுவிடும். ஒன்பதுமணிக்கு வேலை தொடங்கவென ஊழியர்கள் வந்துவிடுவார்கள். பிறகு அவர்களின் முகங்களில் முழிக்கவேண்டும். அதைவிட அவர்கள் ஒவ்வொருவருக்கும் காலைவணக்கம் சொல்லவேண்டும். அவளுக்கு இருக்கும் பெரிய பிரச்சனை காலைவணக்கம் சொல்வதும் நலமா என்று கேட்பதும் தான். அவர்கள் கேட்கும்போது, பதில் சொல்லி, திரும்ப நீங்கள் நலமா என்று கேட்கவேண்டும். அப்படிக் கேளாமல் இருந்தால் அது பண்பாட்டுக் குறையாக கொள்ளப்படும். கைகளை இறுகப் பற்றிக் குலுக்க வேண்டும். கண்களைப் பார்த்து வணக்கத்தைச் சொல்லவேண்டும் இதெல்லாம் வேலைக்கு வந்த புதிதில் அவர்கள் சொல்லிக்கேட்டுப் பழகிக்கொண்டதுதான். முதலில் ஏனோதானோ என்று வணக்கம் சொல்லிக்கொண்டவள் இப்போது கொஞ்சம் தன்னை மாற்றிக் கொண்டாள் . அவளுடன் வேலை செய்பவர்கள் யாராவது தனக்கு வணக்கம் சொல்லாவிட்டால் அதையொரு குறைபோல மனதில் கொள்ளவும் பழகிவிட்டாள். இருந்தும், அவர்களுக்கு தான் வணக்கம்சொல்வதை மட்டும் ஒரு விலக்கத்துடன் தான் நிகழ்த்தினாள்.

அங்கு வேலைசெய்யும் பெண்களைப் பார்க்கும் போதெல்லாம், ஊரில் இருந்திருந்தால் நானும் இப்படி ஏதாவதொரு அலுவலகத்தில் நோகாத வேலை தானே செய்து கொண்டிருந்திருப்பேன் என்ற எண்ணம் தோன்றும். அந்த எண்ணமே அவளுக்கு அவர்களிடம் நெருங்கிப் பழகவும், உரையாடவும் தடையாகிவிடும். இங்குவந்து ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளி யாக வேலைசெய்வதென்பதும், அவர்களின் வயதை உடைய தான் அவர்களை மாதிரி வாழ இயலவில்லையேயென்ற ஆதங்கமும் சேர்ந்து தாழ்மையுணர்வுக்குள் தள்ளி, தான் அவர்களில் வித்தியாசமானவள் என்று வெளிக்காட்டுவதற்காக தன்னியல்பான விலக்கமொன்றை உருவாக்கி விட்டிருந்தது. இருந்தாலும் இந்த வேலைகுறித்த முறைப்பாடுகள் எதுவும் அவளிடமில்லை. இயலாமையால் தேர்ந்தெடுத்த இந்த வாழ்க்கை குறித்த முறைப்பாடு நிறையவே இருந்தது. எண்ணங்கள் தீய்ந்து கருகித் திடுக்கிடும் கணங்கள் பலதடவைகள் நிகழ்ந்திருந்தன. சாம்பல்நிற இலைகளுடன் பூக்களும் நிறைந்து நிற்கும் மாமரமொன்றின் கீழ் உதிர்ந்துகிடக்கும் மாம்பிஞ்சுகள் இந்த நாள்கள் என எண்ணிக்கொள்வாள். உள்ளெழும் வெம்மை தாளாது கண்களின் ஓரங்களில் துளிர்க்கும் நீரை மெல்ல மறைத்துக்கொள்வாள்.

ஆயிரம் கனவுகளுடன் வந்து இறங்கியவளுக்கு வீடு சிறைபோல மாறத்தொடங்க வேறுவழியின்றித் தனக்கு இறக்கை தேடிக்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானாள். இவற்றுக்கெல்லாம் என்ன காரணமெனத் தேடினால் எதுவுமே இல்லை என்பதுபோலத் தோன்றும். அண்ணனுடைய வீட்டில் இருந்தாலும், சிலசமயங்களில் சோறு பழுதாகிவிடும். ஊரில் இருந்தகாலத்தில் உடலுக்கு இயலாத நாள்களில் இரண்டு மூன்று தடவைகள் குளிப்பாள். அந்த நாள்களிலெல்லாம் அண்ணன்தான் கிணற்றில் தண்ணீர் அள்ளித்தருவான். யார் என்ன சொன்னாலும் அவள் என் தங்கை என்று தோள்களை சேர்த்து அணைத்துக்கொள்வான். என் தங்கை நாச்சியாள்தான் இவள் என்று சொல்லி சிரிப்பான். பாடசாலையில் எல்லாப் பருவங்களிலும் நடக்கும் நாடகங்களில் அவன்தான் பண்டார வன்னியன். ஒருநாள் கச்சான் தோட்டத்தில் பூரான் கடித்துவிட, இரவுமுழுவதும் தன்மடியில் தலையை வைத்து உறங்கவிட்டு தடவிக்கொடுத்துக் கொண்டே விழித்திருந்தவன். ஏன் இப்படி மாறிவிட்டான். அவளுக்குப் புரியவில்லை. இப்போதெல்லாம் நாளில் ஒருதடவை குளிக்கும்போதே சத்தம் அதிகமாகிறது. தன் மனதுக்குள் இடைவெளி உருவாகாமல் பார்த்துக்கொள்ளப் பெரும் சிரத்தை எடுத்தாள். சில சந்தர்ப்பங்கள் அவளையும் மீறி வார்த்தைகளாகி விடுவதுமுண்டு. அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் தண்ணிக்காசு, கரண்டுக்காசு, வீட்டுக்காசு என்ற கதை களே அதிகம் வரும். வீட்டுக் காசுக்காவும், தன்னை பிரான்சுக்கு அழைத்த காசுக்காவதும் அண்ணன் ஓயாது ஓடிக்கொண்டிருப்பதை பார்த்துக் கவலைகொள்வாள். தமையன் இல்லாத சமயங்களில் அண்ணி அவளிடம், கொண்ணர் வரமுதல் ஓடிப்போய் வடிவாகக்குளியுங்கோ என்று சொல்லுவார். அந்த நேரத்தில் இருவரும் முகம் பார்த்துச் சிரித்துக் கொள்வார்கள்.

எல்லாவற்றுக்கும் வேலை ஒரு தீர்வாக அமையுமென்று நம்பினாள். தேடினாள். பலரிடம் பல தடவைகள் சொல்லிவைத்தாள். ஊரில் ஒன்றாகப் படித்த நண்பியின் கணவன் மூலம் முதல் வேலை கிடைத்தது. வேலைக்கு போகப்போவதை அண்ணியிடம் சொன்னாள். மறுநாள் அண்ணன், வேலையொன்றுக்கும் போகத்தேவையில்லை. கல்யாணம் கட்டுமட்டும் நான் சோறு போடுவேனென்று போய்ச் சொல்லு என அண்ணியிடம் சொல்வது கேட்டது. அது அவளது தன்மானத்தைச் சீண்டியது. நாச்சியாள் வெள்ளைக்காரனோடு போர்தான் செய்வாள் ஓடிப்போகமாட்டாளென்று சொல்லுங்கோ அண்ணி, என்று கூறினாள். வேலைக்குச் செல்லும் முடிவில் உறுதி யானாள்.

பிரான்சில் முதல் வேலை கிடைத்தது. போனாள்.
அது ஒரு தமிழரின் பலசரக்கு கடை. ஒருசாக்கு மண் கிடைத்தால் அதனை யாழ்ப்பாணத்து மண்ணெனக் கூறி நிறுத்து வியாபாரம் செய்துவிடும் வல்லமை கொண்ட முதலாளி. ஆனால் பேச்சு முழுவதும் ஈழம், போராளிகள், சீமான், தலைவர், விடுதலை என்றுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

இருக்கும். கடைக்குள் இரண்டு உண்டியல்களை பில் மிசினுக்கு பக்கத்தில் வைத்திருந்தார். ஒன்று ஈழத்திற்கு மற்றது நாம் தமிழர் இயக்கத்திற்கு. எந்த உண்டியலுக்குள்ளும் அவர் காசு போட்டதில்லை. அங்கு வேலைக்கு சேர்ந்து ஐந்தாம் நாளே வேலையை விட்டுவிட்டாள். அந்த சாமானை எடுங்கோ, இந்த சாமானை அடுக்குங்கோ என்று சொல்லிக்கொண்டு இருந்தவர், இதையும் பிடியுங்கோ என்று ஜீன்ஸை இறக்கி காட்டிய நாளில் அதிர்ந்துபோய் தராசுக் கல்லை தூக்கிக் காட்டி இதை வைத்துக்கட்டு என்றுவிட்டு அழுகை யுடன் வெளியேறியவள்தான். அதுபற்றி யாரி டமும் சொல்லவில்லை. சொல்லியும் எதுவுமாகப் போவதில்லை. மாவீரர்நாள் முதல் கொண்டு அனைத்து நிகழ்வுகளிலும் புகுந்து வேலையும் செய்யும் கை அவரது. தலைவர் வந்தால் கணக்கு காட்டுவோமென்பவர் கைவைக்கும்படி கேட்கிறார் என யாரிடம் சொன்னாலும் எதுவும் நடக்கப்போவதில்லை. ஏதும் கதைத்தால் தமிழ் ஏரியாவில் வைத்து கையைப் பிடித்து இழுக்கவோ, அடிக்கவோ, முட்டையால் எறியவோ ஆட்களை ஏவிவிடவும் கூடும்.

இரண்டாவது வேலை லாசெப்பல் பகுதியில் இருந்த தையற்கடை ஒன்றில் கிடைத்தது. பெரிதாகச் சன நடமாட்டமற்ற பகுதியில் இருந்த கடை அது. எந்த நேரமும் தமிழர்கள் வயது வேறுபாடின்றி பியர்ப் போத்தலுடன் இருப்பார்கள். விழுந்து கிடப்பார்கள். பாதையெங்கும் மூத்திர மணமும், காணுமிடமெங்கும் வெற்றிலைத் துப்பலும் நிறைந்து கிடக்கும். நாள்தோறும் இவர்கள் குடித்துக் கூக்குரலிடும் சத்தத்தாலும் மூத்திர வாடையாலும் அவதிக்குள்ளான மூதாட்டியொருவர் மூத்திரம் பெய்துகொண்டிருந்தவர் மீது, தாயைத் திட்டும் பிரெஞ்சுப் பழமொழியொன்றைச் சொல்லி கொதிதண்ணீரை ஊற்றிவிட்டார். மறுநாளே முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி, அந்த இடமெங்கும் மூத்திரம்பெய்து கலவரம் செய்தார்கள். இரண்டுநாள் நீடித்த அவர்களின் கலவரத்தைப் பொலீசும் நகரசபையும் தலையிட்டு முடிவுக்கு கொண்டுவந்தார்கள். சிலரைக் கைது செய்து வழக்கையும் பதிவு செய்தார்கள். அந்த மூதாட்டிக்கு வேறு ஒரு இடத்தில் அரசவீட்டு திட்டத்தில் வீடு ஒன்றை வழங்கினார்கள். 'மூத்திர வழக்கு' என தமிழர்கள் மத்தியில் பிரபல்யமான அந்த விடயம் பரிசியன் உட்பட பல செய்தித் தாள்களிலும் வெளியாகி இருந்தது. அதன் பிறகு வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் பாரிசுக்கு வந்தால் அந்த இடத்தைப்பார்க்கப்போவதும் அந்த இடத்தில் நின்று போட்டோ எடுத்து பகிர்வதுமாக இருந்தது. போட்டோ எடுக்கும்போது கால்களுக்கு கீழே மூத்திரம் ஓடிய அடையாளம் இருக்கத் தக்கதாகவே எடுப்பார்கள். கூடவே 'எங்கட ஏரியாவில நிற்கிறேன். நண்பர்கள் சந்திக்கலாம்' எனப் பெருமையாக ஒரு வரியும் எழுதுவார்கள்.

பொலீஸ் அந்தப்பகுதியில் பெரிதாக நடமாடுவதில்லை. ஒதுக்குப்புறமான அந்த இடத்தில் இருக்கும் போதைப் பாவனையாளர்களைக் கலைத்துவிட்டால் அவர்கள் போக்கிடமின்றி நகருக்குள் வந்துவிடலாமென எண்ணியிருக்கலாம். அல்லது அவர்கள் ஒரே இடத்தில் கூடுவதால் கண்காணிக்க இலகு என நினைத்திருக்கலாம். அல்லது கைது செய்தால் மீண்டுமொரு மூத்திர வழக்கு ஆகிவிடக்கூடுமென அஞ்சியுமிருக்கலாம். மூத்திரமணத்தையும் அவர்களின் கூச்சலையும் சகித்துக்கொண்டு வேலைக்குப் போனவள், குடித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் இடுப்பிலிருந்த ஜீன்ஸை விலக்கி உள்ளாடையை பிடித்துக்கொண்டு, யட்டிக்கு டபுள்அடி தையல் போட எவ்வளவு என்று கேட்டதுதான் அன்றிலிருந்து அந்தவேலையையும் விட்டுவிட்டாள். அந்தக் கணத்திலிருந்து, தமிழர்களிடத்தில் அவர்களுக்கு அறுபது வயதோ இல்லை இருபது வயதோ இனி வேலை செய்வதில்லை என்ற முடிவையும் சேர்த்து எடுத்துக்கொண்டாள்.

அதன் பிறகு கிடைத்ததுதான் இந்த கிளீனிங் வேலை. அதனை முழு ஆர்வத்துடன் தொடங்கினாள். கூடவே இன்னுமொரு மூன்று மணித்தியாலங்கள் வேலை கிடைக்குமென்றால் எல்லாப் பிரச்சனை களையும் சமாளித்துக் கொள்ளலாமென்ற ஒரு அங்கலாய்ப்பு மட்டும் அப்பப்ப மனதில் தோன்றி மறையும். மற்றபடி தானுண்டு தன் வேலையும் வீடும் அறையும் உண்டு என்ற நிலைமையில் தான். சமைய லறையில் அண்ணிக்கு உதவிசெய்வதுகூட எப்பவாவதுதான். தன்னைவிட வயது குறைந்ததாலோ என்னவோ அண்ணி என்று அழைத்தால் சங்கடத்துடன் நெளிந்துகொண்டு வருவதைப் பார்க்க அவளுக்குப் பகிடியாக இருக்கும். அதற்காகவே அண்ணி அண்ணி என்று சும்மாவெல்லாம் அழைத்துக்கொள்வாள். அண்ணியின் சிணுங்கல் தான் அவளுக்கு ஒரு பொழுதுபோக்கு. அண்ணி தன்னிடமொரு இடைவெளியைக் கொண்டிருப்பதை உள்ளூர ரசித்தாலும் சிறிய நெருடல் இருக்கத்தான் செய்தது. அவளைக் காணும் சில சந்தர்ப்பங்களில் தனக்குமொரு கல்யாணம் ஆகிவிடும் என்ற நினைவு மனதுக்குள் மலர்ந்து பெருகுவதைக் கண்டுவிடக்கூடாது என்று கண்களை மூடிக் கொள்வாள்.

அதிகாலை அமைதியைக் குழப்பாமல் கிளம்பிச் சென்று பத்துமணிக்கு வீடு வந்து அழைப்பு மணியை அழுத்தும்போது அநேக நாட்களில் மேசையில் சூடாக தேநீர் இருக்கும். அந்த வேளையில் ஓடிச்சென்று அண்ணியை அணைத்துக்கொள்ள வேண்டும்போல இருக்கும். அடக்கிக்கொள்வாள். அன்பை வெளிக்காட்ட ஒரு தயக்கம். அண்ணிக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றை வாங்கிக் கொடுத்திருக்கிறாள். அதில் ஒன்று தோடு. அதை எப்போதும் விருப்பதோடு அணிவதை கவனித்திருக்கிறாள். மற்றப்படி ஒரு சதமேனும் அண்ணனோ அண்ணியோ கேட்டதுமில்லை. கொடுக்க முயன்றாலும் வாங்கியதுமில்லை. தான் வேலைக்குப் போவதால் யாரிடமும் கையேந்தாமல் இருப்பதைக் குறித்து ஒரு பெருமிதம் அண்ணிக்குள் இருப்பதை உணர்ந்திருக்கிறாள். அந்த ஒன்றுக்காகவே வேலைக்குப் போகவேண்டும் என்ற உந்துதல் பெருகும்.

என்ன சுகவீனம், உடல் அலுப்பு என்றாலும் இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்துத்தான் லீவு எடுக்காது வேலைக்குச் செல்வாள். அங்கு ஒரு கஃபேயை அருந்தியதும் கிடைக்கும் தெம்போடு வலி வேதனை தடுமாற்றம் எல்லாம் மறந்து வேலையை செய்யத் தொடங்கிவிடுவாள். அந்த பழக்கதோசத்தில் கஃபே எடுப்பதற்காகச் சென்றவள் நீட்டிக்கொண்டிருந்த நான்கு ஆணிகளைக் கண்டதும் இயலாமையால் கைகால்கள் எல்லாம் சோர்ந்துபோய் சுருண்டுகிடக்கும் குழந்தையைப்போல தன்னை உணர்ந்துகொண்டாள். சோர்வுடன் நின்றவளை அவதானித்த மரியம், அருகில் வந்து 'என்ன மகளே உடல் நலமில்லையா' என்று பரிவுடன் கேட்டாள்.

மரியம். நோர்மண்டிக் பிரதேசத்தை சேர்ந்த பெண்மணி. அந்த அலுவலகத்தில் நீண்டகாலமாக தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருப்பவள். வயது அறுபதை எட்டிவிட்டது. கடந்தவருடம்வரை 'அடுத்த வருடத்துடன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுவிடுவேன். பின்னர் சொந்த ஊருக்குச் சென்று அங்கு நிம்மதியாக வாழ்ந்து செத்துப்போவேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தவள். அரசாங்கம் ஓய்வு பெறும் வயதெல்லையை உயர்த்திய காரணத்தால் மேலதிகமாக நான்கு வருடங்கள் வேலை செய்யவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகி வேலைசெய்து கொண்டிருப்பவள். அங்கு வேலைசெய்யும் தமிழர்கள், வேலையிடத்தில் என்ன தேவையென்றாலும் மரியத்திடம்தான் போய்த்தான் உதவி கேட்பார்கள். மரியம் அவர்களையும் அழைத்துச்சென்று அவர்களது தேவைகளை, பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பாள். அதனால் மரியம் எல்லோருக்கும் மாரியம்மாவாகிப் போனாள். அதே பழக்கத்தில் அவளும் எங்கிருந்தாலும் தேடிச்சென்று மரியம்மாவைப் பார்த்து வணக்கம் சொல்லிவிட்டுத்தான் வேலையை ஆரம்பிப்பாள். அப்படிப் போகும்போது மரியம்மாவுக்கும் ஒரு கஃபேயை எடுத்துக்கொண்டுதான் செல்வாள். நாள் தவறாமல் கஃபே எடுத்துவருவது யாரும் செய்திருக்காதவொரு விடயமாக இருந்தது மரியத்திற்கு. எத்தனையோ பேருக்கு உதவிகளைச் செய்திருந்தாலும், அவர்கள் நன்றி சொன்னதோடு நின்றுவிடாமல் தங்கள் வீட்டு விசேடங்களுக்கு அழைத்திருந்தாலும், விசேட தினங்களின் உணவு-களை பகிர்ந்துகொண்டாலும் அதையெல்லாம் கடந்து மரியத்திற்கு அவளிடத்தில் பரிவு கலந்த அன்பு உருவாகியிருந்தது. காலையிலேயே அவளது வருகைக்கும், கொண்டுவரும் கஃபேக்காகவும் மரியமும் காத்திருப்பாள்.

மரியத்தின் கேள்வியை உள்வாங்கினாலும், உள்வாங்காதவள்போல கஃபே இயந்திரம் இருந்த இடத்தைக் காட்டினாள். மரியம் இயந்திரம் இல்லாமலிருப்பதை முதலே அவதானித்திருந்தாலும் அவள் சுட்டிக் கட்டியபோதுதான் எதோ ஒன்றை இழந்துவிட்டதுபோலவொரு பரபரப்பு எழுந்து அடங்கியது. அவளையும் அழைத்துக்கொண்டு அலுவலகத்திற்குள் நுழைந்தாள். அங்கே அலுவலர்களுக்கான கஃபே இயந்திரம் இருந்தது. அதில் அலுவலர்கள் தங்களின் அடையாள அட்டையைப் பொருத்தித்தான் கஃபேயைப் பெற்றுக்கொள்வார்கள். முழுமையான அந்த இயந்திரத்தைப் பார்த்துவிட்டு நேரே அலுவலகத்தின் மேலதிகாரியின் அறைக்குள் சென்று அவரைச் சந்திக்க அனுமதி கோரினாள் மரியம்.

உங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது ஒரு சலுகைதான். அதை நிறுவனம் நிறுத்திவிட்டது. உங்களுக்கு வழங்கப்பட்ட வேலைக்கான நியமன கடிதத்தில் இந்தச் சலுகை குறிப்பிடப்படவில்லை. ஆகவே என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்ற பதில்தான் கிடைத்தது மரியத்திற்கு. இதற்குப் பிறகு ஒன்றுமே செய்யவியலாது என்பதை மரியமும் அவளும் புரிந்துகொண்டனர். அவள் நிமிர்ந்து மரியத்தைப் பார்த்தாள். மரியம்மாவின் கண்களில் ஒருதுளி நீர் திரண்டிருந்தது. அது தனக்கானதில்லை. எனக்கானது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். இந்த அரசாங்கமும் எங்களைத்தான் சுரண்டுகிறது. நீங்களும் எங்களைத்தான் சுரண்டுகிறீர்கள் என்றபடி மேலதிகாரியின் அறையிலிருந்து வெளியேறினாள் மரியம்.

மரியத்தைப் பின்தொடர்ந்து வெளியேறியவள் வெளியில் வந்ததும் மரியத்தை இறுக்கி அணைத்துக்கொண்டள். அந்த அணைப்பில் எதோ பகிர்ந்து கொள்ளமுடியாத செய்தி இருப்பதாக இருவரும்உணர்ந்துகொண்டனர். பிறகு சந்திப்பதாகச் சொல்லிவிட்டு விலகி, தான் வேலைசெய்யும் பகுதிக்கு சென்றவள் நேரேயே கழிப்பறைக்குள் சென்றாள். எல்லா நாட்களையும் விட மிக ஆறுதலாக கழிப்பறையைச் சுத்தம் செய்தாள். எப்போதுமில்லாத அமைதியாக அதன்மீது அமர்ந்து கொண்டாள்.

❍

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்

- புனிதா கணேஸ்வரன்
(இங்கிலாந்து)

# பூப்பும் பறிப்பும்



புலம் பெயர் தேசத்தின் செல்வச் செழிப்பையும் தமிழ் வளத்தையும் பறைசாற்றும் விதத்தில் எம்மவரின் தமிழ் நூல்கள் உலகெங்கணும், ஒவ்வொரு மாதமும் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. இதற்கு லண்டன் மாநகரும் அங்கு வாழும் தமிழ் மக்களும் விதிவிலக்கல்லர். இவ்வகையறாவாய், இருபத்து இரண்டு சிறுகதைகளின் தொகுப்பாக, அண்மையில் வெளிவந்த நூலே பூப்பும் பறிப்பும் என்னும் நூல். அந் நூலினைக் கற்றறிய விரும்பி, தின்னப் பொசிப்புள்ளவர்களுக்குத் திண்ணைக் கப்பிலே தேன் என்னும் முதுமொழிக்கிணங்க கையிற் கிடைத்த நூலின் மின்பிரதியை ஆவலுடன் விழிகொண்டு மேய்ந்தேன். அதுவும் அச்சிறுகதைகளை எழுதித் தொகுத்தவர் இலங்கையின் பிரபல எழுத்தாளர் அகஸ்தியரின் மூத்த மகள் நவஜோதி என்பதால் கூடுதலான ஆர்வத்துடன் அதன் பக்கங்களில் என் புலனை நுழைத்தேன்.

வழமையான அணிந்துரை, முன்னுரை என்பனவற்றைக் கடந்து கதைகளுள் கவனத்தைக் குவித்தேன். பதிப்பிலே இருந்த அச்சுப் பிழைகள் ஆங்காங்கு செய்வன திருந்தச் செய்தல் என்னும் கைங்கரியத்தைத் தொலைத்த சந்ததியினை நொந்து கொள்ள வைத்தது என்னவோ உண்மை. அச் சினத்தையும், நோதலையும் தாண்டிக் கதைகளுள் நுழைந்த பொழுது குமுகாயத்திற்கு அவசியமான பல அறிவுரையாம் மாணிக்கப் பரல்கள் கதைச் சலங்கைகளுக்குள் கிண்கிணியாய் ஒலித்துக் கொண்டிருந்தன!. பெண்ணெனப் பிறந்தவள் படும் பாடுகள் அக்குவேறு ஆணிவேறாகக் கூறப்பட்டிருந்தன. பேசாப் பொருள்கள் பலவற்றைத் துணிவுடன் கதாசிரியை உணர்வுபூர்வமாகக் தன் கதைகளால் பேசியிருந்தார். பேதை (0-12 வயது), பெதும்பை (12-24 வயது), மங்கை (24-36 வயது), மடந்தை (36-48 வயது), அரிவை (48-60 வயது), தெரிவை (60-72 வயது), பேரிளம்பெண் (72 வயதிற்கு மேல்) என ஒவ்வொரு பருவத்துப் பெண்கள் படும் துயர்களை, அதனால் ஏற்படும் உடல், உளம் சார்ந்த பாதிப்புகளை இலங்கைப் பேச்சுத் தமிழில் இதயத்தை நெகிழ வைக்கும் வகையில் படைத்திருக்கிறார்.

வெளிநாட்டு வாழ்க்கைகளில் பெண்கள் படும் அவலங்களைப் புட்டுபுட்டு வைத்திருக்கிறார் நவஜோதி. தமிழறிவை ஊட்டிக் குழந்தைகளை வளர்க்காத மடந்தை ("மம்மி அந்த அக்கா பாவம்"), வெளிநாட்டு மாப்பிளையை நம்பி வந்து அவதிப் படும் மங்கை ("திக்குத் தெரியாத காட்டில்"), சாதி-களை இன்னும் மறவாத மடந்தையர், இராணுவத் தடை முகாமிற்குள்ளால் தப்பி வெளிநாடு வந்து அண்ணி என்னும் அரிவையின் தடைமுகாமில் உழன்ற மடந்தை ("இங்கேயும் ஒரு தடைமுகாம்"), தனிமைப் பட்ட வாழ்விலே தகித்துக் கொண்டிருக்கும் பெதும்பை ("போர்ண் மவுத்"),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி வாழ்வு வாழும் லண்டன் மாநகரின் மடந்தையர் அரிவையர் ("மறு அவதாரம்"), பணம் வந்ததும் பழையதை மறக்கும் அரிவையர், தெரிவையர் ("காசு வந்ததும்"), ஒரு பெதும்பையின் புறத்தோற்றத்தை வைத்து அளவிட்டுப் புறந்தள்ளி அவள் வேதனையை அறியாத அரிவையர் கூட்டம் ("நீலச்சட்டை பொம்மை"), அமைதியாகத் தோற்றும் ஆசிரியரின் ஆணாதிக்கத்திற்குப் பலியான அரிவை ( "ஹரன் மாஸ்டர்"), இனக்கலவரத்தில் சக இனத்தின் மீது நம்பிக்கை இழந்த பெதும்பை ("பிந்துனுவேவ"), நான்கு தலைமுறைகளாக ஒடுக்கப் பட்ட தேயிலைத் தோட்ட வாழ்விலிருந்து கிடைக்கும் ஏமாற்றம் சுமந்த மங்கை ("நான்கு தலைமுறைகள்") எனப் பெண்களைப் பற்றியே கதைகள் சுற்றிச் சுழல்கின்றன. இங்ஙனம் இருபத்திரண்டு கதைகள் இருப்பினும், சில நெஞ்சை இறுகப் பிசைந்து விடுகின்றன.

"முதுமையின் வலிகள்" என்ற கதை, விதவையான பேரிளம் பெண்ணொருவர் வெளிநாட்டிற்கு வருவிக்கப் பட்டு, தன் மகளாலேயே தாக்கப்பட்டு உடற் காயங்களுடனும் மனக் காயங்களுடனும் வாழும் உதவியற்ற கையறுநிலையைக் கைசுட்டிக் காட்டுகிறது. ஒருவேளை அந்தத் தாய் தன் ஊரிலேயே இருந்திருந்தால் இத்தகைய மனக் காயங்களைச் சுமந்திருப்பாளோ என எண்ண வைக்கிறது. இப் புலம் பெயர்ந்த மங்கைகளும், மடந்தைகளும் சொந்தத் தாயையே தாக்கி ஊறு விளைவிக்கக் கூடியளவிற்கு மன முறிவுகளை ஏன் கொண்டிருக்கிறார்கள்? என்பதையும் தேட வைத்திருக்கிறது.

இந்நூலின் தலைப்பான "பூப்பும் பறிப்பும்" என்ற கதை, வேலியே பயிரை மேய்ந்த கசப்பான உண்மையைக் கக்கி விட்டுள்ள கதை, வீட்டிற்கு முதியோன் என்று மதிக்கப்பட்டு, அக்கிழடனிடம் நம்பி தனித்து விடப்பட்டு, கிழடனின் காமப் பசிக்குப் பலியான பேதைப் பருவ இளந்தளிர் ஒன்றின் வதை நிலையை வாசிக்கும் போது இப்படியும் உறவுகள் நடந்து கொள்வார்களா? என இரத்தம் கொதிக்கிறது, ஒப்படைத்துச் சென்ற தாயின் நம்பிக்கையைத் தகர்த்த அந்த தந்தை என்னும் முது கிழவனை என்ன செய்வது?. முதுகிழவனின் காமப்பசியை என் சொல்வது?. அறியாப் பேதையை எதுவும் செய்து விடலாம் என்று துணிந்த கிழத்தை அக் கணமே கொலை செய்துவிட்டிருக்கக் கூடாதா என ஒரு தாயாக மனம் தவிக்கிறது.

"தளிருக்குள் தளிர்" என்ற கதையும் அத்தகையதே. இக் கதைகள் வெறும் கதைகள் அல்ல. பெண்களுக்கு, பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தவர்களுக்கு, தங்கள் பெண் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் முன்பு அல்லது வளர்த்தெடுக்கும் போது கட்டாயமாக வாசிக்கப்பட வேண்டிய நூல். ஜெயகாந்தனின் கதைகள் போன்று வாழ்க்கைப் பாடங்களைப் போதிப்பவை. மனித நடத்தைகளை அறிவதற்கும், விசாரிப்புகளை ஊக்குவிக்கவும், உளவளத்தை வளர்த்து விடுவதற்கும் இந் நூல் பெண்களுக்கும், பெண்களோடு துணையிருக்கும் ஆண்மக்களுக்கும் இன்றியமையாத வாசிப்பு நூல் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

○




ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தவிர்க்கமுடியாத ஆளுமை அ.யேசுராசா. நல்ல விமர்சகராக அறியப்பட்டவர். பல நூல் களுக்குச்சொந்தக்காரர். அவர் நடாத்திய 'அலை' சிற்றிதழ் ஈழ இலக்கியத்திற்குக் காத்திரமான பங்கினை ஆற்றியிருக்கிறது.

சினிமாத் துறையில் மிகுந்த ஆர்வமுள்ளவர். தரமான படங்களை அறிமுகம் செய்வதிலும், சினிமா தொடர்பான கற்றலை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்தும் இயங்கிவருகிறார். அவரது ஆளுமையைச் சிறப்பிக்கும் முகமாக இலக்கியவெளி அமைப்பு அவரது படைப்புலகம் தொடர்பான இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றினை 27.07.2024 அன்று ஏற்பாடு செய்திருந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ப் பெயர்கள்

க. செயபாலன் - கனடா

தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பெயர்களில் ஒருவரின் பெயர் முல்லை என்றோ இனியவன் என்றோ காணும்போது அப்பெயர்கள் நல்ல தமிழ்ப் பெயர்களாகவும் பொருள் பொதிந்தவையாகவும் இருக்கின்றனவே என்று பலரால் பாராட்டப்படுவதைக் காண்கிறோம்.
மாறாக, வசந்த், குரோசி போன்ற பெயர்கள் குறை கூறப்படுவதையும் காண்கிறோம். மேலும், ஆராதனா, லெனின், டேவிட், நியூட்டன் என்பவை பிற மொழிப் பெயர்கள் என்று சித்தரிக்கப்படுவதையும் காண்கிறோம். இந்த நிலைமையையும் அதனால் ஏற்படும் உளைச்சல்களையும் எப்படி அணுகலாம் என்று பார்ப்போம்.

ஒருவரின் பெயரை இன்னொருவர் அறியும்போது அந்தப் பெயருக்குப் பொருள் என்னவாக இருக்கும் என்று சிலருக்கு ஒரு கேள்வி தோன்றும். தமிழில் ஏற்கனவே இருக்கும் ஒரு சொல்லினால் ஆன பெயராக இருந்தால் மகிழ்வோடு நல்ல பெயர் என்று புளகாங்கிதம் அடைகிறோம். அதாவது முல்லை என்று ஒரு பெண்ணிற்குப் பெயர் இருந்தால், ஆகா, இது முல்லைச் செடியின் பெயர், நல்ல தமிழ்ப் பெயர் என்றுணர்வோம்.
இப்படிப்பட்ட பெயர்கள் தமிழ் மக்களுக்கு இருப்பது நன்றே.
உதாரணமாகச் சில பெயர்கள் இங்கே.
கொடி, அழகி, மலையன், மழையன், அருவி, முருகன், வெயிலோன், பகலவன்.

இத்தகைய பெயர் சூட்டும் பழக்கம் எங்களிடையே அதிகரிக்க வேண்டும். பொருளோடும், அழகோடும், மொழி இலக்கணத்தோடும் இப்பெயர்கள் இருக்கும் போது எல்லோருக்கும் மகிழ்ச்சி, திருப்தி.

ஆனால், இப்பொழுது, தமிழில் பொருள் உள்ள பெயர்கள் தவிர வடமொழி இலக்கியங்களிலும், புராணக் கதைகளிலும் காணப்படும் பெயர்களைத் தமிழர் வைத்துக்கொள்ளும் வழக்கம் மிக அதிமாக உள்ளது.

உதாரணத்திற்கு ஒரு பெயரைப் பார்ப்போம். லக்ஷ்மன்.

பல தமிழர்கள் வைத்துகொள்ளும் ஒரு பெயர். இந்தப் பெயர் இராமாயணத்தில் ஒரு பாத்திரமாகும். ஆனால், வடமொழியைத் தவிர்த்தும், தமிழ் மரபைப் பேணியும், தமிழ் தொய்வடையாமல் இருக்கவும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் லக்ஷ்மனா என்றிருந்த பெயரை இலக்குவன் என்று தமிழில் தான் உருவாக்கிய கம்பராமாயாணத்தில் குறிப்பிட்டார். அதாவது அந்தப் பெயரை தமிழ்ப் பண்பாட்டிற்குக் கொண்டு வந்தார். இது போன்றவையே சீதை (சீதா), இராமன்(ராமா), அனுமான்(ஹனுமன்), விபீடணன்(விபீஷணா), இராவணன்(ராவணா), சனகன்(ஜனகன்), சானகி (ஜானகி).
இப் பெயர்களின் பொருளை வடமொழி இலக்கியத்தில் இருந்து கொடுத்தாலும், தமிழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகப் பெயர் வைக்கும் முறையை கம்பர் எடுத்துக் கையாண்டிருக்கிறார்.

இலக்குவன் என்ற பெயரைக் கொண்ட ஒரு தமிழரிடம் அதற்கான பொருள் ஏதுமுண்டா என இன்னொருவர் கேட்கலாம். அதற்கான பதில்கள், இவ்வாறாக இருக்கலாம்.

1. பொருள் ஏதும் இருக்கலாம் ஆனால் எனக்குத் தெரியாது.
2. இலக்கு என்றால் தமிழில் அடையவேண்டிய ஒரு நிலை, அப்படிப் பார்க்கும்போது இலக்கு என்பதிலிருந்து பொருள் பெறலாம்.
3. இது லக்ஷ்மனா என்ற வடமொழிப் பெயரிலிருந்து தமிழாக்கஞ் செய்யப்பட்ட பெயர், அம்மொழியில் பொருள் இருக்கலாம்.
4.வடமொழியில் லக்ஷ்மனா என்றால் அதிட்டமுடையவன் என்று பொருள். அதையே தமிழாக்கி இடப்பட்டுள்ளது.
5. மேலும் ஏதாவது ஒரு மொழியில் இதற்கு நெருக்கமான ஒரு சொல்லைக் கொண்டும் பொருள் சொல்லலாம்

இந்தப் பதில்கள் எல்லாமே அவரவர் விளக்கத் திற்கமைய ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையே. ஆக, பொருள் வேண்டுவோருக்குப் பொருள் தரலாம், வேண்டாதவர்களுக்கு அது தமிழில் எழுதப்பட்ட ஒரு சொல். தமிழின் தரம் குறையாமல் இருக்கும் ஒரு பெயர்.

ஆனால் இதையே லக்ஷ்மன் என்று தமிழில் எழுதிப் புழங்கும் போது தமிழின் சுவையும், தரமும் இழக்கப்படுகின்றன. இந்த நிலை தவிர்க்கப்படலாம்.

ஆனால், ஒருவருக்கு இடப்படும் பெயருக்குப் பொருள் இருக்கத்தான் வேண்டுமா?

ஒருவரை அடையாளப்படுத்த அவருக்கு இடப்படும் பெயர் அவரின் மொழியில் தவிர்க்கப்பட வேண்டிய சொல்லாக இருக்காத நிலையில் எந்தவொரு பெயரும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே.
உதாரணமாக் கதரன், மோரியன், மதினி, விபுலி, தகாதி, தேமன் போன்றவை.
இவை தமிழ் மொழியின் எழுத்துக்களை ஒன்றுகூட்டி, தமிழிற் சொற்கள் அமைய வேண்டிய அடிப்படை இலக்கணத்தை மீறாமல் உருவாக்கப்பட்டவை. இவற்றிற்கு வெளிப்படையாகப் பொருள் தெரியவுமில்லை. இருந்தும் இவற்றை நாம் மக்களுக்குப் பெயராகக் கொள்வதில் தவறேதும் இருப்பதாகத் தெரியவில்லை. சுசி, சசி, நிசா போன்ற பெயர்களில் பொருள் ஏதும் வெளிப்படையாகத் தெரியவில்லை.

இன்னொரு உதாரணமாக, ஒருவருக்குக் குண்டர் என்று பெயர் இருந்தால், அதற்கான பொருளாக, குண்டு என்ற தமிழ்ச் சொல்லைக் கொண்டு உருவாக்கிய பெயர் என்று சொல்லலாம். இதையே ஒரு நோர்வே மொழிப் பழக்கம் உள்ளவர் சிந்திக்கையில் வாடிக்கையாளர்கள் (kunder) என்ற நோர்வே சொல்லுக்குத் தொடர்புபடுத்தலாம்.

இன்னொரு பெயர் மணி என்பதைக் கருத்தில் எடுப்போம். தமிழில் ஓசையெழுப்பும் மணி அல்லது தானிய மணிகள் என்று பொருள் கொடுக்கலாம். வடமொழியில் ஆபரணம், மாணிக்கக் கல் போன்று பொருள். ஆங்கிலத்தில் சொல்லிப் பார்த்தால் "காசு". இப்படியாகப் பல பொருள்களை நாம் எடுத்துக் கூறலாம்.

பொருள் தேடாவிட்டால், தமிழில், மணி, அது ஒரு பெயர் அவ்வளவே. மாணி கூட ஒரு பெயராகலாம்.

ஆக, ஒருவரின் பெயருக்குப் பொருள் தேடப் புறப்பட்டால் எத்தனை மொழிகளில் புலமை உள்ளதோ அத்தனை பொருள்கள் காணப்படலாம். எனவே, பெயருக்குப் பொருள் தேடல் என்பது அத்துணை அவசியமானதில்லை.

இவ்விடத்தில் ஒரு வேற்று மொழி உதாரணத்தைக் கூறலாம். பின்லாந்தில் உள்ள ஒருவரின் பெயர் "தாவி" (Taavi). அப்பெயரை விளக்கமுடியுமா என அவரிடம் கேட்டபோது, அவர் சொன்னார்.
David என்ற கிறிஸ்தவப் பெயரின் பின்லாந்து மொழி வடிவமே அது என்று. இது தமிழிலும் முன்னர் தாவீது என்று இருந்தது நினைவுக்கு வருகிறதே.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலிய நூலிலும் குரானிலும் அவற்றின் மூல நூலிலிருந்த பெயர்கள் நல்ல தமிழாக்கஞ் செய்யப்பட்டு எழுதப்பட்டிருந்தன. காலப்போக்கில், தமிழர்கள் அவற்றை மறந்து வருகின்றனர். விவிலியம், பைபிள் என்று எழுதப்படுகிறது.
ஏசுநாதரின் பெயர் மூல நூலில் ஏசு என்று ஒலிக்கும். உரோமன் எழுத்துக்களில் எழுதப்பட்டபோது Jesus. இது அனேகமான ஐரோப்பிய மொழிகளில் Yesus என்றே உச்சரிக்கப்படும். பின்னர் ஆங்கிலத்தில் அது ஜேசு ஆகிப் பின்னர் ஜீசஸ் என்றும் ஆகி விட்டது.

பிற மதங்கள், பிற பண்டைய இலக்கியங்கள், புராணங்களில் இருந்து எடுக்கப்பட்ட பெயர்கள் தவிர, இப்பொழுது பிற மொழிப் பெயர்கள் தமிழர் இட்டுக் கொள்வதையும் காணலாம்.
உதாரணமாக் ஜேசன், ஜோன்சன், அண்டனி, வில்லியம், ரோசா, ரோஜா
இவற்றில் கிரந்தம் தவிர்க்க விரும்பினால், சேசன்/ யேசன், சோன்சன்/யோன்சன் என்று எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோசாவை உரோசா என்று தமிழ் இலக்கணம் கெடாமல் எழுதலாம்.

ஆனால் இவையெல்லாம் அவசியமற்றவை என்றும் தமிழில் காணப்படும் கிரந்தம் உட்பட்ட எல்லா எழுத்துகளாலும், தமிழ் இலக்கணத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமலும் பெயர்களை தேவையானவர்கள் எழுதிக்கொள்ளலாம். தடையுமில்லை குற்றமுமில்லை. ஆனால் தமிழ் நன்றாகத் தொனிக்காது.

ஆங்கிலத்தை அப்படியே தமிழில் எழுத வேண்டும் என்று அவசியமில்லை. இதேபோல், தமிழ்ப் பெயரையும் அப்படியே ஆங்கிலத்தில் எழுதவேண்டியதுமில்லை. தமிழ்ப் பெயரை ஆங்கில உச்சரிப்புக்கு ஏற்ப நாங்கள் எழுதி வைத்துகொண்டிரும்போது, அதை, பிரெஞ்சு மொழிக்காரரோ அல்லது பின்லாந்து மொழிக்காரரோ வாசிக்கும்போது அது அவர்கள் மொழி உச்சரிப்பில் வேறு பெயராகிவிடும்.

இப்போது, எண் கணிதச் சாத்திரம் பார்ப்பவர்கள், புதிதாகப் பெயர் வைக்கும் போது, ஆங்கிலத்தில் அப் பெயரை எழுதிக், குறிப்பிட்ட ஒரு எண் கிடைக்கும் வகையில் எழுத்துக்களை மாற்றியோ, இரட்டிப்பாக்கியோ அல்லது ஓசையில்லா எழுத்துக்களை உள்வாங்கிய ஒரு பெயரை உருவாக்கி விடுகிறார்கள். அந்தப் பெயரை ஆங்கிலத்தில் வாசிக்கும் போது அது நாம் நினைத்து வைக்கப்பட்ட பெயர் போல் இருப்பது கடினமே.

உதாரணமாக, பிரதாபன் என்று பெயரை வைக்க விரும்பியவர், ஆங்கிலத்தில் எழுதும் போது இப்படியெல்லாம் வரலாம்.

Pirathaapan, Prathaapan, Prathapan, Pirathaphan, Piirathapan, Pirathaban, Prathabhan, Pradhaban, Brathapan, ....

இந்தப் பெயர்களை ஆங்கிலத்தில் வாசிக்க முயல்வோர் பெருந் தொல்லைக்காளாவார்கள்.

இன்னொரு பெயரான, கோகுலன் என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இதை நாம் ஆங்கிலத்தில் எழுத முயலும்போது Koghulan என்று தமிழ் உச்சரிப்புக்கு அமைய எழுதலாம். ஆனால் வடமொழிப் பரிச்சயம் உள்ளவர்கள் அதை Gokulan என்று எழுதவும் உச்சரிக்கவும் முயலும்போது பிரச்சனை வந்து விடும். இந்தச் சிக்கல் பல பெயர்களில் உண்டு. சில எடுத்துக்காட்டுகள் இதோ.

கணேஸ் - Kanes - Ganesh
பாலா - Pala - Bala
கிரிதரன் - Kiritharan - Giritharan
காயத்திரி - Kayathri - Gayathri

எனவே தமிழரின் பெயரைத் தமிழில் எழுத வேண்டும். தேவைப்படும்போது, பிற மொழியாளருக்கு அவர்களின் மொழியையும் அதன் உச்சரிப்பு முறையையும் அறிந்து தமிழ்ப் பெயர்களை அவற்றிற்கு ஏற்ப எழுதிக் காட்டலாம்.

நோர்வேயில் வாழ்ந்து வரும் தமிழர் உதயன். அவர் நோர்வேயில் இருக்கும்போது, தன் பெயரை Oddean என்றே எழுதுவார். நோர்வே உச்சரிப்பில் அது உதயன் போல் ஒலிக்கும்.

ஆக மொத்தத்தில், ஒருவரின் பெயர் என்பது அவரின் மொழிக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றவாறு இருப்பது சாலச் சிறந்தது. மற்றவருக்கேற்ப பெயர்களை அமைக்க எண்ணுவது தவிர்க்கப்பட வேண்டும்.


ஜீவநதியின் 365 ஆவது வெளியீடாக சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்துடன் இணைந்து வெளியிடும் கோகிலா மகேந்திரன் அவர்களால் தொகுக்கப்பட்ட “தணபதப் பெருவழி” 22 சோலைக்குயில்களின் கதைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படம் 01

# மாம்பழத்து வண்டு

- வடகோவை வரதராஜன்

'மாம்பழத்து வண்டு, வாசமலர்ச் செண்டு'
இந்த பாடலைக் கேட்கும் போது எல்லாம் எதுகை மோனைக்காக கவிஞர்கள் எப்பேர்ப்பட்ட அறிவியல் உண்மைகளைச் சிதைத்து, பாடல்களை எழுதுகிறார்கள் என்பது எனது சிந்தனையில் வரும் .

கவிதையில் மிகைக் கூற்றும் சொற்களின் முரணும் ஏற்புடையதுதான். ஆனால் அதில் ஓரளவாவது பொருத்தப்பாடு இருக்க வேண்டும். மாம்பழத்து வண்டுக்கும் வாசமலர் செண்டுக்கும் என்ன பொருத்தப்பாடு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் பாடலைக் கேட்கும் போது அழகிய பொன்னிற வண்டொன்று உங்கள் மனதில் தோன்றுகிறதல்லவா. ஆனால் நிஜத்தில் அப்படி அல்ல. மாம்பழவண்டு அசிங்கமான தோற்றமுடைய அழுக்கு நிறமுடைய ஓர் வண்டாகும் .

நீங்கள் உண்பதற்காக மாம்பழத்தை வெட்டும் போது, மாம்பழத்தின் விதையில் ஓர் கறுத்தத் துளையிருப்பதையும் அத்துளை வழியாக ஓர் வண்டு வெளியே வருவதையும் பார்த்திருப்பீர்கள் . பழம் முழுமையாக இருக்க இவ் வண்டு எப்படி உள்ளே சென்றது என்று எப்போவாவது யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா .?

மாம்பழ வண்டு அல்லது மாம்பழ வித்து துளைப்பான் என்று தமிழிலும் Mango beetle என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் இதன் விஞ்ஞானப் பெயர் Sternochetus magiferace என்பதாகும். இந்த மாம்பழ வண்டு, மாமரம் பூத்து காய்கள் உருவாகும் தருணத்தில் மாம்பிஞ்சில் தன் முட்டைகளை இடுகிறது. காய் பெருத்து வளர முட்டையிடப்பட்ட துவாரம் மூடிக்கொள்கிறது.
முட்டையில் இருந்து வெளி வரும் அணங்குப் புழு நேரடியாக மாவித்தினுள் சென்று வித்தின் பருப்பை உண்டு நிறைவுடலியாகிறது. இந்த நிறைவுடலி வண்டே, நாம் மாம்பழத்தை நறுக்கும்போது வெளியே வருகிறது .

சரி, நாம் மாம்பழத்தை வெட்டாமல் விட்டால் இந்த வண்டு எப்படி வெளியே வந்து தன் சந்ததியைப் பெருக்கும் என்னும் கேள்வி உங்களுக்கு எழுவது நியாயம்தான். கவலையே வேண்டாம் .
மா பழுத்து தானாக அழுகும் போது இவ்வண்டு சுயமாக வெளியேவந்து கொள்ளும் .

சரி, மாவித்துனுள் வண்டு காணப்படும் மாம்பழங்களைச் சாப்பிடலாமா கூடாதா?
சாப்பிடலாம் .
மாவித்தினுள்மட்டும்தான் இந்த வண்டு இருந்து வித்தின் பருப்பை உண்கிறது. பழத்தின் சதையை உண்பதோ அங்கு கழிவுகளை இடுவதோ இல்லை .

சரி, இந்த மாம்பழத்து வண்டைக் கட்டுப் படுத்துவது எப்படி ?
உங்கள் வீட்டுத் தோட்டத்தில், மாமரத்தைக் கவ்வாத்து பண்ணி உயரம் குறைவாகப் பராமரிப்பீர்களாக இருந்தால், மாம்பிஞ்சு உருவாகும் போது அதற்கு ஓர் கடதாசிப் பையைக் கட்டி விடுவதன் மூலம் நிறைவுடலி வண்டு, மாம்பிஞ்சில் முட்டையிடுவதைத் தடுக்க முடியும்.

நம்ம ஊர் மாமரங்கள் எல்லாம் இருபதடி உயரமானவை அல்லவா. இந்த உயரத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்க்கும் ஒவ்வோர் காய்க்கும் பை கட்டி விடுதல் சாத்தியமானதா ?
சாத்தியமே இல்லை .
அப்போ இதற்கு என்னதான் தீர்வு ?

பகுந்துண்டு பல்லுயிர் ஓம்பும் தமிழர் அல்லவா நாங்கள். மாம்பழ வண்டு மாவின் வித்தை உண்ணட்டும், நாம் அதன் பழத்தை உண்போம் என்ற பெருந்தன்மைப் போக்கை கடைப் பிடிக்க வேண்டியதுதான் .

மாம்பழங்களில் காணப்படும் இன்னுமோர் பீடை மாம்பழப் புழு. உண்மையில் இது வெண்ணெய் நிறத்தில் குண்டுசிப் பருமன் உள்ள அழகான புழு .
இப்புழு காணப்படும் மாம்பழங்களை யாரும் உண்ணமாட்டார்கள் . பழம் காயமின்றி முழுமையாக இருக்க இப்புழு எப்படி உள்ளே நுழைந்தது என்பது ஆச்சரியமான விடயம்தான் .

இப்புழுவின் நிறைவுடலி பழ ஈ (fruit fly) எனப்படும் ஒருவகைக் குளவி ஆகும். இக்குளவி தன் ஊசி போன்ற கொடுக்கால் மாம்பழத்தில் துளையிட்டு அங்கே முட்டைகளை இடுகிறது. முட்டையில் இருந்து வெளிவரும் அணங்குப் புழு மாம்பழத்தின் சதையை உண்டு நிறைவுடலியாகிறது .

பொதுவாக மாமரத்திலேயே பழுக்கும் பழங்களில் இப்புழு காணப்படுவதில்லை. பிடுங்கிப் பழுக்க வைக்கும் பழங்களிலேயே இப்புழு காணப்படுகிறது.
சிறு வயதில் கள்ள மாங்காய் அடிக்கும் போது மாம்பால் உங்கள் முகத்தில் பட்டுப் புண் வந்தது உங்கள் பலருக்கு ஞாபகம் இருக்கும் .

மாம்பால் என்பது ஒருவகை அமிலமாகும். மாங்காயின் காம்பை உடைக்கும் போது, மாங்காயில் உள்ள அமிலம் சீறி அடித்து எம் தோலில் பட்டு எரி காயங்களை உருவாக்குகிறது. மாம்பால் எனப்படும் இந்த அமிலம்தான் இயற்கையாக மரத்தில் பழுக்கும் மாம்பழங்களை பழ ஈயில் இருந்து பாதுகாக்கிறது .

முற்றிய மாங்காய்களைப் பறித்து நாம் பழுக்க வைக்கும்போது அமிலத்தன்மையான இந்த மாம்பால் வடிந்து விடுகிறது. அமிலம் என்னும் அரண் இல்லாத , பறித்து பழுக்க வைக்கும் முற்றிய மாங்காயில் பழ ஈ எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் முட்டையிட அது பொரித்து அணங்குப் புழு தோன்றுகிறது .

மாம்பழத்தில் புழு உருவாவதைத் தடுப்பதற்கு, பறித்த மாங்காயைப் பழ ஈ நெருங்காமல் தடித்த பொலித்தீன் கொண்டு மூடி விடவேண்டும் .

உண்பதற்காக நீங்கள் வெட்டிய மாங்காயில் பழ ஈயின் புழுக்கள் காணப்பட்டால் அப்பழத்தை வெறுமனே வீசி எறிந்து விடக்கூடாது. அப்பழத்தை ஆழக் குழி தோண்டிப் புதைக்கவேண்டும் . இல்லையேல் எறிந்த மாம்பழத்தில் உள்ள புழுக்கள் வளர்ந்து நிறையுடலியாகி பல நூறு பழ ஈக்கள் உருவாக்கி மேலும் பல மாம்பழங்களைச் சேதப்படுத்தும் .

நல்லது மாணவச் செல்வங்களே மாம்பழத்து வண்டைப் பற்றியும், மாம்பழப் புழுக்களையும் இக்கட்டுரையில் பார்த்தோம் . அடுத்த கட்டுரையில் காட்டுமுயல் பற்றியும் வீட்டுமுயல் பற்றியும் தெரிந்து கொள்வோம்.



படம் 02

படம் 01 பழ ஈ எனப்படும் fruit fly
படம் 02 - மாம்பழ வண்டு எனப்படும் mango beetle

26 / 07 / 2024


**வளர் சிறுகதைப்போட்டி 2024**

**பரிசளிப்பு நிகழ்வு**

**காலம் : 07.09.2024**
சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி

**இடம் : மகாஜனக்கல்லூரி**
தெல்லிப்பழை

அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்.

**- வளர் குழுமம் -**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ ...

பழுத்த பழம் ஒன்று
பச்சைக்காய் ஒன்று
மரக்கிளையின் ஒரே காம்பில்

பூம் பூம் மாடு
தலையை ஆட்டியதும்
கிடைக்கின்றன வசதிகள்

குடிகார கணவன்
கண்டுபிடிக்க முடியவில்லை
சம்பள நாளன்று

கடன் வாங்கிய அரிசி
கருணையுடன் பசியாறின
பாரதி முற்றத்து குருவிகள்

முதியோர் பள்ளி
கட்டாயமாக்க வேண்டும்
இலவச பகலுணவு

இருளை விழுங்கி
ஏப்பம் விடுகிறது
எரியும் விளக்கு

உச்சிச் சுடர்
உஷ்ணத்தில் வியர்த்து வழிகிறது
மெழுகுவர்த்தி

அரசமரம்
அமைதியான புத்தருக்கு
பழுத்த இலைத்தூவல்

அழுத்தும் துயரம்
விலகி ஓடும்
அழுகையில் கண்ணீர்

நிற்பது எல்லாம்
நடப்பது அனைத்தும்
பறப்பது பூராவும் ஹைக்கூ

Dr. **ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்
இலங்கை

**ஒரு நல்ல மருத்துவர்** நிபுணத்துவம், இரக்கம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் கலவையாகத் திகழ்கிறார். "எந்தத் தீங்கும் செய்யாதே" (Do No Harm) என்ற கொள்கை, மருத்துவத்தின் முதல் விதியாக விவரிக்கப்படுகிறது. மருத்துவப் பயிற்சி (Practicing Medicine) செய்யும் போது, மருத்துவருக்குரிய நெறிமுறைக் கோட்பாடுகள் (Medical Ethics) மருத்துவர்களைத் தங்கள் நோயாளிகளின் நல்வாழ்வு மற்றும் கண்ணியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் முடிவுகளை எடுப்பதில் வழிகாட்டுகின்றன. நெறிமுறை மதிப்புகளை நிலைநிறுத்துவதன் மூலம், மருத்துவர்கள் தங்களுக்கும் தங்கள் நோயாளிகளுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்கிறார்கள், இது வெற்றிகரமான சிகிச்சை விளைவுகளுக்கு அவசியம். மருத்துவத் தொழிலில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கும், இரக்கமுள்ள, சமத்துவமான மற்றும் உயர்தர சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதற்கும் ஒரு வலுவான நெறிமுறைக் கட்டமைப்பு முக்கியமானது.

மருத்துவசேவை மகத்தானது. மருத்துவர்களும் மகத்தானவர்களே! எங்கும் விதிவிலக்குகள் உண்டு. விதிவிலக்குகளைப் பொதுவிதியாகக் கொள்ளமுடியாது. பொருள்தேடும் இன்றைய உலகில், தான் இலவசமாகக் கற்ற கல்வி தன் நாய்நாட்டிற்கே பயன்படவேண்டும் என்ற உயர் நோக்கோடு இலங்கையில் பணியாற்றும் வைத்தியர்கள் மேலும் மரியாதைக்குரிவர்கள். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என கடமையாற்றிய பல வைத்தியர்கள் வணக்கத்திற்குரியவர்கள்.

இவ்வகையான மனிதர்களை எண்ணும்போது எனது அயலவரான மருத்துவர் சி. சிவசுப்ரமணியம் அவர்கள் நினைவுக்கு வருகிறார். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டிற்கு உதாரணம் அவர். கூடவே கண்டிப்பையும் சேர்த்துக்கொள்ளலாம்.

பொதுவாகவே, எப்போது ஓய்வுபெற்று உடலாறலாம் என்று வயதை எண்ணிக் காத்திருக்கும் இன்றைய உலகில் மருத்துவர் சிவசுப்ரமணியம் (ENT) அவர்கள் 60 வயதில் அரசாங்கக் கட்டாய ஓய்வு எடுத்த பின்பும் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

யுத்த காலத்தில் போதிய மருத்துவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் இல்லாத நிலையில் அவர் பணியாற்றினார். அதிலும், இலவசமாகப் பணியாற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியானவர்கள் பல துறைகளிலும், எளிய மக்களின் வலியை அறிந்து, தன்னலமற்ற சேவை செய்து , நிறைகுடத்து விளக்காக வாழ்ந்து மடிகிறார்கள்

– மாயோன்

யாழ்ப்பாண சர்வதேச
புத்தகத் திருவிழா - 2024
ஆகஸ்ட்
9
10
11
JAFFNA INTERNATIONAL BOOK FESTIVEL
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா
JIBF 2024
நேரம் - 10.00am - 08.00pm
யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்
( கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில்)
ORGANIZED BY
CCIY
No 63 - NALLUR CROSS ROAD, NALLUR, JAFFNA
info@cciy.lk
070 366 3603 - 021 222 6608/9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8

மனோவின்

# நெடும் பயணம்

...தொடர்...

'இவர் ஒரு அகதி. வேலை இல்லை. கிளறுவங்கள் தானே! இனி ஆராவது காட்டியும் குடுப்பாங்கள்...?"

'என்ன.., காட்டிக்குடுப்பாங்களோ? யாரு?" கலக்கத்துடன் கேட்டேன்.
'வேற யாரு? நம்மட ஆக்கள்தான்."

"பாலன் மார்சலுக்குக் போவமோ" என்றேன்.
'ஓ! இஞ்ச நிண்டு என்ன செய்யிறது. உடனயே கிளம்புவம் "என்றார் அவர்.

நாங்கள் தயாரானோம். குறுணி எங்களை புகையிரத நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தார். நாங்கள் வழமையான பாணியில் மார்சல் நகருக்குப் பயணமானோம்.

தொடரும்..
*12.04.2024*

நெடும்பயணம் – *8*
-------------------
மார்செய் நகரை எங்களுக்கு மார்சல் என்றுதான் உச்சரிக்கத் தெரிந்திருந்தது. இப்படிப் பலவேறு பிரெஞ்சுச் சொற்களை தாறுமாறாகவே உச்சரித்துக்கொண்டிருந்தோம். இப்போது நினைக்கச் சிரிப்பாக இருந்தாலும், இன்னும் சில சொற்கள் எங்களுடன் அப்படியே தங்கிவிட்டன.

மார்செய், பிரான்சின் தெற்குமூலையில் அமைந்திருந்திருக்கும் துறைமுகநகராகும். பாரிஸிலிருந்து அண்ணளவாக எண்ணூறு கிலோமீற்றர் தொலைவிலிருக்கிறது.

மார்செய் புகையிரத நிலையத்திலிருந்து பஸ் மூலமாக பாலன் என்னை எங்கோ கூட்டிச்சென்றார். எங்கே போகிறோம்? என்ன செய்யப்போகிறோம் என்று கேட்டால் அவர் பதிலேதும் சொல்லாது கண்ணைக் கண்ணைச் சிமிட்டினார். அந்தச்சிமிட்டலுக்குள் பெருமை வெளிப்படையாகவே இருந்தது. "இந்தா பார்! மார்செய் நகர் எனக்கு அத்துப்படி. பேசாமல் வா! நான் உனக்கு வழி அமைக்கிறேன் " என்ற தோரணை அவரது சிமிட்டலில் இருந்தது.

நான் ஏன் தேவையில்லாது குடைவான்? குடைந்துதான் என்ன ஆகப்போகிறது? பாலனைப் பின் தொடர்ந்தேன்.

அது ஒரு உதவி நிறுவனம். சில வெளிநாட்டவர் அங்கே வரிசையிலிருந்தார்கள். நாங்களும் வரிசையில் அமர்ந்தோம்.

ஒரு மணிநேரக் காத்திருப்பின் பின் எங்களுக்கான அறைக் கதவு திறந்தது. முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு அம்மணி எங்களை வரவேற்றார். அவருக்கு நேர் எதிரே இருந்த ஆசனத்தில் அமர்ந்தோம்.

அம்மணி பாலனை சிறிதுநேரம் உற்றுநோக்கிக்கொண்டிருந்துவிட்டு "நீங்கள் முன்பும் என்னிடம் உதவி கேட்டு வந்தீர்களா? என்றார்.

பாலன் திருட்டு முழியுடன் "இல்லையே" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாகத் தலையைக் குறுக்கசைத்தார்.
நான் பாலனைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.
பாலன் சொல்வது பொய்யென்று
தெளிவாகத்தெரிந்தது.
பாலனுக்கும் ஆங்கிலம் மட்டுமட்டு.
ஆனாலும், அம்மணி எங்களுக்கேற்றாற்போல்
கேள்விகளைப்போட்டு பதில்களை
வாங்கிக்கொண்டிருந்தார்.

"நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?"

"எங்கட நாட்டில பிரச்சினை. தமிழ் சிங்களப்
பிரச்சினை. அரசாங்கம் தமிழாக்களைக் கொல்லுது.
அதுதான் பிரான்சுக்கு வந்தனாங்கள்"

உண்மையில் இலங்கையில் என்ன
பிரச்சினையென்று தெளிவாகச் சொல்ல
எங்களுக்குத் தெரியவில்லை.
அம்மணி குறுக்குமறுக்காக கேட்ட கேள்விகளுக்கு
எங்களிடம் தெளிவான பதிலேதும் இல்லை.
கடைசியில் களைத்துப்போன அவர், "சரி
இருக்கட்டும், பிரான்ஸில் இவ்வளவு நகரங்கள்
இருக்க மார்செய் நகருக்கு ஏன் வந்து சேர்ந்தீர்கள்?"
என்றார்.

'எங்களுடைய நண்பர் ஒருவரின் ஆலோசனைப்படி'
என்று ஒற்றை வரியில் பதிலளித்து முடித்தோம்.

அதற்குமேல் அவரால் தொடரமுடியவில்லை.
களைத்துப்போனார். சரி, பொலிஸில் பதியவேண்டும்.
அதற்குரிய ஆயத்தங்கள் செய்வேண்டும். இரண்டு
நாட்கள் கழித்து தன்னை வந்து சந்திக்கும் படியும்,
அந்த இரண்டு இரவுகள் தங்குவதற்கு ஒரு முகவரி
யையும் கொடுத்திருந்தார். அங்கே இரவு உணவும்
தருவதாகவும் மேலும் சொல்லியிருந்தார்.

நாம் வெளியேறும் போதும் பாலனை ஓர்
உறுக்கலான பார்வையால் அளக்க அவர்
தவறவில்லை.

வெளியே வந்ததும் "அப்பாடா தப்பிச்சம்" என்றார்
பாலன்.

"ஏன் "என்றேன்.

"உவளிட்ட ஏற்கனவே வந்திருக்கிறன். அவள்
என்னைப் பிடிக்கேல்ல." என்றார்.

நான் மனதுக்குள் எள்ளலாகச் சிரித்தேன்.
"ம். அவள் வடிவாப் பிடிச்சிட்டாள்.
ஆதாரமெதுவுமில்லததால் விட்டிட்டாள்" என்றேன்.

"சும்மா இருமைஸே! இப்பிடி ஆயிரம் பேரைப்
பாத்திட்டம். இவளெல்லாம் ஒரு யுஜிப்பி"என்று
பலமாகக் கண்ணைச் சிமிட்டினார் பாலன்.

பாலனை நம்புவதைத்தவிர எனக்கு வேறு
வழிகிடையாது. நானும் பாலனின் பெருமை-
களை ஆமோதித்து வழிமொழிந்து அவரை
மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டேன்.

பசித்தது. பணிசும் கோலாவும் வாங்கித் தந்தார்.
தான் ஒரு பியரையும் வாங்கிக் கொண்டார்.
மார்செய் நகரில் அங்குமிங்குமாகச் சுற்றியபின்
மாலை குறிப்பிட்ட முகவரியை அடைந்தோம்.
மார்செய் பஸ்களில் எம்பாட்டுக்கு ஏறி எம்பாட்டுக்கு
இறங்கினோம். ரிக்கற் எடுப்பது பற்றிய சிந்தனையே
என்னிடமும் கூட இருக்கவில்லை. எல்லாமே
பழகிவிட்டது.

தங்குமிடமற்றவர்களுக்கான அந்தக் காப்பிட
வாயில் அனாதரவானவர்களால் நிரம்பி வழிந்தது.
பலரும் நெருங்கியடித்து நின்றார்கள். அநேகர்
வயதானவர்கள். பலர் குடிபோதையில் தள்ளாடியபடி
நின்று கொண்டிருந்தார்கள்.

'எல்லோருக்கும் இடம் கிடையாது. நாங்கள்
நெரிச்சடிச்சு இடம்பிடிச்சுப்போடவேணும் " என்று
பாலன் எனக்கு அறிவுறுத்தினார்.

இரவு 8 மணியளவில் கதவைத்திறந்து உள்ளே
விட்டார்கள்.
வரிசையில் நிற்கவைத்து சூப்பும் பாணும் தந்தார்கள்.
அதை உண்டபின் ஆளுக்கொரு மெத்தையும்
கம்பளியும் கொடுத்தார்கள். விசாலமான மண்டபம்
அது. குளிக்க விரும்புபவர்கள் குளிக்கலாம். நாங்கள்
ஆசைதீரக் குளித்தோம். நல்ல தூக்கம் வந்தது.

காலையில் தேநீரும், பாணும் தந்தார்கள்.
பகல் அங்கிருக்கமுடியாது. இரவு திரும்ப
வரவேண்டும். வெளியேறினோம்.

திரும்பவும் மார்செய் நகரை அங்குமிங்கும்
சுற்றினோம். மாலை தங்கிடத்திற்கு வந்தபோது
நிறையப்பேர் அங்கே முண்டியடித்தபடி நின்றார்கள்.
நாங்களும் முண்டியடித்தோம். ஆனால்
தோற்றுப்போனோம். எங்களைப்போல் பலர்
காத்துநிற்க தங்குமிட நிர்வாகிகள் கையை விரித்துக்
கதவைச் சாத்தினார்கள்.

மார்செய் புகையிரத நிலையத்தில்
இரவுப்பொழுதைக் கழித்தோம். அங்கே எதிர்பாராத
விதமாகச் சந்தித்த பாலனின் நண்பர் ஒருவர்
எங்களுக்கு என்னொரு சந்தோசமான தகவலைத்
தந்தார்.

"எங்களுடைய தமிழர்கள் கொலம்பஸ் போல
பிரான்ஸில் புதிய புதிய நகரங்களைக் கண்டு
பிடித்துக் கொண்டிருந்தார்கள். அதிலொன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலியை அண்மித்த Gap என்ற ஒரு குக்கிராமம். அது மார்செய் நகருக்கு அதிக தொலைவில் இல்லாதிருந்தது. அங்கே அகதியாக சுலபமாகப் பதிந்துவிடலாம். இன்னும் அது நோண்டியாகவில்லை."

பாலன் சந்தோசத்தில் மிதந்தார்.

Gap கிராமத்திற்கு நேரடிப் புகையிரதமில்லை. பிரான்ஸின் மத்திய நகரமான வலென்ஸ் நகருக்குச் சென்று மாறவேண்டும். மாறினோம். Gap கிராமத்தில் கால் பதித்தபோது பனித்துகள்களால் படர்ந்து கிடந்த புகையிரதநிலையம் எங்களை மௌனமாக வரவேற்றது.

பாலனின் நண்பரின் குறிகாட்டலின்படி உதவி நிறுவன வாசலில் காத்துநின்றோம் .
அது புகையிரத நிலையத்திலிருந்து மூன்று நிமிட நடை தூரத்தில்தானிருந்தது.

ஐம்பது வயது நிரம்பிய ஒரு சீமாட்டி காரில் வந்து இறங்கினார். நண்பர் குறிப்பிட்ட திருவாட்டி பெல்கிறேய்னின் தோற்றத்தை ஒத்திருந்தார். வாசலில் நின்ற எங்களை அவர் நெருங்கிய போது மிகவும் பணிவான குரலில் தன்னடக்கமாக 'யு ஆர் மடம் பெல்கிறேய்ன்?' என்றோம்.

"ஓம். நான் தான் "என்றார்.

நாங்கள் அழுவாரில் ஒன்றாக "அகதி" என்றோம்.

"வாருங்கள் உள்ளே" என்று அழைத்துப்போனார். அது ஒரு பழைய கட்டடம். யாரும் அங்கு வசிப்பதாகத் தெரியவில்லை. முதலாவது மாடியிலுள்ள தனது அலுவலகத்திற்கு எங்களை அழைத்துச்சென்றார்.
சிறுது நேரத்தில் அவருடைய உதவியாளரும் அங்கு வந்துசேர்ந்தார்.

எங்கள் முறைப்பாடுகளைக் கேட்ட அவர்கள், "ஓகே நாங்கள் உதவலாம்" என்று தலையசைத்தபோது நான் சந்தோசத்தின் உச்சத்திற்கே சென்றேன். அவர்கள் அவசரமவசரமாக ஒரு கடிதம் ஒன்றைத் தயார் செய்து எங்களிடம் கொடுத்தார்கள். "நீங்கள் இந்தக் கடிதத்துடன், நாங்கள் தரும் மார்செய் நகரிலுள்ள முகவரிக்குப் போங்கள். அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள் "என்றார்கள்.
அதே முகவரி. அதே அம்மணி.

மனசு "ஐயோ" என்று உள்ளுக்குள்ளே குமுறியது.

❍

தொடரும்.
*23. 06.2024*

# பாரிஸில் அன்புள்ள ஆரியசிங்க நூல் வெளியீடு



அருட்தந்தை அன்புராசா அவர்களின் அன்புள்ள ஆரியசிங்க நூல் வெளியீடு 17.07.2024 அன்று பாரிஸில் நடைபெற்றது.
தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் வெளிவந்திருக்கும் இந்நூல், 'அரஹலிய' போராட்டகாலத்தில் ஆரியசிங்க என்னும் கற்பனைப் பாத்திரத்திற்கு எழுதப்பட்ட 30 கடிதங்களை உள்ளடக்கியது.
இலகு மொழியில் எழுதப்பட்ட இக்கடிதங்கள் ஆரியசிங்கவுக்கூடாக சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களது பிரச்சனைகளை எடுத்துச் செல்லும் இன்னொரு முயற்சி.


ஐந்து கண்ட அறிஞர் ஆய்ந்து கண்டதை உவந்து அரிகின்றனர்!
**5 வது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு - பாரிசு : 2024**
**5ème Colloque Tamoul Européen**
**5th European Tamil Conference**



பன்னாட்டு உயர்கல்வி - தமிழியல் நிறுவனம்,
விநாயக மிஷன் ஆராய்ச்சி நிறுவனம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
சிறீ ராஜராஜன் கல்விக்குழுமத்துடன் இணைந்து,
ரீ.ஆர்.ரீ. தமிழ் ஒலி வானொலி அனுசரணையுடன் நடத்தும்

**ஐந்தாவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு - பாரிசு : 2024**
- தொல்காப்பியம் - பல் நோக்குப் பார்வை
- திருக்குறள் - யுனெஸ்கோ உலகநூல் ஒப்புதல் : மொழிபெயர்ப்புகள்
- புலம்பெயர் நாடுகளில் தமிழ் வளர்ச்சி

இடம்: 20. Esplanade Nathalie Saurrate - Paris 18
Institut International des Etudes Supérieures இற்குப் பிற்புறம்
காலம் :14, 15. Sept.2024

தமிழாராய்ச்சி நுணுகி, நுகர...
தமிழன்புடன் அழைப்பதில் மகிழ்கிறோம்!
ஒருங்கிணைப்பாளர் : முனைவர், பேராசிரியர் ச. சச்சிதானந்தம்
பன்னாட்டு உயர் கல்வி - தமிழியல் நிறுவனம்
அலைபேசி: 06 52 66 30 01 sachchithanantham@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



‘Leticia IBANEZ’ அண்மையில் பாரிசில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பில் ‘தமிழ் – பிரெஞ்சு தொடர்பு’ பற்றிய கட்டுரையைப் படித்தவர். அவரின் தமிழ் எல்லோரையும் கவர்ந்திருந்தது.

பிரெஞ்சு இலக்கிய ஆசிரியரான இவர் INALCO (Institut national des langues et civilisations orientales) என்ற பல்கலைக்கழகத்தில் நவீன தமிழ் இலக்கியப் பேராசிரியராக கடமையாற்றுகிறார்.

Valencia என்ற ஸ்பானிய நகரத்தில் பிறந்து பிரான்சின் லியோன் நகரத்தில் வளர்ந்தபோது தமிழர்களான அயலவர்களின் உதவிக்கு ‘நன்றி’ சொல்ல கற்றுக்கொண்ட தமிழ்ச்சொல் அவரை ஈர்த்துக்கொண்டது. அந்த சொல்லின் உந்துதலால் தொடர்ந்து தமிழில் வாசிக்க கற்றுக்கொண்டார்.

‘வாசிப்பின் மூலம் வந்தடைந்த ஒலியின் அழகு தன்னை நவீன தமிழ் இலக்கியங்களைப் படிப்பது வரை கொண்டுவந்தது’ என்கிறார்.

கடந்த ஆண்டு ‘Prix Pierre-François Caillé -2023’ என்ற விருதை சோபா சக்தியின் ‘இச்சா’ நாவலை ‘la Sterne rouge’ என்ற பெயரில் பிரெஞ்சு மொழிக்கு மாற்றிய சிறப்புக்காக பெற்றுக்கொண்டார். இவ்விருது பற்றி Agnès Debarge என்ற இலக்கிய கர்த்தா கீழ்வருமாறு கூறியிருக்கிறார்.

‘Léticia Ibanez’ தமிழில் இருந்து ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளராக, வேறொரு உலகத்திற்கு நம் கண்களைத் திறக்கிறார’

# பிரெஞ்சு –தமிழ் இலக்கிய ஆசிரியர் லெத்தீசியாவுடன் ஒரு சந்திப்பு

**- அகரன் -**

லெத்தீசியா கோடைகால விடுமுறைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவரது பெற்றோர் Loches என்ற சிறு நகரத்தில் வசிக்கிறார்கள். பெற்றோருக்கு ஒரே பிள்ளையாக லெத்தீசியா இருப்பதால் அவர் தனது தாய் - தந்தையைச் சந்திக்க 365 நாட்களில் அருமையாகக் கிடைக்கும் வாய்ப்பை அனுபவிக்க உணர்வுகள் துடித்துக் கொண்டிருந்தன.
அவர்கள் வளர்க்கும் நாயை அயல் வீட்டுப் பெண்ணிடம் கொண்டு சென்று கையளிக்க வேண்டும். பல்கலைக்கழக வேலைகள் சம்மந்தமாக நிக்கோலசுடன் சூூம் செயலியில் உரையாட வேண்டும். அதன் பின் வீட்டைச் சுத்தம் செய்து விடுமுறைக்கான பைகளைத் தயார் செய்யவேண்டும். குழந்தை காயத்திரிக்கான எல்லா பொருட்களையும் எடுத்து வைக்க வேண்டும். சத்தியா தன் வேலைகளைத் தானே பார்க்கும் வயதுக்கு வந்துவிட்டார். இந்த ஒருநாளில் இத்தனை வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்ககும்போது நான் அனுப்பிவைத்த கேள்விகளுக்கும் பதில் எழுதி அனுப்பினார். அவரிடம் உற்சாகம் பெருகியபடியே இருந்தது. ‘லெதத்தீசியா உங்கள் பதில்கள் காத்திரமாக இருக்கிறது’ என்று பதில் போட்டேன். ‘ சுவாரஸ்யமான கேள்விகள் இருந்தால் காத்திரமான பதில்களும் இருக்கும்’ என்றார். கரும்பை கடித்து தின்பதுபோல அந்தப்பதில் இருந்தது.

1. தமிழ் மொழி பேசும் மக்களுக்கு உங்களை எப்படி அறிமுகப்படுத்த விரும்புகிறீர்கள் ?

நான் புதிதாக ஒன்றும் சொல்லப் போவதில்லை. அகரன் தன்னுடைய முந்தைய கட்டுரையில் எழுதியது போல,நான்மத்தியபள்ளியிலும்பல்கலைக்கழகத்திலும் இலக்கிய ஆசிரியையாக வேலை செயகிறேன். வகுப்புகள் முடிந்த பிறகு , கிடைக்கும் நேரங்களில், நவீனகாலத் தமிழ் இலக்கியங்களைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கிறேன்.

2. நீங்கள் தமிழ் பேசும் நிலத்திற்கு சென்றிருக்கிறீர்களா? உங்கள் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் வைக்கும் அளவிற்கு எது அப்படி ஈர்த்தது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுக்குப் பல தடவை போயிருக்கிறேன். ஆனால் சிறுகதை எழுத்தாளர் மௌனியைப் பற்றியான என்னுடைய Phd க்காக ஆய்வு செய்யச் சில மாதங்களாகப் பாண்டிச்சேரியில் இருந்ததைத் தவிர, தமிழ் பேசும் நிலங்களில் நீண்ட நாட்கள் வாழ வாய்ப்பு அமையவில்லை . நாங்கள் அழகான, அர்த்தமுள்ள, கூப்பிடும் ஒவ்வொரு முறையும் சந்தோசம் தரும் பெயர்கள் வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம் . என்னுடைய கணவர் சமஸ்கிருத ஆசிரியராக இருக்கிறதால அவருக்கும் சமஸ்கிருத பெயர்கள் ரொம்பப் பிடிக்கும்.

*3. தமிழ் என்கிற மொழி இருக்கிறது என்று பெரும்பான்மை பிரெஞ்சு மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இலக்கியத்தினூடாகத் தமிழர்களை எப்படிப் புரிந்து கொள்கிறார்கள் ?*

இமையம் எழுதிய பெத்தவன், ஷோபாசக்தி எழுதிய கூப்ரைடே முதலிய சிறுகதைகளும், இச்சா என்கிற நாவலும், பெருமாள் முருகன் எழுதிய பூக்குளி, அம்பை எழுதிய மல்லுக்கட்டு முதலிய சிறுகதைகள் என்று பிரெஞ்சு புத்தகக் கடைகளில் கிடைக்கும் படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு சிந்தித்தால், தமிழர்கள் தங்கள் முழு பலத்துடன் தங்களுக்கு எதிரான சமூகத்துடன் போராடி, சந்தோஷமாக வாழ, ஏன் பல சமயங்களில் பிழைத்து வாழ முயன்றவர்களாக இருக்கிறார்கள் என்று பிரெஞ்சு வாசகர்கள் புரிந்துகொள்வார்கள். ஏனென்றால், இந்தக் கதைகள் சாதி வன்முறை, கௌரவக் கொலைகள், ஆண் ஆதிக்கம், உள்நாட்டுப் போர் என்று தமிழர்களின் வாழ்வின் மிகக் கொடிய விஷயங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆனால் முழுப் படத்திலும் இந்த விஷயங்கள் நிரம்பி இல்லை என்றாலும், படத்தின் ஒரு முக்கிய பகுதியாக இருப்பதால், அவர்கள் தமிழர்களின் வாழ்வை அப்படி புரிந்து கொள்கிறார்கள்.

*4. பிரெஞ்சு-தமிழ் இலக்கியங்களில் நீங்கள் கண்டடைந்த ஒப்புமையும் தனித் தன்மையும் எத்தகையது ?*

பிரெஞ்சில் எழுதினாலோ தமிழில் எழுதினாலோ ஒவ்வொரு எழுத்தாளரும் தனக்கென்று ஒரு உலகத்தை அமைத்து வெளிப்படுத்துவார். நாம் வாசிக்கும் இலக்கியம் எந்த வகை இலக்கியம் என்பதைப் பொறுத்து, பிரெஞ்சு இலக்கியமும், தமிழ் இலக்கியமும் வாசிப்பதில் வேறுபடுகிறது. பிரான்சில் மக்கள் நாவல்களைத் தான் மிகவும் விரும்பி வாசிப்பார்கள். தென்னாசிய வாசகர்கள் மாதிரி நாங்கள் சிறுகதைகளும் சுருக்கமான கட்டுரைகளும் வாசிக்க அவ்வளவு பழக்கமானவர்கள் அல்ல. ஏனென்றால் இங்கு இலக்கியத்தை வெளியிடும் முக்கிய ஊடகம் புத்தக வடிவம் தான். ஒவ்வொரு தென்னாசிய மொழியிலும் நிறைய இலக்கிய ஏடுகளும், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் உள்ள middle magazinesகளும் இருக்கும். ஆனால் பிரான்சில் உள்ள இலக்கிய ஏடுகளை விரல் விட்டு எண்ணிவிட முடியும். அத்துடன் எங்கள் middle magazines களில் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் மட்டும் தான் இருக்கும். ஆனால், இலக்கிய படைப்புகள் இருக்காது. பிரான்ஸின் இலக்கிய வாழ்வின் முக்கிய இடம் புத்தகம்தான், அதனால் தான் என்னோவோ , நாவல் போன்ற நீண்ட இலக்கிய வகைகள் அவ்வளவு பிரபலமாக உள்ளது என்று நினைக்கிறேன்.

*5. நீங்கள் முயன்று தமிழைக் கற்றீர்கள். அந்த முயற்சி வெற்றியடைய உங்கள் உழைப்பை எப்படி அமைத்தீர்கள் ?*

பதினைந்து வருடமாகத் தமிழ் கற்றுக் கொண்டு வருகிறேன். ஆரம்பத்தில் méthode assimil என்கிற கையேட்டை மனப்படம் செய்துவிட்டு கோலங்கள், மூன்று முடிச்சு போன்ற பல தொலைக்காட்சி நெடுந்தொடர்களைப் பார்த்தேன். அதன் கதாபாத்திரங்கள் மெதுவாகப் பேசியதாலும், அவர்கள் சில சமயங்களில் சொன்னதை மறுபடியும் மறுபடியும் சொன்னதாலும் இந்த வகைத் தொடர்கள் மொழி கற்றுக்கொள்ள உகந்தவையாக இருந்தன. கடந்த சில வருடங்களாக இணையதளத்தில் மொழி கற்றுக்கொள்ளும் வழிகள் அதிகரித்துள்ளன. எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் சீனிபிரபு என்கிற என்னுடைய தமிழ் tutorஉடன் இணையதளத்தில் பாடம் படிப்பேன். அவர் பேசுவதற்கும் எழுதுவதற்கும் எனக்கு நிறைய உதவி செய்கிறார்.

*6. பிரெஞ்சு இலக்கியத்திற்காக 15 மேற்பட்ட நோ-பல் பரிசு கிடைத்திருக்கிறது. தமிழில் ஒன்று தானும் இல்லை.தமிழ் இலக்கியம் உங்கள் பார்வையில் அந்த உயரத்தை அடையவில்லையா ?*

தமிழ் இலக்கியங்கள் பல முறை அந்த உயரத்தை அடைந்திருக்கிறது ! 1919ஆம் ஆண்டு போல, பாரதியின் கவிதைகள் மொழிபெயர்க்கப் பட்டிருந்தால், அவருக்கு நோபல் விருது கிடைக்காமல் போயிருக்குமா? ஏன், ஒன்பதாம் நூற்றாண்டில், நோபல் விருது இருந்திருந்தால், இந்த விருதை மாணிக்கவாசகருக்கு கொடுக்காமல்தான் போயிருப்பார்களா ?!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இச்சா மொழிபெயர்ப்பு உங்களுக்கு புதிய அனுபவமாக இருக்கும். அதன் களமும் தமிழக தமிழர்களுக்கே புதியது. உங்களுக்கு அது சவாலாக இருந்ததா ?

ஆம், கண்டிப்பாக. இச்சாவின் மையக் கதை மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்றதால் அங்கு வாழும் மக்களின் கலாசாரத்தையும், நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் பற்றியான பல விஷயங்கள் எனக்குப் புதிதாகவே இருந்தன. ஆனால் ஷோபா மொழிபெயர்ப்பு வேலையில் எனக்கு நிறைய உதவிகள் செய்தார். நான் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பொறுமையாகப் பதில் சொன்னார். சிகரம், களரி போன்ற எனக்குத் தெரியாத விஷயங்களை நான் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவைகளை எனக்கு வரைந்து காண்பித்தார். அதே மாதிரி 'ஸலாம் அலைக்' என்கிற நாவலின் மொழிபெயர்ப்பைச் செய்ய எனக்கு யாழ்ப்பாணத் தமிழில் எழுதப்பட்ட உரையாடல்களை விளக்கி எனக்கு நன்றாக உதவி செய்தார். உண்மையில், ஷோபாவுடன் வேலை செய்வது ஒரு பாக்கியம்.



8. பேராசிரியர் ஜோர்ஜ் எல் காட் 1975 காலத்திலேயே பழந்தமிழ் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அப்படி பிரெஞ்சு மொழியில் தமிழின் வேறு இலக்கியங்கள் வந்திருக்கிறதா ?

பழந்தமிழ் கவிதைகளில் சில கவிதைகள் பிரெஞ்சு மொழிபெயர்ப்புகளில் உள்ளன. EPHE (Ecole Pratique des hautes études) பேராசிரியரான François Gros 1968இல் மிக அழகாகவும் துல்லியமாகவும் பரிபாடலை மொழிபெயர்த்தார். அவர் 1992 இல் திருக்குறளின் காமத்துப்பாலையும் அதே திறமையுடன் மொழிபெயர்த்தார்.

9. 'என் சரித்திரம்" என்ற நூலில் திரு சாமிநாதையர் புறநானூற்று பாடல்களின் அச்சுப் பதிப்புப்பற்றி பிரெஞ்சு அறிஞர் திரு வின்சன் மகிழ்ந்து கடிதம் அனுப்பியதைக் குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய தமிழ் மொழியறிந்த பிரெஞ்சு அறிஞர்களின் தொடர்ச்சி இருக்கிறதா ?

இருக்கிறார்கள். முதலில் சங்க காலத்துக் கவிதைகளையும், பக்திக் கவிதைகளையும், நவீன இலக்கியங்களையும் நன்றாக அறிந்த François Gros வை (1933-2021) முதலில் குறிப்பிட வேண்டும். இப்போது உள்ளவர்களில், மொழியியல் ஆய்வாளரான Jean-Luc Chevillard ஐயும் கல்வெட்டு-ஓலைச்சுவடி-செப்புத் தகடுகள் நிபுணரான Emmanuel Francisஐயும் குறிப்பிட முடியும்.

10. இப்போது பிரான்சில் 200000க்கும் அதிகமான தமிழர்கள் வாசிக்க வாய்ப்புண்டு. இதுவரை தமிழ் இலக்கியங்களை ஒருவர் தானும் பிரெஞ்சு மொழிக்கு நேரடியாக மொழி மாற்றியதை அறியவில்லை. ஆனால் முப்பது ஆண்டுகளாகத் தமிழ் பள்ளிகளை அமைத்து தமிழைக் கற்பிக்கிறார்கள். ஏன் இந்த ஏமாற்றம் ?

பிரான்சில் வாழும் சில தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் தனிப்பட்ட முறையில் தமிழ் இலக்கியங்களை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஓர்சாய் கோபாலகிஸ்ணன் மொழிபெயர்த்த பட்டினப்பாலையும், நாகரத்தினம் கிருஷ்ணாவின் ப்ளோகில் உள்ள மொழிபெயர்ப்புகளையும் உதாரணங்களாகக் கொள்ளலாம். ஆனால் இந்த மொழிபெயர்ப்புகள் பிரெஞ்சு புத்தகக்கடைகளில் விற்கப்படாததால், அவையால் நிறைய வாசகர்களை எட்ட முடியவில்லை. ஆனால் அந்த நிலைமை மாறிக்கொண்டே இருக்கிறது. வர வர புலம்பெயர் தமிழ் குடும்பங்களில் பிறந்த இளைஞர்கள் இரண்டு மொழிகளில் தேர்ச்சி பெற்று பிரான்சில் மேல் படிப்பிற்கு வருகிறார்கள். அவர்களில் பல பேர் எழுதிய பிரெஞ்சில் சொல்வளம் பெற்று தமிழிலிருந்து பிரெஞ்சு மொழியில் இலக்கிய படைப்புகளை நேரடியாக மொழிபெயர்க்கக் கூடியவர்களாக வருகிறார்கள். அடுத்த 10 ஆண்டுகளில் மொழிபெயர்ப்பு களத்தில் இன்னும் நிறைய திறமையுள்ள புதியவர்கள் வருவார்கள் என்று நம்புகிறேன்.

11. பிரெஞ்சு இலக்கிய வாசிப்பாளர்களிடம் இச்சா எப்படியான பின்னூட்டங்களை தந்திருக்கிறது ?

கரும்புலியான ஆலாவின் கதையை வாசித்த எனக்குத் தெரிந்தவர்களில் யாருமே நாவலைச் சாதாரணமாக நினைக்கவில்லை. பெரும்பாலோர் ஒரு புதிய உலகத்தில் நுழைந்தது போல இருந்தது என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்கள். நாவலின் கதையோட்டம் தனித்துவமாக இருந்ததால், அது அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதே சமயத்தில் கதாநாயகி அனுபவிக்கும் பல வகை வன்கொடுமைகளை அறிந்து அதிர்ந்து போனார்கள்.

நாவலின் இன்னொரு சுவாரஸ்யமான அம்சம் என்னவென்றால் அதன் மூலமாக ஈழத்து தமிழர்களைப் பற்றிப் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டதாகவும் சொன்னார்கள். ஏனென்றால் எங்கள் பெரிய நகரங்களில், முக்கியமாகப் பாரிஸ் பகுதியில் , மெட்ரோவிலோ தெருக்களிலோ கடைகளிலோ நிறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களைக் கண்டும் அவர்களைப் பற்றி கிட்டத்தட்ட எங்களுக்கு ஒன்றும் தெரியாத நிலை இருந்தது. ஆனால், இந்த நாவலின் மூலமாக அவர்களின் மொழி, பழக்கவழக்கங்கள், வரலாறு மற்றும் உள்நாட்டுப் போர் என்று பல விஷயங்களை அறிந்துகொண்டோம் என்று சொன்னார்கள் .

இப்பொழுது தமிழர்கள், பிரெஞ்சு சமூகத்தின் ஒரு பாகமாயிருக்கிறார்கள். எங்கள் கூடவே வாழும் அவர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பது மிக முக்கியமான ஒன்று என்று நான் நினைக்கிறன் .

12. பிரெஞ்சு மக்கள் அளவு வாசகர்கள் தமிழில் இல்லை. ஆனால் தமிழ் மக்கள்தொகையும், பிரெஞ்சு மக்கள் தொகையயும் சம அளவாக இருக்கிறது. சிறந்த எழுத்து நிறைந்த வாசகரை உருவாக்குமா? நிறைந்த வாசகர்கள் சிறந்த எழுத்தை உருவாக்குவார்களா ?

மிகச் சிறந்த இலக்கியங்கள் சமகாலத்து வாசகர்களுக்கு பிடிக்காமல் போனாலோ, அவர்கள் கவனத்தில் படாமல் இருந்தாலோ, தங்கள் மதிப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று வரலாற்றின் பல பதிவுகளில் நாம் காண முடியும். நிறைய பேருக்குப் பிடிக்கும் ஒரு படைப்பும் ஏதாவது ஒரு வகையிலாவது அது சிறந்ததாகத் தான் இருக்கும். ஏனென்றால் இவ்வளவு பேரின் மனத்தைக் கவருவதற்கு காரணங்கள் இல்லாமல் போகுமா ? ஆனால் வாசகர்களின் அங்கீகாரத்தை வைத்து மட்டுமே ஒரு படைப்பின் மதிப்பை அளக்க முடியும் என்று கூற முடியாது .

13. நீங்கள் யாருமில்லாத தீவில் தங்க நேர்ந்தால் கொண்டு செல்லும் இரு தமிழ், பிரெஞ்சு நூல்களையும் அதன் காரணங்களையும் சொல்ல முடியுமா ?

தமிழ்ப் புத்தகங்களை பொறுத்த வரை லா. ச. ரா. எழுதிய அலை என்கிற சிறுகதைத் தொகுப்பையும் ஜி. நாகராஜனின் எழுதிய குறு நாவல்களையும் கொண்டு செல்வேன் என்று நினைக்கிறேன். பிரெஞ்சுப் புத்தகங்கள் என்றால், விக்டர் யூகோ எழுதிய கடலின் உழைப்பாளிகள் (Les Travailleurs de la mer) என்கிற நாவலையும் மிச்செல் ஹௌஎல்லேபேக் எழுதிய நிலமும் வரைபடமும் (La Carte et le territoire) என்கிற நாவலையும் கொண்டு செல்வேன்.



## வளர் சிறுகதைப் போட்டி – 2024

ஒரு சிறுகதைப் போட்டியை நடத்திமுடிப்பது அவ்வளவு இலகுவானதல்ல என்பதை, போட்டியை நடத்தி முடிக்கும்போதுதான் உணர்ந்து கொள்ள முடிகிறது.

போட்டியை அறிவித்துவிட்டுக் கதைகளுக்காகக் காத்திருந்து, கதைகள் வந்தபின் திணறி, அப்பாடா 871 கதைகள்!! போட்டியை அழகுறச்செய்த அத்தனை போட்டியாளர்களுக்கும் மீண்டும் நன்றிகள்.

வந்துசேர்ந்த கதைகள் அத்தனையும் கதைகள் அல்ல, வாழ்க்கைகள். நெகிழ்ந்துபோகிறோம். வாசிக்கும் போது எங்களுக்கும் வலிக்கிறது.

கதைகளைத் தேர்வு செய்வது எமக்கு மிகுந்த சோதனையாக இருந்தது. நல்ல கதைகள் பரிசுக்கதைகளுக்கு வெளியே தவறவிடக்கூடாது என்பதில் அதிக சிரத்தையெடுத்தோம். ஆனாலும், எம்மையும் மீறி தவறநேரவும் கூடும். வளர் குழுமம் தேர்ந்த நடுவர்களோடு இதயசுத்தியோடு கதை களைப் படித்தது. முதல் பத்துக் கதைகளும் கடும் போட்டியாகத்தான் இருந்தன. ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல. தெரிவு செய்வது அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை.

ஆனாலும், நாங்கள் ஏதாவது ஒரு சிலவற்றைத் தேர்வு செய்துதானே ஆகவேண்டும்! வெற்றி பெறாதவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான வாழ்த்துகள்!

எமக்கு வந்த கதைகளுக்குள் நூறு கதைகளை-யாவது எழுத்தாளர்களின் ஒத்துழைப்போடு நான்கு அல்லது ஐந்து தொகுப்புகளாக வெளியிட பிரியப்படுகிறோம். தொகுப்பின் மூலம் பெறப்படும் நிதி எழுத்தாளர்களுக்கே சொந்தமானது. கதை-களை மாணவர் கதை, பெண்கள் கதை... எனவும் வகைப்படுத்தலாம்.

கதை சொல்லல் முறைகளில் சில ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும், அத்தனையும் கதைகள்தான் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எல்லோருக்குமே சொல்வதற்கு நிறையக்கதைகள் இருக்கின்றன. கதைகளினூடு வாழ்க்கை கசிந்து வடிகின்றது. ஆம்! கதைகள் சொல்லப்படவேண்டும். பரஸ்பரம் பரிமாறப்பட வேண்டும். மனித உணர்வுகளை அடுத்தவரிடம் தொற்ற வைக்கவேண்டும். அந்த வகையில் கதை சொல்லிகளை வாழ்த்தி வரவேற்கிறோம். அவர்களை உற்சாகப்படுத்துவதில் மகிழ்கிறோம்.

– வளர் குழுமம் –

**போட்டி முடிவுகள் 51 ம் பக்கத்தில் ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சன் அப்பாவுக்குச் சொன்ன கதை

என் குழந்தைப்பருவத்தின் அதிகமான காலத்தை அப்பம்மாவுடன் வாழ்ந்ததால்கதை கேட்கும்பழக்கமும் கதை சொல்லும் பழக்கமும் எனக்குள் எப்போதும் ஊறிக்கொண்டிருந்தது. நான் புலம்பெயர்ந்து பதினைந்து ஆண்டுகளுக்குமேல் பிரான்ஸ் நாட்டில் வாழுகின்றேன். தனிமனித வாழ்க்கைபோய் குடும்ப வாழ்க்கையாகி என் வாழ்வும் புலம்பெயர்ந்த நிலத்திற்கும் தாய்நிலத்திற்குகுமிடையில் இயங்கிகொண்டிருக்கின்றது. என் அடையாளத்தின் முதல்பகுதியாக பிள்ளைகளுக்கு நான் கடத்திவிட்டுப் போகநினைக்கும் முதல்கூறே வேறு மொழி பண்பாட்டு சூழலில் என் தாய்மொழியை சுய சிந்திப்பின் மூலம் இயல்பாக எழுதவும், வாசிக்கவும், கதைக்கவும் அவர்களை நெறிப்படுத்தல் என்றாகிவிட்டது.

அப்போதுதான் தமிழ்ச் சூழலில் தற்போது இருக்கும் குழந்தைகளுக்காக பாடல்கள், கதைகளை நான் முதலில் தேடிப் படிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. அது வேதனையைத் தந்தது. நாற்பது ஆண்டுகளுக்குமுன் நான் எதைப் படித்தேனோ அந்தப்பாடல்களும் கதைகளுமே கிடைத்தன. அவைகள் இந்தச்சூழலுக்குப் பொருந்திப் போகவில்லை. அவர்களுக்கு ஒட்டவில்லை. அவர்கள் வெறுமனவே மனனம் செய்து ஒப்பிக்கும் குழந்தைகளாகவே இருந்தார்கள். நான் அவைகளைக் கற்றுக்கொடுப்பதை நிறுத்திவிட்டு, முதலில் வீட்டில் பெரியவர்கள் கதைக்கும்பொழுது வாய் பார்ப்பதற்குத் தூண்டினேன். பெரியவர்களும் கவனமெடுத்துக் கதைத்தார்கள். குழந்தைகளும் கதைகளைக்கேட்டு கலந்து ஆலோசிக்கும் அளவிற்கு பெரியவர்களைக் கேள்விகேட்டுக் கேள்விகேட்டு தங்களை வளர்த்துகொண்டு மொழியறிவையும் வளர்த்தார்கள்.

இங்கு தனிப்பட்ட ரீதியில் எனக்கு வேலை நேரம் அதிகம். பிள்ளைகளோடு நேரம் செலவிடுவது கடினமாக இருந்தது. ஆனாலும் இரவு படுக்கைக்குப் போகும்போது படுக்கையில் வைத்து குறைந்தது இரண்டு கதைகளாவது கூறுவேன். அல்லது படித்துக்காட்டுவேன்.
அப்படித்தான் லியோஸ்டாயின் குழந்தைகளுக்கான சிறுகதை-களைப் படிக்கத்தொடங்கினேன். படித்துக்காட்டத் தொடங்கினேன். அக்கதைகள் முழுமையாகக் குழந்தைகளுக்குப் பிடித்தமான விலங்குகளையும் அதன் செயல்களையும் உள்ளடக்கிக் கதைகளின் முடிவில் எந்த முடிவுமற்ற, ஆனால் எத்தனையோ கேள்விகளைக் குழந்தைகள் கேட்கக்கூடிய தூண்டுதலோடு இலகுவாகவும் எளிமை யாகவும் இருந்தன. நான் படித்துக்காட்டும் நிமிடத்திலேயே என்குழந்தைகள் கதைகளை இடை நிறுத்திவிட்டு என்னிடம் கேள்விகளைக் கேட்டார்கள். கதைகளைப் பலகோணங்களில் உருவளர்த்துக் கதைகளை மாற்றினார்கள். தங்கள் சூழலை உள்வாங்கிப் புதிய கதைகளை உருவாக்கினார்கள்.



அப்படியாக என்மகன் அச்சன் தனது 6வயதில் தமிழர் திருநாள் தைப்பொங்கலன்று எனக்குக் கூறிய ஒரு கதையை எந்தவித மாற்றமும் செய்யாமல் உங்களுக்கு தருகின்றேன்

"ஒரு நாள் ஒரு பொங்கல் நடந்தது.
அச்சன் என்ற ஒருத்தன் அந்த
பொங்கலில் கலந்துகொண்டான். பின்னர்
அதில் இசையாழ் என்று ஒருத்தி
கலந்துகொண்டாள். பின்னர் பார்த்தீபன்
அச்சனுக்கும் இசையாழுக்கும் ஒரு கதை
சொன்னார். அது பொங்கல்கதை.
கிருத்திகாவும் பொங்கல்கதை சொன்னார்.
பார்த்தீபன் அச்சனுக்கும் இசையாழுக்கும்
அப்பா. கிருத்திகா அச்சனுக்கும் இசைக்கும்
அம்மா. இது எங்களுடைய பொங்கல்
கொண்டாட்டம். அச்சனும்
இசையாழும் சூரியனுக்கு இயற்கைக்கும்
நன்றி சொன்னோம். சூரியன் அச்சனுக்கும்
இசையாழுக்கும் இது நல்ல குடும்பம் என்று
சொன்னது. தமிழ் மக்கள் எல்லோரும்
பொங்கல் பொங்கிக்
கொண்டாடி மகிழ்வோம்."

இதைப்படிக்கும்போது இதிலென்ன இருக்கிறது? இது சாதாரண விடயம்தானே என்று தோன்றலாம். ஓர் ஆறுவயதுச் சிறுவனின் அகம் எவ்வாறு விருத்தியடைகிறது. ஆக்கத்திறன் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை அனுபவரீதியாகக் கண்டதை பகிர்ந்தேன். குழந்தைகள் உலகம் பற்றிய தேடல் மிக அவசியமானது.

**- பார்த்தீபன் பத்மநாதன்**
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குட்டி இளவரசன்
# சொண்–எக்சுபரி

**- அகரன் -**

**உலகின்** மகத்தான படைப்பு 'குட்டி இளவரசன்'. இதுவரை 300 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்றிருக்கிறது. 253 மொழிகளில் வெளியான ஒரே படைப்பு. மத நூல்களைத் தவிர்த்து உலகில் அதிகம் வாசிக்கப்பட்ட இந்த நூலை எழுதிய எக்சுபெரி அடுத்த ஆண்டே ஜேர்மனால் கைப்பற்றப்பட்டிருந்த தனது தாயகமான பிரான்ஸ் வானத்தில் அமெரிக்க தயாரிப்பான P-38 விமானத்தில் பறந்து கொண்டிருந்தபோது 31/07/1944 காலை 11 மணிக்கு காணாமல் போனார்.

சொன்–எக்சுபெரி காணாமல் போய் ஒருவருடம் கழித்து, எந்தத் தகவலும் இல்லாமல் அவரது தாயார் 1945 ஏப்ரலில் எழுதிய கவிதை காணாமல் போனவர்கள் பற்றிய சர்வதேச தாய்மையின் வரிகள்.

எங்கெல்லாம் தேடுகிறேன் என் குழந்தையை ?
அவனை இந்த உலகுக்கு அளித்த நாளன்று
நான் கத்தி இருக்கிறேன்.
அவனைப்பற்றி தகவல் ஏதுமின்றி,
கல்லறை கூட இல்லாமல் அழுது கொண்டிருக்கிறேன்.
அவனோ, அளவுகடந்த ஒளிப்பசியினால்
மேல்நோக்கி பயணித்து விட்டான்.
நட்சத்திர மண்டல யாத்திரீகனாய்,
விண்வெளியின் யாத்திரீகனாய்,
ஆண்டவரின் ஜோதியை அடைந்திருப்பானோ?
ஆ, அது மட்டும் தெரிந்தால் போதும்.
முகத்திரைக்குள் என் அழுகை குறையும்.

சொன்–எக்சுபரி 44 ஆண்டுகளே வாழ்ந்தவர். தனது வாழ்நாளில் அவர் மாபெரும் வெற்றிபெற்ற எழுத்தாளர், பிரான்சின் முன்னோடி விமானி, விமானப் பாதை- களை கண்டுபிடிக்கும் தற்கொலைப் பயணங்களை மேற்கொண்டவர், மிகச்சிறந்த கட்டுரையாளர் மற்றும் பத்திரிகையாளர். 1935 இல் சோவியத் யூனியன் புரட்சி வெற்றி விழா கொண்டாடிய போது அங்குசென்று செய்தியாளராக கடமையாற்றியவர். ஜோன் குலுட் என்ற வரலாறு ஆசிரியர் 'அவர் வாழ்ந்த காலத்தில் மிகச்சிறந்த மனிதன். ஆகச் சிறந்த செயல்களின் உருவம்' என்று வியக்கிறார்.

1900 ஆண்டு யூன் மாதம் 29 திகதி பிரான்சின் லியோன் என்ற நகரில் ஓர் மன்னர் வழிவந்த குடும்பத்தில் பிறந்தார். அவரின் நினைவாக இந்த வருடம் உலகெங்கும் அவர் உருவாக்கிய குட்டி இளவரசன் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அவர் இறுதியாக புறப்பட்ட இடமான கோர்சிகா தீவில் அவர் நினைவாக ஒலீவ் மரம் நடும் நிகழ்வு இடம்பெற இருக்கிறது.

Interstellar Lab ஆராட்சியகமும் Starship de SpaceX விண்வெளி பறப்பகமும் இணைந்து அவர் பிறந்த நாளான 29 யூன் 'குட்டி இளவரசன் சர்வதேச நாளை' கொண்டாடுகின்றன. 2027 நிலவில் அவர் நினைவாக ரோஜா செடி நட்டு வளர்ப்பதை அறிவித்திருக்கிறார்கள்.

வரும் 28,29 தினங்களில் அவர் பிறந்த நகரத்தில் 500 குழந்தைகள் 'குட்டி இளவரசன்' நூலை வாசிக்கும் விழாவை நிகழ்த்துகிறார்கள்.

வரும் இரண்டு மாதங்களுக்கு விமானிகளின் வரலாற்றில் அதிசயங்களை செய்தவர் என்ற வகையில் விண்ணியல் கண்காட்சி அமைப்பு (musée de l'air et de l'espace au Bourget) சொந் - எக்சுபரி பற்றிய கண்காட்சியை நடத்துகிறது. அதில் அவர் இறுதியாக பயணம் செய்த P-38 விமானத்தின் பாகங்கள் காட்சிப்படுத்தப்படுகிறது.

பிரான்சில் மட்டுமன்றி சிங்கப்பூர், சீனா , கனடா என்று உலகெங்கும் அவரை கொண்டாடுகிறது.

சொன் – எக்சுபெரி தனது நாற்பதாவது வயது நெருங்கிய போது முழுவதுமாக இலக்கியத்துறையில் இயங்கவேண்டும் என்ற மன உந்துதலில் இருந்தார். தனது இறுதி விமானப்பறப்புக்கு முந்தய தினம் அன்றைய தற்காலிக பிரெஞ்சு தகவல் துறை அமைச்சராக இருந்த ஜெனரல் ஷாம்புக்கு அவர் எழுதி அனுப்பப்படாமல் இருந்த கடிதம் பின்பு வெளியாகியது. அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

'இன்றைய தலைமுறையின் இன்னல்களில் இருந்து நான்
ஒதுங்கி இருக்க முடியாது. போரில் ஈடுபடும் விமான
சாகசங்களில் இருந்து மன நிறைவைத் தேட முடியாது.
மனிதத்தன்மை ஏதுமின்றி வெறுமையாகிவிட்ட இன்றைய
தலைமுறை எனக்கு ஆழ்ந்த வருத்தமளிக்கிறது.
ஜெனரல் அவர்களே ! இன்று இருப்பது ஒரே பிரச்சினைதான்
மனிதர்களுக்கு ஆன்மீக அர்த்தத்தை, அக்கறையை திரும்பத்
தரவேண்டும். குளிர்சாதனப்பெட்டியும், அரசியலும்,
குறுக்கெழுத்துப் போட்டிகளும் மட்டுமே வாழ்க்கை அல்ல.
கவிதையும், வண்ணங்களும், நேசமும் இல்லாமல்
மனிதன் வாழமுடியாது'

- சொன்-எக்சுபரி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திறனாய்வு நோக்கில் குப்பிளான் ஐ.சண்முகனின்

# ஒரு தோட்டத்தின் கதை


**புஸ்பராசா பவஸ்ரீனா,**
*தரம் 13, யா/ அருணோதயக்கல்லூரி.*




புஸ்பராசா பவஸ்ரீனா தமிழ்த்தின திறனாய்வுப் போட்டிக்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவர். அப்போட்டிக்காக விசேட பயிற்சிகளும் அவருக்கு வழங்கப்பட்டன. தன்னுடைய முயற்சியால் கோட்ட மட்ட, வலய மட்ட போட்டிகளில் முதலாம் இடத்தை தக்க வைத்துக் கொண்டவர்.
- சி.ரமேஸ்

இலக்கியத் திறனாய்வு என்பது ஒரு இலக்கியத்தின் பொருண்மை, வடிவம், உணர்ச்சி, கற்பனை முதலானவற்றை நடுவுநிலைமையோடு ஆய்வு செய்யும் முறையியலாகும் இதனை மு.வரதராசன், தொ.மு.சிதம்பரரகுநாதன் முதலானோர் விமர்சனம் எனக்கூறுவர். விமர்சனத்தை ஒரு கலையென க.நா.சு வியாக்கியானம் செய்வார். சிறுகதையானது நேர்கோட்டுப்பாணியில் எடுப்பு, தொடுப்பு முடிப்பு முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருத்தல் சிறப்பானதாகும். 19ம் நூற்றாண்டின் சிறுகதையின் முன்னோடியான எட்கார் அலன்போவின் கூற்றுக்கமைய சிறுகதையானது அரைமணிநேரத்தில் படித்து உணரத்தக்க வகையில் அமைய வேண்டும். அந்தவகையில் நேர்கோட்டுப்பாணியில் அமையும் குப்பிளான் சண்முகனின் 'ஒரு தோட்டத்தின் கதை' நிகழ்ச்சிகள் மற்றும் சம்பவங்கள் வாயிலாக, உணர்வுகளைப் புலப்படுத்தும் தன்மையில் எழுதப்பட்டுள்ளது. சிறுகதையின் மைய அம்சமான கதைக்கரு உயிர்த்துடிப்புள்ள வகையில் படைப்பாளியின் ஊடுதிறன் கொண்டு பின்னப்பட்டுள்ளது. உணர்ச்சியின் மைய இழையில் வெளிப்படும் இச்சிறுகதையின் கதைக்கரு அற்புதமான, அபூர்வமான மனிதர்களைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. பிறரை நேசிக்கும் மனிதர்களும் தன்னைப் போல மற்றவர்களை நேசிக்கும் மனிதர்களும் இன்றும் இவ்வுலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இச்சிறுகதை குஞ்சியப்பு மூலம் உணர்த்தி நிற்கிறது.

## கதைப்பின்னல்

கதை நிகழ்வுகளை எவ்வாறு அமைக்கின்றார்கள் என்பதன் வெளிப்பாடே கதைப்பின்னல் எனப்படுகிறது. கதைக்கு கதைப்பின்னல் முதுகெலும்பாகும் என ஈ.எம்.பாஸ்டர் கூறுவார். தோட்டத்தின் கதை குஞ்சியப்புவின் முதல்நாள், இரண்டாம்நாள், மூன்றாம் நாள் சம்பவங்கள் நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. குஞ்சியப்பு தென்னை மரத்தின் அடியில் நின்று தனது மகளை எண்ணிக்கொள்வதும் அங்கிருந்தபடி பழைய நினைவுகளைக் கிளர்ச்சியுடன் மீட்டிப் பார்த்தலுமாகச் செல்லும் ஒரு தோட்டத்தின் கதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் ஏலவே மகளுக்கு உரைத்தபடி தேசிக்காயைத் திருட வருபவளைப் பிடிக்க மரவள்ளிச்செடியருகில் ஒளிந்து கொள்கிறார். அதன்பின் கையும் மெய்யுமாய் தேசிக்காய்க் கள்ளியைப் பிடிக்கச் சந்தர்ப்பம் வாய்த்த போதிலும் அவர் பிடிக்கவில்லை. அவ்விடமே கதையின் திருப்பு மையமாகவும் அமைகிறது. கல்யாணங் கட்டாத குமர்ப்பிள்ளையை ஊருக்கு காட்டிக் கொடுத்தால் அவள் வாழ்க்கை பாழ்படும் என நினைத்து களவெடுப்பவள் அறியாதவாறு தன்னை மரவள்ளிச் செடிக்குள்ளே சென்று மறைத்துக் கொள்ளும் குஞ்சியப்பு தேசிக்காய் பறித்துக் கொண்டு அப்பெண் செல்லும்வரை காத்திருந்து சிறிது நேரங் கழித்து இவர் வீடு சென்று மகளுக்கு உண்மையை உணர்த்தி விட்டு ஈசிச்சேயாரில் சாய்வதோடு கதை முடிவுக்கு வருகிறது. மனித விளைபொருளின் உன்னதத்தை கதை கச்சிதமாக உணர்த்தி நிற்கிறது.

## கதைக்களம்

கதை நிகழும் புலமே கதைக்களம். சிறுகதை ஒன்றின் உயிர்ப்பு கதைக்களமொன்றிலேயே தங்கியுள்ளது. இயற்கைச் சூழலே கதைக் களமாக விரிகிறது. குஞ்சியப்புவின் வசீகரமான செம்மண்தோட்டப்புலத்திலேயே பெரும்பாலான கதை நிகழ்கிறது. குஞ்சியப்புவின் வீடும் கதைகளத்தின் ஓரங்கமாக வந்து செல்கிறது. ஈற்றில் குஞ்சியப்பு ஈஸிச் செயாரில் படுந்திருந்து கொண்டு சிந்தனையில் ஆழ்வதுவரை கதையை ஆசிரியர் கதைப்புலத்தில் வைத்து விறுவிறுப்பாக நடாத்திச் செல்கிறார்.

## வாழ்வியல் அம்சங்கள்

களத்துடன் இணைக்கப்பட்ட சமுதாயக் கூறுகள், மனித வாழ்வுடன் தொடர்புபட்ட பண்பாட்டு அம்சங்கள் வாழ்வியல் அம்சங்களாக விளங்குகின்றன. காலைப் பொழுதில் வீட்டில் தங்கியிருக்கப் பிடிக்காது தோட்டத்துக்குச் சென்று பொழுதைப் போக்கும் குஞ்சியப்புவின் வாழ்க்கை நிதர்சன உண்மைகளோடு கதை யில் காட்சிப்படுத்தப்படுகிறது. பாடசாலைக்குச் செல்லும் அவசரத்தில் குளிக்கும் சிறார்களின் வாழ்வும் கதையில் வந்து செல்கிறது. காலையில் வீட்டுத் தேவைகளை நிறைவு செய்து விட்டு காலைப் பூசைக்கு கோயிலுக்குச் செல்லும் மகளின் வாழ்வியல் கோலங்களையும் கதை உணர்த்தி நிற்கிறது.

## கதை மாந்தர்கள்

கதை மாந்தர்கள் அனுபவ அடிப்படையில் கலை உணர்வுடன் படைக்கப்பட்டிருப்பார்கள். வாழ்வில் தான் சந்தித்த, சந்திக்க இருக்கின்ற மனிதர்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகதை ஆசிரியன் கதை மாந்தர்களை உருவாக்குகின்றான். கதை மாந்தர்கள் முழுநிலை மாந்தர், ஒரு நிலை மாந்தர் என இருவகையாக நோக்கலாம். இக்கதையில் வரும் குஞ்சியப்பு முழுநிலைமாந்தர் ஆவார். ஹென்றி ஜேம்ஸ் முழுநிலைமாந்தரை உயிருள்ள கதை மாந்தர் எனக்கூறுவார். இவர்களே சிறுகதையின் தலைமை மாந்தராகக் கொள்ளப்படுவார். இச்சிறுகதையின் தலைமாந்தராக வரும் குஞ்சியப்புவே இச்சிறுகதையின் கதை சொல்லியாவார். குஞ்சியப்புவின் குணநலன்களை அவரின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த வகையில் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். காலை எழுந்தவுடன் தோட்டத்துச் செல்லும் ஒருவராகக் குஞ்சியப்பு சித்திரிக்கப்படுகிறார். தனது மகளின் அன்புக்குரிய தந்தையாக விளங்கும் குஞ்சியப்பு சிறுகுழந்தைகளின் சிரிப்பினால் ஈர்க்கப்படும் ஒருவராகவும் காணப்படுகிறார். மகளின் நலனில் அக்கறை கொண்டவராகவும் அவளின் நலனுக்காக இறைவனைப் பிரார்த்திப்பவராகவும் குஞ்சியப்பு காட்டப்படுகிறார். ஊரார் பிள்ளைகளை எல்லாம் தன் பிள்ளைகளைப் போல் கதை சொல்லி வளர்க்கும் ஒருவராகவும் குஞ்சியப்பு காணப்படுகிறார். இச்சிறுகதையில் வரும் குஞ்சியப்பு பிறர் நலம் பாராட்டுபவராகவும் மற்றவருக்காக இரக்கப்படுபவராகவும் கதையில் வந்து செல்கிறார். தோட்டத்தில் திருடும் திருடியை வெளியுலகுக்கு வெளிப்படுத்தாத இலட்சியமாந்தராக கதையாசிரியரால் படைக்கப்படும் குஞ்சியப்பு சிறுகதையை படிக்கும் வாசகர் மனத்தில் நிலைத்து நிற்கும் பாத்திரமாகவும் காணப்படுகின்றார்.

குஞ்சியப்புவின் மகள் சிறுகதையில் ஒரு நிலைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார். கதையின் தேவை கருதி படைக்கப்படும் இப்பாத்திரம் தந்தையின் உளக்கிடக்கையை வெளிக் கொண்டு வரும் வகையில் படைக்கப்பட்ட பாத்திரமாகும். ஒரு சில இடங்களில் வந்து போகும் பாத்திரமாக குஞ்சியப்புவின் மகள் இருந்தாலும் எட்வின்மோர் கூறுவதைப் போல இவ்வகையான மாந்தர் கதையில் ஆற்றல்மிக்கவராகவே விளங்குவர். கதையின் இயங்குநிலையை நிலைபேறுடையதாக மாற்றுவதற்கு இப்பாத்திரமே உந்து சக்தியாகவும் அமைந்தது எனலாம். குஞ்சியப்புவின் பொதுநலநோக்கை வெளிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பாத்திரமே மகள் ஆவார்.

'ஒரு தோட்டத்தின் கதை'யில் வரும் வடிவழகி துணைப்பாத்திரமாகும். துணைப்பாத்திரங்கள் கதையின் முழுமைக்கு துணை செய்யாவிட்டாலும் இச் சிறுகதையில் அப்பாத்திரம் நன்கு திட்டமிட்ட வகையில் கதை வளர்ச்சிக்கு கந்த பாத்திரமாக விளங்கும் வகையில் வந்து செல்கிறது. இளம் வயதில் சிறிய சிறிய திருட்டுச் செயல்களில் ஈடுபடும் பாத்திரமாகவும் வடி-வழகி பாத்திரம் துலங்குகிறது.

கதை இடையில் தோன்றி மறைந்து செல்லும் பாத்திரமாக வரும் அயலவர்கள் இச்சிறுகதையில் பெருமளவு தாக்கத்தைச் செலுத்துபவர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து செல்கின்றனர். குஞ்சியப்புவின் தோட்டத்துக் கிணற்றடியில் குளிக்க வரும் சிறார்கள், வளரிளம் பெண்கள் போன்றோரே இச்சிறுகதையில் அயலவர்களாக வந்து செல்கின்றனர்.

## மொழிநடை

சிறுகதையின் உயிர்நாடியாக மொழி கருதப்படும். இச்சிறுகதையின் மொழிநடை கதையோட்டத்தில் செல்வாக்குச்செலுத்துகிறது. இச்சிறுகதை யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் எழுதப்பட்டதால் அம்மக்களின் பிரதேசமொழியை இச்சிறுகதையில் குப்பிளான் ஐ.சண்முகன் மிக லாவகமாகக் கையாள்கிறார். குஞ்சியப்பு வாயிலாக வெளிப்படும் பேச்சுவழக்கு கதைக்கு உயிர்ப்பாக அமைகிறது. “எடி பிள்ளை உதிலை ஒருக்கா தோட்டத்துக்குப் போட்டு வாறன்” என மகளிடம் குஞ்சியப்பு சொல்லும் தோறணை அச்சு அசல் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு. காட்சிகளை விளக்குவதற்குச் சண்முகன் அவர்கள் விபரணபாணியிலான மொழிநடையைக்கையாள்கிறார். சிறுகதையின் அழகியலுக்கு விபரணப் பாணியிலான மொழிநடை துணைசெய்கிறது. உதாரணமாக “மிருதுவான இளவெய்யில் மோனநிலையில் தவம் செய்வது போல பயிர் பச்சைகள் எல்லாம் அமைதியில் திளைத்துக் கிடந்தன” உவமைத் தொடருக்கூடாக முகிழும் வரிகள் கதைக்குப் புதுப் பொலிவை அளிக்கின்றன. உரையாடலில் தர்க்கரீதியான மொழிநடையையே குப்பிளான் ஐ.சண்முகன் கையாள்கிறார். குறிப்பாகத் தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உரையாடல் தர்க்கபூர்வமாகவே வெளிப்படுகிறது. சிறுசிறு வாக்கியங்களுடன் கூடிய தெளிவான எளிமையான ஆற்றுப்போக்கான மொழிநடை குப்பிளான் ஐ.சண்முகன் அவர்களின் கதைக்கு புத்துயிர்ப்பை அளிக்கிறது.

## உத்திகள்

‘ஒரு தோட்டத்தின் கதை’ குஞ்சியப்பு என்னும் தலைமை பாத்திரத்தை மையமாகக் கொண்டே நகர்த்தப்படுகிறது. முன்னோக்கு உத்திக்கூடாக நகரும் இச்சிறுகதையில் தலைமாந்தரே கதையைக் கூறிச் செல்கிறார். கதை மாந்தர்களை உருவாக்கி அவர்கள் தம்முடைய கதையை நிகழ்வுகள், சம்பவங்களுக்கூடாகப் பகிர்வதன் வாயிலாக கதை இயங்கத் தொடங்குகிறது. கதாசிரியரே கதையின் முடிவைக் கூறியும் விடுகிறார். குஞ்சியப்பு தன் மனைவியின் இழப்பு மற்றும் மகளின் இளமைக் காலத்தை நினைவு கூரும் இடங்களில் குப்பிளான் ஐ.சண்முகன் அவர்கள் நனவிடை தோய்தல் உத்தியையே கையாள்கிறார். ஆசிரியர் கதையை கூறிச் செல்வதற்கும் எளிதில் வாசகன் அதனைப் புரிந்து கொள்வதற்கும் பெரும்பாலான இடங்களில் ஆசிரியர் படர்க்கைக்கூற்று உத்தியையே கையாள்கிறார். நடப்பியல் சார்ந்த ரொமான்டிக் யதார்த்த நோக்கில் எழுதப்பட்ட இச்சிறுகதை இலட்சியவாதத்தை மையச் சரடாகக் கொண்டு பின்னப்பட்டு செம்மண் தோட்டத்தில் நிகழ்கிறது. இச்சிறுகதையில் வரும் நிலமுடையான் மக்களைச் சுரண்டுபவனல்ல. மக்களை நேசிக்கும் மனிதநேயமிக்கன். சிறார்களோடு நெருங்கிப் பழகுபவன். நேர்கொண்ட பார்வை மிக்கவன். வறுமைக்காய் வக்கற்று, தேசிக்காய் திருடுபவளைச் சமூகத்தின் முன்னிலையில் நிறுத்தி அவன் அவளைக் குற்றஞ் சாட்டவில்லை. அவளுடைய எதிர்காலத்தைச் சிந்தித்து பொதுச் சிந்தையோடு மன்னித்து அவளை அவள் போக்கிலேயே விட்டுவிடுகிறார். இப்பொதுச்சிந்தை சமூகத்தில் விதைக்கப்படவேண்டும். அவ் விதைப்பின் அறுவடையே ‘ஒரு தோட்டத்தின் கதை’.

...33ம் பக்கத் தொடர்ச்சி...

தொகையில் அங்கே சிறு தொகையும் செலவாக, ஆசிரியர்கள் மாணவர்களின் நேரமும் சக்தியும் விரையமாவது கணக்கில் வராதா ?

புலம்பெயர்ந்த நபர்களைப் பிரமுகர்களாகவும் அறிஞர்களாகவும் போற்றிக் கொண்டால் மேலும் உதவிகள் பெறலாம் என்ற நோக்கு இதிலுண்டு என்றால் அது ஆபாசமாகத் தெரியவில்லையா? இம்மாதிரி விழா எடுக்கவேண்டாம். உதவுவது நம் கடமை என்று சொல்லி அதைத் தடுக்க ஏன் இவர்களுக்கும் மனம் வருவதில்லை? ஒருவரது உதவியைப் பலரும் அறிய விளம்பரப்படுத்தினால் தான், மற்றவர்களும் செய்வார்களென்றால் , அதை சமூக ஊடக அறிவிப்புகள், சங்கங்களின் வழி அறிவுறுத்தல்கள் என்று செய்யலாமே. பாடசாலைகளும் கூட இந்த உதவி கிடைத்தது என்று அறிவிப்புப் பலகையில் அதை அன்றைய தகவலாக தெரியப்படுத்துவதோடு முடித்துவிடலாம்.

கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கான மரியாதை தான் வழங்கப்படவேண்டும். அதைத் தவிர்த்து புரவலர்களுக்கும் பணக்காரர்களுக்கும் கௌரவிப்பு வழங்கும் இடமாக அதை மாற்றிய ‘இப்ப இது தான் முறை‘ என்பது போன்ற அனாவசியங்களை நெறிப்படுத்தினால் தான் உதவிகளுக்கு அர்த்தமாகும். உண்மையான மனிதாபிமானமாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிகளின் நோக்கங்களும் விளம்பரங்களும்

**- தர்மினி**

நாங்கள் பழக்கம்-வழக்கம் என்று சொல்லிப் பின்பற்றும் பலவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தத் தயங்குகிறோம். சிலவற்றை 'இது தான் இப்போது நடைமுறை' என்று சரியான காரணங்களின்றிச் செய்து கொண்டிருக்கிறோம்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைப் பாடசாலைகளுக்கு உதவும் பழைய மாணவர் சங்கங்கள் எவ்வளவோ நல்ல வேலைகளைச் செய்கின்றன. ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய அபிவிருத்திகளைக் கூட பழைய மாணவர்கள் பண ரீதியாகத் தங்களை ஒறுத்து, நேரம் செலவழித்து, அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாகச் செய்கிறார்கள். அந்த உதவிகள் தங்கள் பள்ளிக்கூடத்தின், ஊரின், எதிர்காலச் சந்ததியினரின் முன்னேற்றத்தின் பொருட்டு ஆற்றப்படுபவை.

பல்லின மக்களை, கலாசாரங்களைக் கண்டுகொள்ளவும், புதிய சிந்தனைகளுக்கான சாத்தியங்களையும் இப்புலப்பெயர்வும் அகதிவாழ்வும் ஏற்படுத்தியிருக்கின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து நல்ல உதாரணங்களை எடுக்கவும் முடியும். அப்படியாகப் புதிய புதிய திட்டங்களை, வளர்ச்சிகளை முன்னெடுப்பதும் பொருளாதாரத்தில் தம்மால் இயன்றளவு பகிர்ந்து கொள்வதும் உண்மையாகவே உதவிதான்.

ஆனால், இவ்விதமான உதவிச் செயற்பாடுகள் அங்கே நடைமுறைப் படுத்தப்படும்போது அவை தன்னலமற்று வழங்கப்படுகின்றனவா? பெற்றுக் கொள்பவர்கள் தாழ்வு மனப்பான்மையின்றி அவற்றை வாங்கிப் பயனடைகிறார்களா?

நம் பாடசாலைகள் தான் சமூகத்தின் முன்மாதிரியாக இருக்க வேண்டியவை. எளிய வழிமுறைகள், எளிமையான ஆடைகள், சமத்துவம், பகுத்தறிவு என்று இருக்கவேண்டிய கல்வி நிலையங்களில் வீணான கொண்டாட்டங்கள் ஏன் செய்யப்படுகின்றன? புலம்பெயர்ந்து வாழ்ந்த ஒருவர், தான் படித்த பள்ளிக்கு உதவி செய்கிறாரென்றால் அதை ஏன் ஒரு விழாவாகச் செய்ய வேண்டும் ? அவர் அதைச் செய்யவில்லையென்றால் பாடசாலைச் சமூகம் ஏன் அதைச் செய்கிறது? ஒருவரோ அமைப்போ செய்த உதவியின் தொகையில் ஒரு பங்கு இதற்குக் செலவாகும்போலிருக்கிறது. இதை விட அந்த விழாவின் பொருட்டு பள்ளிக்கூடமும் நேரத்தைச் செலவழிப்பது போல தெரிகிறது. ஒருவர் தன் சுய விருப்பிலோ அல்லது பழைய மாணவ சங்கங்களோ உதவும் மன நிலையில் செய்யும் அபிவிருத்திகளை, உதவிகளை விளம்பரப்படுத்தி இன்னும் பலரையும் இதைச் செய்ய ஈர்க்கும் உத்தியாக இது மலினமாக இருக்கிறது.

உண்மையாகவே உதவ நினைப்பவர்கள் அதைச் செய்வார்கள். அதற்கு விளம்பரம் அவசியமில்லை. ஒளிப்படங்கள் சாட்சியம் சொல்லத் தேவையில்லை. வலதுகை கொடுப்பதை இடதுகை அறியக் கூடாதென்ற முதுமொழி வழக்கொழிந்து போய்விட்டதா? ஊருக்கோ பள்ளிக்கோ பொருளாதாரத்தில் பின் தங்கியோருக்கோ உதவுவது என்று செலவழிக்கும் ஒருவருக்கு, சால்வைகளை வாங்கவும் மாலைகளைப் போடவும் பணத்தைச் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேளதாளங்களை இசைத்து வரவேற்கும் மாணவர்களுக்கு நேரச்செலவு.

இந்தச் சால்வை குளிருக்குப் போர்த்துவதாக இருந்தால் கூட பரவாயில்லை. மதிப்பளிப்பதாகக் கூப்பிட்டு சால்வையை ஏன் போர்த்துகிறார்கள்? பொதுச்சனம் மேலாடை அணியத் தடுக்கப்பட்டிருந்த காலமொன்றில் மேலாடை அணிவிப்பதை ஒத்த செயலாக ஒருவரது தோளில் போர்த்தி மரியாதை செய்கிற வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். அது ஒருவர் கௌரவிக்கப்படுவதன் அடையாளமாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அது எதற்கு? அது பெறுபவருக்கு உபயோகமாகவாவது இருக்க வேண்டாமா? 'இப்ப இது தான் வழக்கம்' என்ற ஒரு வசனம் எல்லாவற்றுக்கும் வசதியாகிப் போனது.

ஊரில் பிரமுகராகக் குளிர்வித்து விட்டால் மேலும் காசு உதவி கிடைக்குமென்ற கணக்கு இவை போன்ற விழாவெடுக்கும் வேலைகளில் புலப்படுகிறது. பள்ளிக்கூடத்திற்கான உதவித்

....32 ம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# தஞ்சம் தரும் ஊர்

- வித்தகபுரத்தான் -

**பெரிய** கோவிலின் நிழல் விழாத கோபுரத்தைப் பார்த்தவாறு ஒரு படிக்கட்டுப் போல் இருந்த இடத்தில அந்தி மாலைப் பொழுதில் அமர்ந்திருந்தேன். செந்நிறமும் நீலமும் கலந்த வானத்தில் முகில்களைக் காணவில்லை.

"இன்று முகில்களைக் காணவில்லை, இதை ஊரிடம் சொல்லப் பயமாக இருக்கின்றது" என்ற அற்புதமான கவிதை வரிகளை யார் எழுதினார் என்பதை மறந்துவிட்டேன். ஆனால் இந்த ஊர்க்காரராகிய பிரகாஷின் பல சிறுகதைகள் ஞாபகத்துக்கு வந்தன. சிறந்த கதைகள் எழுதியும் இலை மறை காய் மறையாகவே அறியப்பட்டவர். நிறைய சுற்றுலாப் பயணிகள் நந்தியின் அருகில் நின்று ஸ்மார்ட் போனில் படம் பிடித்தார்கள். வேட்டி அணிந்த எவரையும் காணவில்லை. என்னுடன் வந்தவர்கள் எல்லோரும் கோவிலின் உள்ளே பிரகதீஸ்வரருக்கு அர்ச்சனை செய்யமுடியுமா என பார்ப்பதற்குச் சென்று விட்டார்கள். ஆயிரம் வருடத்துக்கு முன்பு கிரேன் இல்லாமல் எப்படி கட்டி இருப்பார்கள் என்று யோசிக்கும் போது சிறிதாகச் செருமும் சத்தம் பக்கத்தில் கேட்டது. மரூன் குர்தா அணிந்தபடி, ஒரு வார பெப்பர் சால்ட் தாடியுடன் சிகப்பாக சிறு நாமம் போட்டபடி என்பக்கத்தில் முதுமையின் வாசலுக்கு நுழைய போகும் வயசில் அமர்ந்திருந்தார்.

சார் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறீர்களா?

எப்படி கண்டுபிடிச்சீங்க?

cargo pants- baseball cap காட்டிக்கொடுத்துவிட்டது.
cargo pants - wallet, பாஸ்போர்ட், ஸ்மார்ட் போன், சாவிகள் எல்லாம் வைப்பதற்கு சுலபம்.
baseball cap - வெயிலிடம் இருந்து கண்ணை பாதுகாக்க, அது சரி, உங்களுக்கு எப்படி தெரியும் இவை எல்லாம்?

என்னுடைய பையனும் அமெரிக்காவில்தான். அதை விட நான் நிறைய வாசிக்கிறேன்.

வேறு என்ன தெரியும் அமெரிக்கக்காரர்களை பற்றி ?

விடுமுறைகளிலும் சுடு தண்ணி காலில் பட்டமாதிரி அவசரப்படுவார்கள், நடையில் விடுமுறையை மறந்த வேகம் இருக்கும். டிப்ஸ் கொடுப்பார்கள். ஹோட்டலில் சேவை சரியில்லை என்றால் கோபம் கொள்வார்கள். Online-Review எழுதுவேன் என்று பயம் காட்டுவார்கள். எங்கள் ஊருடன் ஒப்பிடுப்போது உங்கள் காபி கப், கார், SUV, வீடுகள், ரோடுகள் எல்லாமே மிகவும் பெரிசாக இருக்கும். அங்குலம், அடி, மைல், பவுண்ட் என்று பழைய இம்பீரியல் சிஸ்டம் இன்னும் வைத்திருக்கிறீகள். எப்போ மெட்ரிக் சிஸ்டத்துக்கு மாற போறிங்கள்? உரத்து கதைப்பார்கள், அந்நியர்களுடனும் பேசுவார்கள்.

நீங்களும் அந்நியர்களுடன் பேசுகிறீங்களே?

நீங்கள் இன்று என் பேச்சுத் துணை . பேசினால் தான் மனசு லேசாகும்.

நன்றாக அவதானித்திருக்கிறீர்கள், வேலை விடுமுறை காலத்திலும் ப்ராஜக்ட் பற்றி யோசனைதான். திரும்பிப் போகும்போது வேலை இருக்குமோ என்கின்ற அச்சம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எப்போதுமே இருக்கும். அதனால்தான் மூன்று கிழமைக்கு மேல் லீவு எடுப்பதில்லை.

உலகத்திலேயே விடுமுறை குறைய எடுக்கிற நாடு உங்கள் நாடுதான். உங்கள் தமிழில் மலையாளம் கலந்த வாடை வருகின்றது.

இலங்கை தான் பூர்வீகம். எங்கள் ஊரில், பிரிட்டிஷ் காலத்திலும் பிறகும் நிறைய மலையாளி பட்டதாரிகள் ஆங்கில மீடியத்தில் உயர்தர வகுப்பில் படிப்பித்தார்கள். எங்கள் ஊரில், மலையாளிகள் மாதிரி புட்டு, இடியப்பம் தான் முதல், பிறகுதான் இட்லி, தோசை. இலங்கைத் தமிழ் "பறைஞ்சு" கொள்ளும்போது, மலையாளம் வாடை கொஞ்சம் வரும். மகனையும் மகளையும் என்ர மோன், மோள் எனும் வழக்கமுண்டு. அது சரி, புட்டு, இடியப்பம் சாப்பிடுவதற்கும் தமிழில் மலையாள வாடை வருவதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?

ரொம்ம தமாஷாகப் பேசுகிறிங்கள்.

அது சரி, மனசு லேசாகும் என்கிறீர்களே. செக்கவோவின் சலிப்பு கதை மாதிரி எதையாவது இறக்கி வைக்கிறது என்றால் சொல்லுங்கள். இன்று நான் தான் உங்கள் குதிரை.

அந்தக்கதையை நானும் வாசித்திருக்கிறேன். பொழுது போவதற்கு யாருடனாவது பேசுவதுதான் எனது பொழுதுபோக்கு. மொபைல் நோண்டுவதும் தொலைக்காட்சி பெட்டியும் பிடிப்பதில்லை. இந்த வயசிலும் இலக்கிய வாசிப்பு என்னை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

நீங்கள் என்னைப் போலவே பழைய பள்ளிக்கூடம்! இலங்கை இலக்கியங்கள் எதாவது வாசித்திருக்கிறீர்களா?

வாசித்திருக்கிறேன், பல சொற்கள் புரிவதில்லை. திருச்சிப்பக்கம் தான் சொந்த ஊர். எனக்கு ஐந்து பிள்ளைகள், முதல் இரண்டும் பையன்கள். பின்பு மூன்று பொண்ணுகள். இங்கு ஒரு பொண்ணு இருப்பதால் இங்கு ஒரு அறையை வாடகைக்கு எடுத்துத் தங்குகிறேன். ஹோட்டல் தான் சாப்பாடு.

எங்கள் ஊரில் பெற்றோர் மகளுடன் தான் கடைசி வரைக்கும். இங்கு வழக்கமாக பெற்றோர் மகனுடன் தான் கடைசி வரைக்கும்?

நானும் மனைவியும் இரண்டாவது மகனின் குடும்பத்துடன்தான். கடைசி இரு பொண்ணுங்களும் கல்யாணமாகி செட்டிலாகிட்டாங்க. நான் மட்டும் இந்த ஊருக்கும் திருச்சிக்குமாக அலைந்து கொண்டிருக்கிறேன். என் தலை விதி.

உங்கடை மூத்த பொண்ணு இந்த ஊரில் வேலை பார்க்கிறாங்களா?

இந்த ஊருக்கு எங்கள் ஒருவருக்கும் சொல்லாமலே பல வருடங்களுக்கு முன் வந்துவிட்டாள். ஆனால் இங்கு வந்த மறுநாளே போன் பண்ணி இங்கு இருப்பதாகவும் யாரும் தன்னைத் தேடி வரவேண்டாம் என்று சொல்லி விட்டாள்.

அப்படி என்ன கோபம் உங்களோடு?

என் மீது மட்டுமல்ல. எங்கள் குடும்பத்தோடு, இந்த சமூகத்தோடு, எல்லா தெய்வங்களோடு. அவள் தன் சிநேகிதிகளுடன் இந்த ஊரில் ஓரிடத்தில் தங்கியிருக்கிறாள். என்னிடம் சரியாய்ப் பேசுவதில்லை. தனது இருப்பிடத்துக்கு வர வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். அவள் தன் சிநேகிதிகளுடன் நிற்குமிடத்துக்கு நான் போய் அவளை தூரத்தில் இருந்து பார்ப்பேன். கிட்டப் போகப்பயம். ஏன் இங்கு வந்தாய் என்று எல்லோர் முன்னிலையிலும் ஒருமுறை கத்தி விட்டாள். அத்தி பூத்தாற்போல எப்பாவது 'அப்பா' என்பாள். அதை கேட்கத்தான் இந்த ஊரில் அலைகின்றேன்.

இன்று உங்கள் மகளைப் பார்த்தீர்களா?

ஒரு மணி நேரத்துக்கு முன்பே அவளைப்பார்த்தேன். அதோ அந்த ரோட்டுக்கு அப்புறம் இருக்கும் பார்க்கிங் ஏரியாவில் தன் சிநேகிதிகளுடன் நின்றாள். அவள் கலகலப்பாக தன் சிநேகிதிகளுடன் சிரிப்பதைத் தூர இருந்து பார்த்தேன். பேசாமல் பிரகதீஸ்வரர் சந்நிதியில் உட்கார்ந்து விட்டு அறைக்கு போய் விடுவேன். இடையில் உங்களுடன் பேசுவது ஆறுதலைத் தருகின்றது.

எனது tube light மூளைக்குள் பொறி தட்டியது. தெய்வங்களோடு கோபம் என்றபோதே பிடித்திருக்க வேண்டும். எங்கள் டிரைவர் வானை பார்க் பண்ணும்போதே சொன்னார். காசு கேட்பார்கள். கொடுக்க வேண்டாம் என்று. ஒரு ஆளுக்குக் கொடுத்தால் எல்லாருக்கும் கொடுக்க வேண்டுமென்று. இவர்களுடன் Eye contact வேண்டாம். விரைவாக நடந்து வாருங்கள் என்று சொன்னதும் பார்க்கிங் இடத்திலிருந்து நிலத்தை பார்த்தபடி விரைவாக வெளியேறியது ஞாபகம் வந்தது. என் மீது வெறுப்புற்றேன்.
மூன்றாம் பாலினம் வருவது உங்களின் பிழை இல்லையே.

அதை எனது மகளுக்குப் புரிய வைக்க முடியாமல் இருக்கிறது. மற்ற நாலு பேரையும் ஒழுங்காத்தானே பெத்தே! நான் மட்டும் ஏன் இப்படி என்று எரிந்து விழுவாள். என் நெஞ்சும் எரியும்.

அது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. மரபணுக்களில் ஏற்படும் பிரச்சனைகள், அல்லது அசாதாரண குரோமோசோமால் ஏற்படுகின்றது. தாய் தந்தையரில் பழி போடமுடியாது. ஔவையார் இன்றிருந்தால் கூன், குருடு, செவிடு, பேடு, ஆட்டிசம் நீங்கிப் பிறத்தல் அரிது என்று பாடியிருப்பார். பேடு என்ற சொல் ஔவையார் காலத்துக்கு முன்பே இருந்திருக்கிறது. நான் இருக்கும் நியூ ஜெர்சியில் பல குழந்தைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டிசம் பாதிப்பு இருக்கிறது.

ஆட்டிசம் எதனால் வருகின்றது?

இன்னும் சரியான காரணம் கண்டு பிடிக்க படவில்லை. ஆனால் பலவற்றைச் சந்தேகிக்கிறார்கள். சுற்றுச்சூழல் காரணிகள், காலம் தாழ்த்திக் கல்யாணம் பண்ணுதல்...

யார் இவங்களை நாளும் பொழுதும் பார்க்கிறாங்க?

பெத்தவங்க தான்

அப்போ, பெத்தவங்க இல்லாத காலத்தில் யார் பராமரிப்பாங்க?

நெஞ்சைப் பிழியிற கேள்வி. சகோதரங்கள் அல்லது அரசாங்கப் பராமரிப்பு தான். ஆனால் பெத்தவங்க பாக்கிறமாதிரி ஒன்றும் வராது. உங்க மகளை நீங்க பார்க்கத் தேவையில்லை. அவளே தன்னைப் பார்த்துக் கொள்வாள்.

என் ஆறுதலுக்கு சொல்கிறீர்கள். ஆனா ஆண்டவனையும் அடிக்கடி திட்டுவாள்.
இப்படியானவர்களை அமெரிக்காவில் எப்படிப் பார்க்கிறார்கள்?

திருநங்கைகள் தங்களுடைய பாலின அடையாளத்துடன் பொருந்தக்கூடிய கழிப்பறையைப் பயன்படுத்துவது போன்ற அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காக மேற்கொள்ள வேண்டிய சில சட்டப் போராட்டங்களைப் பற்றி கேள்வி பட்டிருக்கிறேன். பாரபட்சத்துக்கு அஞ்சாமல் அனைவரும் தாங்களாகவே இருக்கக்கூடிய ஆதரவான சூழலை உருவாக்குவதே அரசாங்கத்துக்கு மட்டுமல்ல மக்களுக்கும் இருக்கின்றது என்பதை அங்குள்ள பலர் உணர்ந்திருக்கிறார்கள். திருநங்கைகள் உள்ளடங்கிய பணியிடங்களை உருவாக்க நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் மேற்கொண்ட சில முயற்சிகளைப் பற்றி செய்திகளில் படித்தேன். இந்த உரையாடல் உலகம் முழுதும் தொடர்ந்து வளரும் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினைகளைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறோமோ, அவ்வளவு முன்னேற்றம் அடைய முடியும். ஐந்து விரல்களும் ஒரே மாதிரி இல்லையே?

ஆமா, என் ஐந்து பிள்ளைகளும் ஐந்து விதமான உயரம்.

கவலையிலும் ஜோக் அடிக்கிறீர்கள். உங்களைப் பிடித்திருக்கிறது. ஒரு நாடு நல்லா இருக்க ஒரு ஊரைத் தியாகம் செய்யலாம். ஒரு கிராமம் நல்லா இருக்க ஒரு குடும்பத்தைத் தியாகம் செய்யலாம். ஒரு குடும்பம் நல்லா இருக்க ஒருவரைத் தியாகம் செய்யலாம் என்று வேதத்தில் சொல்லி இருக்கிறார்கள்.

மகா பாரதத்தில் என்று ஞாபகம். ஆனால் என் மகளைத் தியாகம் செய்யச் சொல்கிறீர்களா?

இல்லை, உங்கள் மகள், தன் குடும்பத்தையே தியாகம் செய்துவிட்டாள். அதன் மூலம் கடைசி இரு சகோதரிகளுக்கும் கல்யாணம் பேசிக் கட்டுவதில் தன்னால் ஏதும் தடங்கல் வரக்கூடாது என்று வீட்டை விட்டு இந்த ஊருக்கு வந்திருக்கலாம்.

பக்கத்தில் இருந்து பார்த்த மாதிரிப் பேசுகிறீர்கள். ஆரம்பத்தில் நிறையவே சண்டை போட்டாள். இரண்டாவது பையன் அடித்தே போட்டான் ஒருநாள். அப்புறம் இரு வாரங்களுக்கு யாருடனும் பேசவில்லை. திடீரென இந்த ஊருக்கு வந்துவிட்டாள். வாஸ்தவம்தான். இவள் இங்கு வந்து சில வருடங்களுக்கு அப்புறம்தான் கடைசி இரு பொண்ணுகளும் கல்யாணம் பண்ணிகிட்டாங்க. மற்ற சகோதரங்கள் நல்லா இருக்கோணும் என்று வீட்டை விட்டு வெளியேறியவள் என்றால் இவள் எங்கள் சாமி தான்.

கண்களை மூடி இருந்தார், அவருக்கு மிகவும் அருகாமையில் அரக்கி அமர்ந்தேன், விசும்பும் சத்தம் என் நெஞ்சை உருக்கியது. மேலும் அரை மணி நேரத்துக்கு அவர் எதுவும் பேசவில்லை. நானும் அவரருகில் கண்களை மூடி அமர்ந்திருந்தேன்.
என்னுடன் வந்தவர்கள் ஆரவாரித்துக்கொண்டு எங்கள் திசையை நோக்கி வந்தார்கள். அவர்களின் கண்களில் தெரிந்த சந்தோஷம் நிலைமைக்குப் பொருத்தமில்லாமல் இருந்தது.

சார், hope, you feel little better now என்றேன்.

சார், எனக்கு ஒரு உதவி செய்யமுடியுமா? நான் கொடுத்தால் வாங்க மாட்டாள். இந்த ஆயிரம் ரூபாவை மஞ்சள் சுடிதாரில் இருக்கும் என்மகளிடம் கொடுக்க முடியுமா?

அவள் அங்கு இல்லாவிட்டால் என்ன செய்வது?

எதாவது உண்டியலில் போடுங்கள். என் பாவம் தொலையட்டும்.

வேண்டாம் சார். மஞ்சள் சுடிதாரில் உங்கள் மகளைப் பார்த்தால் நிச்சயம் என்னுடைய ஆயிரம் ரூபாவைக் கொடுப்பேன். கவலையை விடுங்க சார்.

கைகளைப் பற்றினார். பனித்திருந்த கண்களை வேறு-புறம் திருப்பினார். மௌனித்தார்.

தெருவைக் கடந்து பார்க்கிங் ஏரியா பக்கம் எல்லோரும் சென்றோம். யாராவது மஞ்சள் சுடிதாரில் தென்படுகிறர்களா என வீதியிலேயே அவதானிக்க தொடங்கிவிட்டேன். பார்க்கிங் ஏரியா வெறுமையாக இருளோடிப் போய், வானத்தில் தேய்பிறை மஞ்சளாகவும் மங்கலாகவும் தெரிந்தது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org




# மரியாதை

–விஜி நாகராஜா

இந்தச் சொல்லின் அர்த்தம் எம் வாழ்க்கையில் அடிக்கடி உணரப்படுகிறது.

மரியாதை என்பது கேட்டுப்பெறுவதில்லை. அது கொடுத்துப் பெறுவது. நாம் மனிதனாக வாழ்வதே நமக்குக் கிடைத்த வரம். இதில் நமக்குச் சுயமரியாதை மிக அவசியமாக இருக்கிறது. எமது தகுதிகளை உயர்த்திக்கொண்டு மற்றவர் மதிக்க வாழ முற்படுவதுதான் சுயமரியாதை யின் அடிப்படை.

நாம் மரியாதையையும் ஒழுக்கத்தையும், நமது பெற்றோர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் கற்றுக்கொள்கிறோம். பாடசாலைக் காலங்களிலிருந்து பயிற்சி செய்யாவிட்டால் வளர்ந்து பெரியவர்களாகும்போது அதற்கான வெகுமதி நமக்காகக் காத்திருக்கும்.

நமது மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நாம் முதலில் மரியாதையைச் சம்பாதிக்கவேண்டும். மரியாதையைச் சம்பாதிக்கவேண்டுமென்று பலர் தவறான எண்ணங்கொண்டு பணத்தைச் சம்பாதிக்கின்றனர். வீடு, வாகனம், விலை உயர்ந்த உடுப்புகள் என்று பணத்தைச் செலவு செய்வதன் மூலம் பிறர் தம்மை மதிப்பார் என எண்ணுகின்றனர்.

நாம் மற்றவர்களுடன் பேசும் போது அடுத்தவர் மனதைப் பாதிக்காது பேசக் கற்றுக் கொள்ளவேண்டும். நாம் குறைவாகப் பேசுவதும், தேவையற்ற இடத்தில் பேசாதிருப்பதும் நல்லது.

வளர்ந்துவரும் சமுதாயத்தில் மரியாதை என்பது வேண்டப்படாத, அவசியமற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது. இதற்குக் காரணம் பெற்றோர்களா? அல்லது பிள்ளகளா?

நமது இளைய சமுதாயம் வித்தியாசமான சூழ்நிலையில், மதம், மொழி, மாறுபட்ட கலாசாரச் சூழலில் வாழ்கிறார்கள். ஆனாலும் எல்லாக் கலாசாரத்திலும் மரியாதை என்பதன் அர்த்தம் பொதுவானது. எல்லோராலும் அது விரும்பப்படுகிறது.

இதில் பெற்றோர்கள் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறார்கள். பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலைதான். அதிகமாக இது ஒரு தாயிடமிருந்தே எதிர்பார்க்கப்படுகிறது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே.
பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்க்கையிலே" என்கிறார்
கவிஞர் புலமைப்பித்தன்.

சில பெற்றோர்கள், தமது பிள்ளைகளுக்குத் தேவையான உணவு, உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்தால் போதும். அதுவே பிள்ளை வளர்ப்பு என்று எண்ணுகின்றனர். சில பெற்றோர், படிப்பைக் கொடுத்தால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆனால், நல்ல ஒழுக்கத்தையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பையும் பிள்ளைகளுக்கு கொடுப்பதே சரியானது.
அதுவே அவர்களை இந்த உலகில் மரியாதை யுடன் வாழ வகைசெய்யும்.

அண்மையில் வீட்டுக்கு வந்த நண்பர் ஒருவர் தன்னுடைய அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்துகொண்டார்.

அவருடைய மகன் அவுஸ்திரேலியாவில் உயர்தரவகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார். ஒரு முறை அவரைக் காரில் கூட்டிச்சென்றுகொண்டிருந்தபோது, அவர்கள் அந்த மகன் படித்த ஆரம்ப பாடசாலையைக் கடக்கவேண்டி இருந்தது. அப்போது எமது நண்பர் மிகவும் பரபரப்பாக "இங்க பார், இது தான் நீ முதலில் படித்த பாடசாலை" என்றார். அத்தோடு நில்லாது, உனக்குப் படிப்பித்த ஆசிரியர்கள் இப்போது எங்கிருக்கிறார்களோ எப்படி இருக்கிறார்களோ என்றும் கேள்வி எழுப்பிக் கவலைப்பட்டார்.
அதற்கு மகன் ஆச்சரியமாகத் தந்தையைப் பார்த்து 'அப்பா, இதுக்கு ஏன் இவ்வளவு பரபரப்பாகிறீர்கள்' என்று கேட்டான்.
அப்பா இது அரசாங்கப் பாடசாலை, அவர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது. இதில் நாங்கள் பரபரப்படைய என்ன இருக்கிறது? என்று இன்னும் சாதரணமாக அடுத்த கேள்வியையும் கேட்டான்.

நண்பருக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

'அப்பா நீங்கள் முதல்ல வேலை செய்த இடம் ஞாபகமிருக்கா? இப்பவும் அதையே நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா? அதுபோலத்தான் இதுவும்' என்றான்.

அதற்கு அவர், நன்றி உணர்வு வாழ்க்கையில் அவசியம் என்றார். எங்கள் பெற்றோர், ஆசிரியர்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்றார்.
அப்பா, இதிலென்ன நன்றி உணர்வு என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளிவைத்தான் அவன்.

அவருக்கு மட்டுமல்ல எங்களுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

நன்றி உணர்வு என்பது அவசியமானது. எங்களை யார் யார் உயர்த்திவிட்டார்களோ அவர்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பதும், மரியாதை செய்வதும் அவசியமானது. நாங்கள் இன்னும் எமது ஆசிரியர்களை மனதில் நினைத்துக்கொள்கிறோம்.அவர்களுக்குரிய மரியாதைகளை வழங்க காத்திருக்கிறோம்.

எமது அடுத்த தலைமுறை வேறுவிதமாகத்தான் சிந்திக்கிறது.

மரியாதை பற்றி கனேடிய உளவியலாளர் Jordan Peterson இப்படிக்கூறுகிறார்.
"உங்களுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை எல்லோரும் கொடுக்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் உயர் மதிப்புள்ள மனிதரக இருக்கவேண்டும். முக்கியமாக நீங்கள் சுய மரியாதை உள்ளவராகவும், நம்பிக்கை உள்ளவராகவும் இருக்கவேண்டும். உங்கள் மதிப்பு எப்படிப் பட்டது என்பது முக்கியமானது. எல்லாத் துறைகளிலும் நீங்கள் சிறிய சிறிய அளவாவது கற்றுக்கொண்டு உங்கள் சுயவிருத்தியை அதிகரிக்கவேண்டும்"

"நீங்கள் மற்றவர்களை எவ்விதம் நடாத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் மற்றவர்களும் எம்மை நடாத்துவர்கள்"

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

வளர் இதழ் -8

எழுத்து ஒப்புநோக்குனர்
புனிதா கணேஸ்
சுப. கிருஸ்ணானந்தன்
இதழ் வடிவமைப்பு : மனோ
அச்சுப்பதிப்பு நிதி உதவி :
சின்னையா ரவீந்திரன்
படங்கள் : நன்றி Google

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பஞ்சகல்யாணியின்

# கதைமரம்



ஐந்தில் வளையாதது
ஐம்பதில் வளையுமா?

## நூலாசிரியருடன் சில நிமிடங்கள்...

**○ சிறுவர் கதைகளை எழுதவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?**

விசேட தேவையுடைய குழந்தைகளிற்கான சிகிச்சை வழங்குமிடத்திற்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு குழந்தைகளை எப்படிக் கையாள வேண்டும் என்று கற்றுத் தந்தார்கள்.அந்த அனுபவங்களை மனதில் வைத்துக் கதைகள் எழுதி னேன். அத்துடன் சிறுவர் கதைகளென்று வரும் பல நூல்கள் போட்டி, பொறாமை, கொலை போன்ற பாதகமான செயல்களைச் சொல்லி நிற்பதைக் கண்டேன்.எனவே அவற்றைத் தவிர்த்து நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லும் அறிவு பூர்வமான கதை-களை எழுதினேன்.

**○ உங்களுக்குப் பிடித்த சிறுவர் கதை ஆசிரியர் யார்?**

- விருப்பத்திற்குரிய சிறுவர்கதை ஆசிரியர் என்று யாரும் இருக்கவில்லை, ஏனெனில் கோகுலம், அம்புலிமாமா என்பவற்றில்தான் கதைகளைப் படித்தேன். எமது காலத்தில் அந்தப் புத்தகங்களே எமக்குக் கிடைத்தன. ரஷ்ய மொழி பெயர்ப்புக் கதைகளெல்லாம் வாசிக்கவில்லை.யார் எழுதியிருந்தாலும் வாசித்தேன்.

**○ படித்ததில் பிடித்த சிறுவர் கதை எது?**

- சிங்கமும் முயலும்

கிணற்றுக்குள் சிங்கத்தின் விம்பத்தைக் காட்டி இன்னொரு சிங்கமென்று ஏமாற்றி விழுத்திய கதை

கொடுமை செய்பவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பது எமது சிறுபராய எண்ணம்.
அது போர்ச்சூழலில் வளர்ந்ததன் விளைவாக இருக்கலாம்.
ஆனால் வளர்ந்த பின் மன்னிப்பு, சமாதானம், அன்பு, விட்டுக் கொடுப்பு என்பவற்றைப் பல சமயத்தில் கைக் கொள்கின்றோம்

**○ உங்கள் சிறுவர் கதைகளின் வாசகர் யார்?**

- நிச்சயமாகச் சிறுவர்கள்தான். அத்துடன் சிறுவர்களின் பெற்றோர்களும் வாசிக்கின்றார்கள்.

**○ வாசகர்களுக்கும் உங்களுக்குமான தொடர்பு எப்படி இருக்கிறது?**

- எழுதிக் கொண்டிருக்கும் போதே அவற்றை என் குழந்தைகளிற்குக் கூறுவேன். அத்துடன் என் நணபர்கள் சகபாடிகளிற்கும் எனது நூல்களைக் கொடுப்பேன். அவர்கள் நன்றாக இருக்கிறது என்று சொல்லும் போது சந்தோசப்படுவேன். அது பல விருதுகளிற்குச் சமன்.
அதைவிட திரு பா. ரகுவரன் என்ற ஆசிரியர் என்னுடைய சிறுவர் நாடகங்களைப் பழக்கி மேடையேற்றியுள்ளார். சில சஞ்சிகைகளிலும் என் கதைகளைப் பிரசுரித்தனர்.

திரு. லெ.முருகபூபதி, புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், திரு.பா.ரகுவரன், திரு. வேல் நந்தன், ஐ பீ சி தமிழ், வட கோவை வரதராஜன், பத்திரிகையாளர் சர்வானந்தா போன்றோர் என்னுடைய சிறுவர் நூல்கள் பற்றிப் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் பேசியுள்ளனர். மேலும் எனது நூல்களிற்கு முன்னுரை எழுதிய மறைந்த குப்பிளான் ஐ. சண்முகன் மற்றும் Dr. M. K. முருகானந்தன், Professor வை. சுந்தரேசன், Professor. செ.கண்ணதாசன் ஆகியோர் மேலும் மேலும் நான் எழுதுவதற்குத் தமது எழுத்து மூலம் தூண்டினர்.

**○ சிறுவர் கதைகளின் அவசியம் என்ன என்று கருதுகிறீர்கள்?**

இலங்கையில் இன்றைய சிறுவர்களிற்கு விளையாடக்கூட நேரமில்லாத கற்றற் சுமை. பெற்றோர்கள் அதற்குப் பெரிய காரணம். வாசிப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு தேவையில்லாத விடயங்கள் எனவும் குழந்தை படித்தாலும் கதைத்தாலும் கல்வி பற்றித்தான் இருக்கவேண்டுமென்றும் பெற்றோர் நினைக்கின்றனர்.

அதோடு பிள்ளைகளிற்குச் சரி பிழை சொல்லிக் கொடுக்கவும் பெற்றோருக்கு நேரமில்லை விருப்பமும் இல்லை. எனவே நல்லவற்றை எழுதுவோம் வாசிப்பவர்கள் வாசிக்கட்டும் மற்றவர்களிற்கும் சொல்லட்டும் என்று என்னால் இயன்றவரை சிறுவர்களின் நன்னடத்தைக்கும் மகிழ்ச்சிக்கும் அறிவிற்கும் உதவுவோம் என நினைத்து இந்தக் கதை களை எழுதினேன். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

அத்துடன் பிள்ளைகள் இயற்கையை நேசிக்க வேண்டும் பாதுகாக்க வேண்டும் என்பது எனது பேரவா. அதனால் கதைகளை இயற்கையை அண்டியே எழுதினேன்.

கதை மரம் என்ற இந்நூலில் வழமை போலவே பூச்சி கள், ஈரூடகவாழிகள்,மிருகங்கள், பறவைகள், நிலா, விசேடதேவை உடையோர், முதியோர், மரங்கள் என்று எல்லாரும் வாறமாதிரிக் கதைகள் இருக்கு.
அத்துடன் விடுகதைகள், பழமொழிகளும், அறிவுரை களும் கதைகளில் உண்டு.
மேலும் ஆவணப்படுத்தல் எனக்குப் பிடித்த விடயம். தாத்தா கட்டிய பட்டம் என்பது அப்படியான ஒரு கதை ஆகும்.

பெரிய எழுத்துக்களுடன் அழகிய வர்ணப் படங்கள் சேர்த்துப் புத்தகம் ஆக்க விருப்பம் இருந்தாலும் அதற்குரிய செலவு அதிகம் என்பதால் அப்படி முயற்சிக்கவில்லை.

சிறுவர்கள் வாசிப்பதோடு நின்றுவிடாது எழுதவும் வேண்டும் என்பது எனது ஆசை.



என்னுடைய நூல்களுக்கு
அட்டைப்படங்களை
வரைந்தவர்
என்னுடைய மகள் புராதனி.
வயது 9.

– பஞ்சகல்யாணி

## ஆசிரியரின் பிறநூல்கள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்காம யாத்திரை

- சஞ்சயன் செல்வமாணிக்கம் -

சித்தாண்டி அப்புவின் கதைகள்தான் எனக்குள்ளும் யாத்திரை செல்லும் ஆர்வத்தை விதைத்திருக்க வேண்டும். காடுபற்றி அவருக்கு அனைத்தும் தெரிந்திருந்தன. என்ன பறவை, மிருகம், பூச்சி, மரம் என்றும், விலங்குகளின் காலடிகள், எச்சங்கள், ஒலிகள், பழக்க வழக்கங்கள் என்று காட்டையே தனது உள்ளங்கைக்குள் வைத்திருந்தார். அவரது காலத்து மனிதர்கள் ஏறத்தாழ அனைவரும் அப்படியே இருந்தனர்.

எனது பால்யத்தில் தந்தையின் நண்பரான கந்தப்பு சித்தாண்டியிலிருந்து நாம் வாழ்ந்திருந்த பிபிலைக்கு வருவார். இருவரும் அங்கிருந்து புறப்பட்டுக் காட்டுப் பகுதிக்குள்ளால் நடந்து, கதிர்காமம் சென்று திரும்புவார்கள். ஏறத்தாழ இரண்டு வாரங்கள் அவர்கள்பற்றி எந்தச் செய்தியும் இருக்காது.

புறப்படும்போது தலையிலும் கையிலும் ஆளுக்கு இரண்டு சாக்குகளில் அவசியமான பொருட்களை எடுத்துச் செல்வார்கள். நெகிழிப் போத்தல்கள், பொருட்கள் இல்லாத இல்லாத காலம் அது. ஆளுக்கு ஒரு சாரயப்போத்தலில் தண்ணீர் இருக்கும்.

இருவரும் கடும் சுருட்டு மற்றும் சாராயப் பிரியர்கள். சுருட்டின்றி அவர்களுக்குக் காலைக்கடன் கழியாது. இருந்தாலும் கதிர்காமத் திருவிழா தொடங்கியவுடன் அவற்றை விட்டுவிடுவார்கள்.

சித்தாண்டியப்பு யாத்திரை முடிந்துவந்தபின் சில நாட்கள் எங்கள் வீட்டில் தங்கியிருக்கும்போது காட்டுப் பாதைகள், விலங்குகள், பறவைகள், ஆறுகள்பற்றியும் ஆபத்தான பகுதிகளில் மரங்களில் ஏறித் தங்கியதையும், பந்தம் எரித்து யானைகளைக் கலைத்த காட்சிகளையும், காட்டெருமைகளிடமிருந்து எவ்வாறு தப்பியதென்றும், சந்தித்த யாத்ரிகள் பற்றியும், இறுதி நாட்களில் உணவு தீர்ந்து, கிடைத்த பழங்களையுண்டு, பசியில் நடந்து, கதிர்காமம் சென்றதையும் விறுவிறுப்புக் கலந்த கதை கதையாகச் சொல்லுவார்.

"அப்பாவிடம் சொல்லி என்னையும் அழைத்துப் போங்கள் சித்தாண்டியப்பு என்ற பொழுதுகளில். "மனே, வளர்ந்தாப் பொறவு போவம்" என்பார்.

வளர்ந்தபின் எனக்கும் யாத்திரைகள் வாய்த்திருக்கிறது. இதுவரை கதிர்காம யாத்திரையை ஒரு முறையும், ஸ்பெயின் நாட்டில் இருக்கும் சன்தியாகோ டீ கொம்பொஸ்தெல்லா (Santiago de Compostela) தேவாலயத்திற்கு இரண்டு நாடுகளின் நான்கு வெவ்வெறு நகரங்களிலிருந்து நான்கு தடவைகளும் நடந்திருக்கிறேன். ஏறத்தாழ 3200 கி. மீ இருக்கும்.

எனது யாத்திரைகளின் நோக்கம் ஒருபோதும் கொண்டாட்டமாக இருந்ததில்லை. அது மனம் சம்பந்தப்பட்டது. நீண்ட தூரம் நடக்கும்போது என்னுடன் நானே ஆழமாக உரையாடும் உணர்வினைப் பெற்றிருக்கிறேன். அது பல நேரங்களில் என்னை நெகிழச்செய்தும் அதனூடாகத் தெளிவுறும் நிலைக்கும் இட்டுச் சென்றிருக்கிறது. மன அயர்ச்சியிலிருந்து விடுவித்துப் புத்துணர்ச்சி ஊட்டியிருக்கிறது. அது மட்டுமல்ல சக யாத்ரிகளுடன் பழகும் அனுபவமும் முக்கியமானது. மறக்க முடியாத படிப்பினைகளையும் அனுபவங்களையும் தந்த பல கதைகளை இந்த யாத்திரைகளின்போது பெற்றிருக்கிறேன். என்னை மனிதனாகச் செப்பனிட்டுக்கொள்ள இவை எனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவியிருக்கின்றன.

ஏறத்தாழ 800 கி.மீ நீளமான சன்தியாகோ டீ கொம்பொஸ்தெல்லாவுக்கான யாத்திரைகளுக்கு நான்கு வாரங்கள் தேவை. ஒரு மாதத்திற்கான அவசியமான பொருட்களை நான்தான் காவ வேண்டும். சில பாதைகளின்போது கடல் மட்டத்திலிருந்து 1300 மீற்றர் உயரம் வரை ஏறி இறங்க வேண்டும். இரண்டு சோடி உடைகள், உள்ளாடைகள், மழைக்கான உடை, சாரம், போர்வை, மருந்துகள், உணவு, நீர் என்று காவும் முதுகுப் பையின் கனம் 6-7 கிலோவுக்குக் குறைவாகவே இருந்தாலன்றி சமாளிப்பது கடினம். ஒவ்வொரு நாளும் உடைகளைக் கழுவிக் காய வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இருப்பினும், ஒவ்வொரு பயணத்தின் முடிவில் எடுத்துவந்தவை அதிகம் என்ற எண்ணத்தையே நான் பெற்றிருக்கிறேன். வாழ்வில் நாம் அனாவசியமான பொருட்கள் பலவற்றைக் காவித்திரிகிறோம். வாழ்வதற்கு அதிகம் தேவையில்லை என்பதையும் இப்பயணங்கள் கற்றுத்தந்திருக்கின்றன.

காலநிலையை எவராலும் கட்டுப்படுத்த முடியாதல்லவா! பத்து நாட்கள் தொடர் மழையிலும், அதியுச்ச வெப்பமாக 35 பாகை வெயிலிலும், சில நாட்களில் சுகமான குளிரிலும் நடந்திருக்கிறேன். ஒரு நாளைக்கு 25-35 கி.மீ நடந்தாலன்றி இலக்கை எட்ட முடியாது. இப்படி நடந்து முடிந்து, நீங்கள் குளித்துவிட்டுப் படுக்கையில் விழும்போது கிடைக்கும் தூக்கத்தின் பெறுமதியே தனி.

தங்குமிடங்களில் உணவை வாங்கிக் கொள்ளலாம். மிகவும் எளிமையான ஆனால் மறுநாள் நடைக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களைக் கொண்ட உணவுகள் அவை.

கதிர்காமத்திற்கு நடந்த ஒரு நாள் குளிப்பதற்குத் தண்ணீருக்குப் பஞ்சமாக இருந்தமையினால் 4-5 போத்தல் நீரில் குளித்த நினைவு மறக்க முடியாதது. அதே போலத்தான் உணவும். வயிறு நிறைய உண்ணக் கிடைக்காது. பசிக்குத்தான் உணவு என்னும் தத்துவம் புரிந்த நாட்கள் அவை. என்னுடன் நடப்பவர்களுக்கும் அப்படித்தான். எமக்கான உணவு, நீர், உடைகள், பாய், படுக்கைகள் என்று அனைத்தையும் நாம்தான் காவ வேண்டும்.

ஒருவருக்குச் சுகவீனம் என்றால் அவருக்கு ஆறுதலாகவும் உதவியாக இருப்பதும், அவரது பொதிகளைப் பிரித்துக் காவுவதும், நாம் மறந்துவிட்டிருக்கும் பல அடிப்படை மனித விழுமியங்களை எமக்கு நினைவூட்டும். பகிர்தல் என்பது பெறுவது மட்டுமல்லவே. உணவு தயாரிக்கும் பொழுதில் ஒருவர் அடுப்புக்குத் தோதான இடத்தைத் தேட, மற்றையவர் விறகு தேடிச் செல்ல, இன்னுமொருவர் சமையலுக்கு ஆயத்தம் செய்ய, வேறு சிலர் நீர் எடுத்துவர என்று அனைத்திலும் அனைவரும் ஈடுபடும்போது தோழமையுணர்வும், அன்பும், பாதுகாப்புணர்வும், கூட்டுணர்வும் யாத்திரிகளை இணைக்கிறது.

அண்மையில் எனது கதிர்காம யாத்திரை நண்பர் ஒரு பத்திரிகை இணைப்பொன்றை அனுப்பியிருந்தார். அதனபின் கதிர்காம யாத்திரையின் தற்போதையப் போக்குபற்றி உரையாடிக்கொண்டிருந்தோம்.

இவ்வருடமும் வழமைபோல் நண்பர் யாத்திரை சென்றிருக்கிறார். காவி அணிந்தபடி உதவி வழங்குகிறோம் என்ற பெயரில் நீர், உணவு, மின்சாரம் (தொலைபேசிகளுக்கு) வழங்குகிறார்கள், இந்து மற்றும் பௌத்த மதநிறுவனங்களும் வேறுசில பிரபல்யமான நிறுவனங்களும். இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகம் என்பதால் பாதுகாப்பிற்குப் பஞ்சமில்லை. இலவச உணவும் நீரும் கிடைப்பதனாலும் எதையும் காவிச்செல்லவேண்டிய அவசியம் இல்லையாதலாலும் கொண்டாட்ட மன நிலையில் யாத்திரை செல்கிறதாம் ஒரு கூட்டம்.

ஓரிடத்தில் ஒரு இளைஞன் "அண்ணன், என்னுடன் வந்தவர்கள் கஞ்சா அடித்து மயங்கிக் கிடக்கிறார்கள். பயமாக இருக்கிறது. உதவி செய்யுங்கள்" என்றிருக்கிறான். மதுபானத்திற்கும் பஞ்சமில்லை. பலர் தமது யாத்திரையை நேரஞ்சல் செய்கிறார்கள். எடுத்துவரும் நெகிழிப் பைகளை, போத்தல்களைச் சற்றும் மனக்கிலேசமுமின்றி எறிந்துவிட்டுச் செல்கிறார்கள். அதனால் காட்டுக்கும் விலங்குகள் பறவைகளுக்கு ஏற்படும் அபாயம்பற்றி அவர்களுக்கு சற்றேனும் அக்கறையில்லை.

இலங்கையின் கப்பற்படைத் தளபதியொருவரும் யாத்திரை சென்றிருக்கிறார். அவருக்குப் பாதுகாப்பாக 70 சிப்பாய்கள், அவர்களுக்கான கூடாரங்கள், வாகனங்கள். அவருக்கென்று சீமெந்து நிலத்திலான கழிப்பறையும் அமைத்திருந்தார்கள் என்று இலங்கையின் தேசியப் பத்திரிகையொன்று கூறுகிறது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இலங்கையின் பாரம்பரிய யாத்திரை அனுபவத்தினை இவர்கள் நாகரீக, கொண்டாட்ட நடைப்பயணமாக மாற்ற முன் ஏதாவது செய்ய வேண்டும் என்று யாத்திரை செல்லும் எனது தமிழ் சிங்கள நண்பர்கள் எண்ணுகிறோம் என்றார் எனது நண்பர்.

இப்போதிருக்கும் சிறு ஆறுதல், யாரோ சிலர் யாத்திரையைப் பாதுகாக்கச் சிந்திக்கிறார்கள் என்பது மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழைத்தேயக் கலாசாரங்களும் மேலைத்தேய மக்களும்

**சி . ரவீந்திரன்-சுவிஸ்**

சென்ற மாதம் எனது உறவினரின் கல்யாணத்திற்காக நோர்வே சென்றபோது அங்கு கண்ட காட்சிகளை வைத்து வளர் சஞ்சிகையில் எழுதலாம் என என்னுள் எண்ணம் உதித்தது. நோர்வேயில் உள்ள முருகன் ஆலயத்தில் இத்திருமணம் நடை பெற்றது. இக்கோவிலின் நிர்வாகசபைத் தலைவராக இருந்து, எனது பாடசாலை நண்பர் செவ்வனே நிர்வகிக்கின்றார். இத்திருமண நிகழ்வானது சைவ ஆகம முறைப்படி விமரிசையாக அங்குள்ள குருக்களினால் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, நிறைய நோர்வே நாட்டைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்கள். நோர்வே நாட்டைச் சேந்தவர்களின் நடை உடை பாவனைகள் எனக்குள் சந்தோசமான ஆச்சரியத்தைத் தந்து எனது உடல் வலிகளையும் மறக்கச் செய்த உள்ளக் கிளர்ச்சியாக இருந்தது.

நோர்வேப் பெண்கள் ஒரே விதமான புடைவைகளை அணிந்திருந்தார்கள். நோர்வே ஆண்கள் பட்டு வேட்டி, சால்வைகளுடன் கம்பீரமாக வலம் வந்தார்கள். இலங்கையைச் சேர்ந்த பலர் கடை வீதிக்குப் போகிற உடுப்பில் அதாவது நீள கால்ச்சட்டை ஷர்ட் போட்டிருந்தார்கள் நானும் உட்பட. எனக்கு கொஞ்சம் வெட்கமாகவும் அசௌகரி யமாகவும் இருந்தது. கல்யாண வீட்டுக்காரர்களிடம் கேட்டேன், இந்த பாரம்பரிய உடுப்பை நீங்கள் ஏற்பாடு செய்தீர்களா? என்று. இல்லை, தாங்களாகவே அவர்கள் இந்த உடுப்பைத் தேர்ந்தெடுத்தார்கள் என்றும் சேலைக்குரிய சட்டைகள் மட்டும் தைப்பதற்கு உதவி செய்தோம். அவர்கள் பொறுமையாக ஐந்து மணித்தியாலங்கள் கல்யாண வீட்டில் இருந்தது மட்டுமன்றி நிறைய உதவிகளும் செய்தார்கள். மணமக்களை அழகாக நேர்த்தியாக ஆசீர்வாதமும் செய்தார்கள். சாப்பிடும் போதும் நோர்வே நாட்டினர் கைகளாலும் எம்மவர் பலர் கரண்டிகளாலும் சாப்பிட்டனர்.

நல்லூர் கோவிலில் மேலைத்தேயவர்கள் எங்கள் பாரம்பரிய உடையுடன் கோவிலில் செல்வதைப் பல முறை கண்டிருக்கிறேன். மேல் சட்டையைக் கழட்டி இடுப்பில் கட்டிக்கொண்டு போகின்ற வெளிநாட்டு ஆண்களைக் கோவிலுக்குள் காணமுடியும். எங்கள் சமய கலாச்சாரங்களில் அவர்கள் வைத்திருக்கும் மரியாதை மிகவும் உயர்ந்தது. இதைப்பற்றி பத்திரிகைகளில் கூட எழுதி இருக்கிறார்கள். கீழைத்தேயக் கலாச்சாரத்தில் அவர்கள் பலருக்கு இருக்கும் ஈர்ப்பு அலாதியானது.

1990 ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டுக்கு வந்தேன். அந்த ஆண்டிலும் அதற்குப் பிற்பாடும் நிறைய இலங்கை தமிழர்கள் சுவிஸிற்கு வந்தார்கள். அந்த நேரத்தில் சைவக் கோவில்களைக் காண்பது அரிது. வேலை அனுமதி கிடைத்து சூரிச் நகரத்துக்கு வந்த போது அங்கு கிருஷ்ண பக்தி கழகத்தினால் நடாத்தப்படும் கிருஷ்ணன் கோவிலை அறிந்து அங்கு சென்றேன். இந்திய நாட்டு மக்கள் என்னைப் போல் நீள் காற்சட்டை போட்டு வந்தார்கள். ஆனால் கோவிலை நடத்தும் சுவிஸ் நாட்டு ஆண்கள் வேட்டியுடனும் சுவிஸ் பெண்கள் புடவையுடனும் காணப்பட்டனர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்திய ஆண்டுகளில், மேற்கத்திய மக்கள் கிழக்கு கலாசாரம் மற்றும் ஆடைகளை ஏற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது. இந்த கலாசாரப் பரிமாற்றம், உலக மயமாக்கப்பட்ட உலகத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த தத்தெடுப்பின் பின்னணியில் உள்ள காரணங்கள் பலவித மானவை, ஆன்மீக நிறைவுக்கான நாட்டம் முதல் அழகியல் பன்முகத்தன்மைக்கான விருப்பம் வரை உள்ளடங்கும்.

மேற்கத்தியர்கள் கிழக்கத்திய கலாசாரத்தைத் தழுவுவதற்கான முதன்மையான உந்துதல்களில் ஒன்று ஆன்மீக மற்றும் தனிப்பட்ட மன நிறைவுக்கான தேடலாகும். கிழக்குத் தத்துவங்கள், குறிப்பாக , இந்து மதம், பௌத்தம் மற்றும் தாவோயிசம் ஆகியவற்றில் வேரூன்றியவை, மேற்கத்திய மத மற்றும் தத்துவ மரபுகளிலிருந்து கணிசமாக வேறுபட்ட வாழ்க்கை, உள் மன அமைதி பற்றிய முன்னோக்குகளை வழங்குகின்றன. யோகா, தியானம் போன்ற பயிற்சிகள் மேற்கு நாடுகளில் பெரும் புகழ் பெற்றுள்ளன. இந்த நடைமுறைகள் பல மேற்கத்திய சமூகங்களில் நிலவும் அடிக்கடி வேகமான, பொருள்முதல் வாத (materialistic) இயந்திர வாழ்க்கை முறைக்கு ஒரு சமநிலையை வழங்குகிறது, இது மன உணர்ச்சி நல்வாழ்வுக்கான பாதையைக் காட்டுகின்றது.
பூகோளமயமாக்கல், கிழக்கு மற்றும் மேற்கு இடையே நடைமுறைகள் கலாசாரப் பரிமாற்றத்தை எளிதாக்கியுள்ளது. இந்த வெளிப்பாடு கிழக்கு மரபுகள், கலைகள், வாழ்க்கை முறைகள் பற்றிய ஆர்வத்தைப் பெருக வழிவகுத்தது. மேற்கத்தியர்கள் கீழைத்தேய கல்யாணங்களில் கலந்து கொள்வது, பாரம்பரிய விழாக்களில் பங்கேற்பது கலாசாரங்களின் கலத்தலை எடுத்துக்காட்டுகின்றன.

மேற்கத்தியர்களால் கிழக்கு கலாசாரம் மற்றும் ஆடைகளை ஏற்றுக்கொள்வது இரு சமூகங்களிலும் பன்முக கலாசாரத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேற்கத்திய நாடுகளுக்கு, இது கலாசார எல்லைகளை விரிவுபடுத்துவதையும் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை நோக்கி நகர்வதையும் குறிக்கிறது. இது வேறுபட்ட கலாசாரப் புரிதலை ஊக்குவிக்கிறது, உலகளாவிய குடியுரிமை உணர்வை வளர்க்கிறது.

மேற்கத்திய மக்கள், கிழக்கு கலாசாரம் மற்றும் ஆடைகளை பின்பற்றும் போக்கு நமது நவீன உலகின் ஒன்றோடொன்று இணைந்திருப்பதற்கு ஒரு சான்றாகும். இது ஆன்மீக செறிவூட்டல், அழகியல் பன்முகத்தன்மை மற்றும் கலாசார ஆய்வுக்கான விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது. பரஸ்பர மரியாதை மற்றும் புரிதலை வளர்ப்பதன் மூலம், மேற்கத்திய மற்றும் கிழக்கு சமூகங்கள் இந்த செழுமைப்படுத்தும் பரிமாற்றத்திலிருந்து பயனடையலாம், மேலும் இணக்கமான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய சமூகத்தை உருவாக்குகின்றன.

சுவிஸ் போன்ற குளிர் நாடுகளில் குளிர் காலங்களில் வேட்டி அணிவது ஒரு சவாலான விடயமாகும். வேட்டியுடன் சப்பாத்து போடுவது கொஞ்சம் கோமாளி போலக் காட்டும். ஆண்கள் மேற்சட்டை இல்லாமல் கோவிலுக்குள் வரவேண்டும் என்ற நியதியும் இங்கு இல்லை. இங்குள்ள எங்கள் அடுத்த தலைமுறையினருக்கு கீழைத்தேய ஆடைப் பாரம்பரியங்களை கடத்துவது இலேசான விடயமல்ல. எங்கள் தேசிய ஆடைகள் எங்கள் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றன என எப்படி அவர்களுக்கு விளங்கப்படுத்துவதில் என்பதில் சற்றுத் திணறிப் போகின்றேன். பாரம்பரிய உடைகள் எவ்வாறு முக்கியமான கலாசார விழாக்கள் மற்றும் சடங்குகளுக்கு எவ்வாறு ஒருங்கிணைந்ததாக உள்ளது என்பதைக் காட்டி, கலாசார அடையாளத்தைப் பாதுகாப்பதில் அவற்றின் பங்கை வலியுறுத்துகின்றேன்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பாரம்பரிய ஆடைகளைக் கொண்டாடும் நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்து இளைய தலைமுறையினர் தங்கள் கலாசார உடையை அனுபவிக்கவும் பாராட்டக் கற்று கொள்வதும் பாரம்பரிய ஆடைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி மனம் திறந்த மரியாதையான உரையாடல்களில் ஈடுபட்டு அவர்களின் கருத்துக்களைக் கேட்பது, அடுத்த தலைமுறையினரின் கலாசாரத் தொடர்ச்சிக்கு வழி வகுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீயூழ்
காலவெளியில்
கரைந்துபோகாத உரையாடல்கள்
நீயே கனவு.

எரியுண்ட
வார்த்தைகளோடு வாழ்தல் மிச்சம்
பிரபஞ்சத்தின் பேரியக்கம்
நீயே விளைவு.

ஆதியில் அன்பிருந்தது.
அந்த நினைவுக்கு நீள்கரை
நீயே அழிவு.

கிளைகளின் துயரம்
எந்தப் பறவையும் தீண்டாத கூடுகளில்
வாழ்ந்துகொண்டிருக்கிறது
இடைவெளிகளின் கனதி
பற்றிக்கொள்ளாத கைகளில்
நிறைந்துகொண்டிருக்கிறது
நேசங்களின் திரள்வு
வெற்றுத்தோள்களில்
பெருகிக்கொண்டிருக்கிறது
கண்களின் சாவு
விலகிச்செல்லும் ஒவ்வொருவரையும்
தழுவிக்கொண்டிருக்கிறது

இசைக்கோர்வையொன்றின் உச்சப்புள்ளியில்
எதோ நிகழ்வதுபோல
இந்தக் கணமும்.

ஆயிரம் வருடங்கள் மீந்திருக்கும்
இந்தப் பெருவாழ்வு.

**- நெற்கொழுதாசன்**

**சிற்றிதழ்களை வணிக இலக்கியமாக்க முடியாது. ஆக்கின் அதன் உயிர் அடங்கிவிடும்.**

# எழுத்துப் பிழைகள்

"அள்ள அள்ள வற்றாத செல்வம்" என்கிறார் ஓர் இலக்கிய நண்பர். எழுத்துப் பிழைகளின் மீதான அதீத அக்கறை பதிப்பகத்தாருக்கு இருக்கவேண்டும். மொழியின் சிதைவிற்கு அடிப்படை எழுத்துப்பிழை. மொழிமீது அக்கறையுள்ள எவரும் பொறுப்பின்றி நடந்துகொள்ள முடியாது.

சஞ்சிகைகளில் வரும் எழுத்துப் பிழைகளுக்கு சஞ்சிகையாளர்கள் பலவேறு காரணங்களை அடுக்குகின்றனர்.

1. எழுத்தாளர் எனப்படுவோருக்கே மொழி தெரியாதிருக்கிறது. பிழையின்றி எழுதத்தெரியாது தவிக்கின்றனர். இலக்கணம் தெரியாது.

2. வாசகர்களுக்கு அக்கறையில்லை. ஏதோ விசயம் இருந்தாற் சரி என்று வாசித்தும், வாசிக்காமலும் கடக்கிறார்கள்.

3. ஆக்கதாரர்கள் பொறுப்புடன் நடந்து கொள்கிறார் களில்லை. கடைசி நேரத்தில்தான் ஆக்கங்களைத் தந்து முடிக்கிறார்கள். குறைந்தது ஒரு தடவையாவது எழுத்துப் பிழைகளையும் சரிபார்த்து அனுப்பலாம். என்ன செய்வது! அவர்களையும் நெருக்கமுடியாது. நெருக்கினால், ஆக்கமே வராது.

4. முகநூல் வருகையின் பின் எழுத்தாளர்களின் வடிகால் சுலபமாகிவிட்டது. அதனால், சஞ்சிகையின் பக்கம் வேண்டா வெறுப்புடனே கால் வைக்கிறார்கள்.

5. வணிகப் பத்திரிகையென்றால் பரவாயில்லை. பொருளாதார பலத்துடன் ஓரளவு நிவர்த்தி செய்துவிடலாம். சிற்றிதழ்களை வணிக இலக்கியமாக்க முடியாது. ஆக்கின் அதன் உயிர் அடங்கிவிடும். எல்லா வேலைகளும், குறிப்பாக ஓர் அச்சகத்தினுடைய கடுமையான பணிகளும் அவர்களுடையதே!

பல சிற்றிதழ்கள் நின்று போவதற்கு சஞ்சிகையாளர்களின் இந்தச் சலிப்பும், சோர்வுமே காரணம்.

இதிலிருந்து மீள்வதற்கு என்ன வழி?

ஒரே வழிதான். பொறுப்புள்ள மனிதர்களைத் தேடிக் கண்டடைவதும் அவர்களுடன் கைகோர்ப்பதுவுமே!

- சீனா.மானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஹலோ! அம்மா !"

இனி,
வழக்கம் போலவே,
பிரச்சனைகள்
பிரச்சனைகளாகவே இருக்கும்.
நாங்கள்
பேசா ம(ட)ந்தைகளாகவே,
இருக்கப் பழகிவிடுவோம்.
முடிந்தவன்
ஒவ்வொன்றாக கரையேறுவான்.
எரிகிற வீட்டில்
எல்லாப் பூத கணங்களும்
கொள்ளி பிடுங்கும்.
அரசியல் பொன்னையர்கள்
கண்ணை மூடிக் கொண்டு
பொறுபால் குடிப்பார்கள்.
நாங்கள்,
எல்லா வாசல்களிலும் அவமதிக்கப்படுவோம்.
எல்லா அலுவலகங்களாலும் அலைக்கழிக்கப்படுவோம்.
கேள்வி கேட்கப் பயந்து
கிடைப்பதை வாங்கிக் கொள்கிற
பிச்சைக்காரர்களாக
இருக்கப் பழகிக் கொள்வோம்.
ஒரு கள்ளக் கப்பல் வரும்.
கிடந்ததை எல்லாம் விற்று
நள்ளிரவில் ஏறுவோம் .
புறப்படும் போது,
நட்சத்திரங்கள் மின்னப் பூத்திருக்கிற
நமது நாட்டைப் பார்த்து
விம்மி அழுவோம்.
நடுக்கடலில் வைத்து,
கடைசியாய்
"ஹலோ!....அம்மா..." என்று கேவுவோம்.
சரியாக,
அமாவாசை நள்ளிரவில்
எங்கள் பாவப்பட்ட வாழ்வின் கப்பலை
அவர்கள் தாழ்ப்பார்கள்.
நீருக்குள் திணறித் திணறி கீழிறங்கும்
சொந்த நிலத்திலேயே
காலம் முழுவதும் வாழ ஆசைப்பட்ட
நமது ஆன்மா.

- தீபிகா-
*02.08.2024 06.28 am.*



தீபிகாவின் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயலாமை

புற்றிலிருந்து, ஆமைகள் இனித் தலை நீட்டும்.
வழக்கம் போலவே,
ஆயிரம் அற முட்டைகளையும் குழி தோண்டிப் புதைக்கும்.
தூர்வாரித் தந்த கழிசடைகளை விட்டுவிட்டு
துணிந்து குதித்தவன் பற்றிப் புறணி பாடும்.
மாறி மாறிச் சேறடித்து நாறும்.
தண்ணீரில் மிதந்து மிதந்து விளையாடி
தத்துக்க பித்துக்க வகுப்பெடுக்கும்.
எல்லாப் பூசைகளும் முடிந்த பிறகு
ஓடிவந்து மணி கிலுக்கும்.
கள்வர் பெருமக்களுக்காக பாட்டுப் பாடி கும்மியடிக்கும்.

வெங்கிணாந்திச் சனம்
எல்லாவற்றையும் வெள்ளி பார்க்கும்.
தலையை விட்டுவிட்டு வாலைப் பிடித்தபடி தொங்கும்.
சுழியன்களே மீண்டும் வெல்வார்கள்.
எல்லாத் தடயங்களையும் அழித்துக் கொண்டு,
மாலையும் கழுத்துமாக
அவர்களே மீண்டும் பல்லிளிப்பார்கள்.
மறதிக்குப் பிறந்த சனங்கள் மீண்டும் மீண்டும் ஏமாறும்.
ஒவ்வொன்றாக,
எல்லாப் பிடிகளையும் இழந்து,
தம் தலையில் தாமே மண்ணள்ளிப் போடும்.

பிறகு, கடைசியாய் ...
கனடா விசாவுக்கு காத்திருக்கும்.
லண்டன் போய், சுவிஸ் போய்
லாச்சப்பலில் கூடி நின்று கதைக்கும்.
விழாக்கள் என்றதும், வீதி வீதியாய் பறையடிக்கும்.
"வீறு கொண்டெழுவோம்" என்று பரத நாட்டியம் ஆடும்.
காசு பெருகப் பெருக, கண்மண் தெரியாமல் கழண்டாடும்.
ஆசை வழிய வழிய
ஐம்பது வயசிலேறி நின்று கேக் வெட்டும்.

*Zee Tamil தமிழகத் தொலைக்காட்சி



பிறகு,
வைக்கேசனில் வந்து கோயில் திருவிழாவிற்கு
ஒரே நிறத்தில் உடுப்பு போட்டு கலர் காட்டும்.
போகும் போது மறவாமல்,
பாரைக் கருவாடும், தேன் போத்தலும் வாங்கி
பார்சலில் அடைந்து கொண்டு போகும்.

பிறகு,
தாய்நிலமே! என்சனமே! என
கண்ணீர் வடியக் கவிதை எழுதும்.
*"சீ தமிழ்" ல், ஒரு சின்னச் சிறுக்கி
"விடை கொடு" பாடி நடிப்பாள்.
எல்லா ஆமைகளும்,
புல்லரித்துப் புல்லரித்து அழும்.
சுடலை ஞானிகள் விசும்புவார்கள்.

பிறகு ...

பிறகென்ன பிறகு ?

**- தீபிகா**
17.07.2024 - 09.40 am.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம் :

# காலத்தால் அழியாத இலக்கிய ஞானி தி. ச. வரதராசன்




வரதரின் நூற்றாண்டில் 'ஜீவநதி' பரணி செய்த கைங்கரியமே இந்நூல். நான் என்னுடைய கட்டுரைகள், கவிதைகளை நூலாக்க எவ்வித முயற்சியும் எடுக்கா நிலையில் இந்நூல் வெளிவருகிறது. மூத்த எழுத்தாளரான வரதர் ஈழத்து இலக்கியத்தின் சகாப்தமாக விளங்கியவர். அறிவிலும் அன்பிலும் முகிழ்ந்தவர். உரையிலும் செய்யுளிலும் புதுமைகள் செய்தவர். அரைநூற்றாண்டுக்கு மேல் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். கலை, இலக்கியத் துறையில் வரதர் ஆற்றிய பணிகள் எண்ணுதற்கரியன. ஈழத்தமிழரின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களை மறுமலர்ச்சி இதழ்களுக்கூடாக வெளிக்கொணர்ந்த முன்னோடிகளில் ஒருவரான தி.ச.வரதராசன், கலைநுட்பம் கொண்ட கருத்துச்செறிவான சிறுகதைகளுக்கூடாகச் சமூக மாற்றங்களுக்கு வித்திட்டவர். வரதர் தான் பிறந்த புன்னாலை மண்ணுக்குப் பொன்னாலை என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தவர். இன்று புன்னாலைக் கிராமம் அவர் சூட்டிய பொன்னாலை என்ற பெயரினாலேயே அழைக்கப்படுகிறது. நாவல்களிலும் புதுமைகள் பலவற்றைச் செய்தவர். சஞ்சிகைகள் வரலாற்றில் அவர் இடம் அழிக்க முடியாதது. வரதர் இற்றை வரை அறியப்படாத ஆளுமையாகவே உள்ளார்.

– சி. ரமேஸ்

*வரதர் :*
*1924 – 2006*
மறுமலர்ச்சி சஞ்சிகையின் (1946 – 1948) ஆசிரியர் குழுவில் ஒருவர். ஆனந்தன் (1952), தேன் மொழி (1955), வெள்ளி (சஞ்சிகை), புதினம் (வார இதழ்), அறிவுக் களஞ்சியம் (1992–1995, 1998) ஆகியன இவர் நடத்திய இதழ்கள்.

வரதர் வெளியீடு
வரதர் தொழிலால் ஓர் அச்சக முகாமையாளர். 'வரதர் வெளியீடு' என்னும் வெளியீட்டு முயற்சியின் மூலம் பெருமளவு நூல்களை வெளியிட்டுள்ளார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழியே வரதர் வெளியீடாக வெளிவந்த முதல் நூலாகும். மஹாகவி, வித்துவான் பொன். முத்துக்குமாரன், செங்கை ஆழியான், சாந்தன், க. கைலாசபதி, முருகையன், நா. சோமகாந்தன், நாவற்குழியூர் நடராஜன் போன்ற பலரது நூல்கள் வரதர் வெளியீடாக வெளிவந்துள்ளன. பதினைந்து வயதிற்குட்பட்ட சிறார்களுக்காக வரதர் கதைமலர் தொடரில் ஐந்து நூல்களை வெளியிட்டார்.

வரதரின் பல குறிப்பு என்ற பெயரில் தமிழ் மக்களுக்குத் தேவையான பலவித விடயங்களைத் தொகுத்து ஆண்டுக்கு ஒன்றாக நான்கு பதிப்புக்கள் வெளியிட்டார்.

வரதரின் சேவைகளைப் பாராட்டி இலங்கைக் கலைக் கழகம் அவருக்கு சாகித்திய இரத்தினம் எனும் பட்டத்தை வழங்கியுள்ளது.

இவரது நூல்கள்
கயமை மயக்கம் (சிறுகதைகள்)
நாவலர்
வாழ்க நீ சங்கிலி மன்ன
மலரும் நினைவுகள்
பாரதக்கதை
யாழ்ப்பாணத்தார் கண்ணீர்
சிறுகதை பட்டறிவுக் குறிப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Counting and Cracking -A Master Piece in Theatre

# எண்ணிக்கை, இல்லையேல் கையோங்கு



## பயணங்கள் முடிவதில்லை

S. சக்திதரன் எழுதி, இயக்கிய Counting and Cracking என்பது ஒரு உணர்ச்சிபூர்வமான மனிதர்களின் கதைகளைக் கொண்ட சர்வதேச நாடகமாகும். இந்நாடகம் தலைமுறைகள் மற்றும் கண்டங்களைக் கடந்து, காதல், இழப்பு, இடப்பெயர்வு வாழ்க்கை மற்றும் தேசிய எல்லைகளையும் கடந்து எல்லா மக்களையும் ஒன்று சேர்க்கின்றது.

இந் நாடகம் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட, கொழும்பில் வாழ்ந்த குடும்பத்தின் இடப் பெயர்வைக் கதையாகச் சொல்கிறது. 2024 ஜூன்-ஜூலையில் மெல்பேர்ண் பல்கலைக்கழக அரங்கத்தில் பிரமாண்டமாக மேடையேற்றப்பட்டபோது அரங்கம் நிறைந்த காட்சிகளாக பல்வேறு கலாச்சார மக்களின் பாராட்டைப்பெற்றது.

அவுஸ்திரேலியா நாடானது, அந்த நிலத்தின் பாரம்பரிய உரிமையாளர்களான பூர்வீகக் குடிகளுடன் இன்னும் சமரசம் செய்யப்படாத வரலாற்றைக் கொண்டது. இப்படியான ஒரு நாட்டில் இலங்கையிலிருந்து வந்த குடும்பம் குடியேறுகிறது.

நாம் எங்கிருந்து வந்தோம்? எதை இழந்தோம்? மீண்டும் என்ன காரணங்களுக்காகப் பழையவற்றைத் தேடுகிறோம்? எனக் கேள்விகளை எழுப்பி, எமது தனித்துவமான கலாசார வாழ்வை இழக்காது இடப் பெயர்வால் உருவாகும் மறு வாழ்வில் அடுத்த தலைமுறைக்கு ஒரு அடையாளத்தை உருவாக்குவதில் இயக்குனர் வெற்றி கண்டுள்ளார்.

பல்வேறுபட்ட கலாசாரங்கள், சிக்கலான வாழ்க்கை முறைகளை கொண்ட புலம் பெயர் மக்கள், பெரிய தீவான அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கான காரணங்களென்ன? காரணங்களைப் பிரதிபலிக்கும் மறு வாழ்வு புலம் பெயர் மக்களுக்கு இனிமையான அனுபவமாக இருக்குமா? இல்லையா? என்பதை இந்நாடகம் மேலும் சொல்ல முயல்கிறது.

மெல்பேர்ணில் உள்ள என் நண்பர்களுடனும் மேலும் மாறுபட்ட கலாச்சார பார்வையாளர்களுடன் அமர்ந்து இந்நாடகத்தை பார்க்கும்போது, கொழும்பில் வாழ்ந்த வாழ்க்கைக் காலத்தை என் மனம் அசை போட்டது. அந்த நிலப்பரப்பில் வாழ்ந்த ஒரு கட்டத்தின் தனிப்பட்ட நினைவில் மனம் நனைந்தது.

மேற்கில் புகையிரதப் பாதைகள், கிழக்கில் ஹெவ்லாக்ஸ் வீதி, வடக்கே டிக்மன் வீதி மற்றும் தெற்கே வெள்ளவத்தை கால்வாய் என ஒரு கணம் மகிழ்ச்சியும் மறுகணம் துக்கமுமாய் கலவையான உணர்வுகளை இந்நாடகம் தந்தது. எழுத்தாளர் எஸ்.சக்திதரனின் குடும்பத்தைப் போலவே, கொழும்பு 3, 4 மற்றும் 5 ஆகிய இடங்களை இணைக்கும் அந்த நிலப்பரப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்ந்த பலர் இதற்கு முன்னர் இன வன்முறைகளை உடல் ரீதியாக அனுபவித்திருக்கவில்லை. அந்தத் தெருக்கள் ஒவ்வொன்றும் சிங்களம், தமிழ், முஸ்லிம், பர்கர், கிருஸ்தவர்கள், இந்தியர் , சீனர் என அனைவரினதும் வாழ்விடமாக இருந்தன. அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். சிறுவர்கள் ஒன்றாக விளையாடினர். ஒரே இரவில், இந்தப்பகுதி இதற்கு முன் அனுபவித்திராத வன்முறையால் பாதிக்கப்பட்டு, இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சொந்த வீடுகளுக்கு அருகி-லேயே அகதி முகாங்களில் அடைக்கலம் கோர நேர்ந்தது. ஆயிரக்கணக்கானோர் இக்கரையை விட்டு வெளியேறினர். சிலர் திரும்பி வரவேயில்லை. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, கின்ரோஸ் கடற்கரையில் இக்கசப்பான நினைவுகள், சேமிக்கப்பட்டு, பூட்டப்பட்டு, சாவிகள் கடலில் வீசப்பட்டன.

ஒவ்வொரு கதாபாத்திரமும், ஒவ்வொரு மேடை அமைப்பும், ஒவ்வொரு உரையாடலும் அதற்கான நேரத்தை, அந்த மக்களை, அவர்களின் எதிர்பார்ப்புகளை, அவர்கள் பிறந்த இடத்தைப் பற்றிய அவர்களின் சிதைந்த கனவுகளைப் படம்பிடிப்பதில் அதன் கதை அழகுக்காக மட்டுமல்ல, அதன் வரலாற்று முக்கியத்துவத்திற்காகவும் தனித்து நிற்கிறது. ஒவ்வொரு கதாபாத்திரமும், பல்வேறு கலாசார பாரம்பரியத்தைச் சேர்ந்த தனிநபர்களால் உணர்திறனுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது. அவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கதைசொல்லல் படிமம் மிகச் சிறந்தவையாகப் படைக்கப்படுள்ளது .

மெல்பேர்ண் குளிர்கால மாலைப்பொழுதில், தமிழ் மற்றும் சிங்கள பாரம்பரிய மக்கள் உட்பட வளர்ந்த ஆண்களும்பெண்களும்கண்ணீர்சிந்தினர். முன்பின் அறிமுகமில்லாத பார்வையாளர்கள் மற்றவர்களைக் கவலையுடன் அணுகி ஆறுதற்படுத்துவதைப் பார்த்தபோது மனது நெகிழ்ந்தது. ஒரு சக்தி வாய்ந்த நிகழ்வாகப் பரிணமித்து நீண்டது முன்னிரவு.



கொழும்பைத் தளமாகக் கொண்ட, இலங்கைத் தமிழ்க் குடும்பத்தின் வரலாற்றைக் காட்டிலும் இந்நிகழ்வு முதல் மற்றும் இரண்டாம் தலைமுறை அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்த அனுபவங் களையும் எதிர் நோக்கும் சவால்களையும் அதிகம் கொண்டிருந்தது. ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள பலவேறு நாடுகளில் இருந்து போர்கள், குண்டுவெடிப்புகள், வன்முறைகள், பாகுபாடுகள், இன அழிப்புக் கலவரங்கள் மற்றும் உள்நாட்டுக் குழப்பங்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிய தனிநபர்களையும் குடும்பங்களையும் அது உருவாக்கிய உணர்ச்சிகரமான அதிர்வு, கலாச்சார மற்றும் தலைமுறைத் தடைகளைத் தாண்டிய பதிவு இந்நாடகத்தில் பிரதிபலித்தது.

இன்று அவுஸ்திரேலியப் பூர்வீகக் குடிகள் எழுப்பும் நியாயமான போர்க்குரலும் இந்நாடகத்தில் எதிரொலிக்கிறது. புலம் பெயர் நிலங்களில், உள்ளடக்கம், சமத்துவம், நட்புறவை மேம்படுத்துவதில் நாம் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருப்போம் என இந்நாடகம் அறைகூவல் விடுவதோடு சிக்கலான மனித, சமூகப் பிரச்சினைகளைப் பார்வையாளருக்குப் புரிய வைப்பதிலும் வெற்றி கொண்டுள்ளது.

இந் நாடகம் புலம்பெயர்ந்த முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையின் கலாசாரப் பாதுகாப்பிற்கான உணர்வைத் தூண்டுகிறது. மாற்றங்களுக்கு மத்தியில் பல தரப்பட்ட மக்களின் ஒருங்கிணைப்புக்கான செயல்முறைகளை இணைக்கிறது. தேசிய எல்லைகள் மற்றும் கலாச்சாரங்களைத் தாண்டி இடம்பெயர்வது ஒரு முடிவற்ற பயணமாக இருக்கும் என்பதைச் சொல்கின்ற அழிவற்ற கலைப்படைப்பு இது.

"எண்ணிக்கை, இல்லையேல் கையோங்கு" .

**- ரஞ்ஜிற் கஜேந்திரா** – மெல்பேர்ண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வளர் சிறுகதைப்போட்டி – 2024

## போட்டி முடிவுகள்

**முதற்பரிசு**
டம்மிப் பொயின்ற்
படைப்பாளர் :
**வி. கௌரி பாலன்**
மட்டக்களப்பு

**இரண்டாம் பரிசு**
தனிச்சிறை
படைப்பாளர் :
**ஷாணுகா நகுலேஸ்வரன்**
விசுவமடு

**மூன்றாம் பரிசு**
'த.வி.பு - 0749'
படைப்பாளர் :
**கருணை ரவி**
கரவெட்டி

## சிறப்புப் பரிசு பெறுவோர்

'வேலு'
படைப்பாளர் :
**ஜெ. பிரணவன்**
திருநெல்வேலி

மனிதர்கள், பேய்கள், தெய்வங்கள்
படைப்பாளர் :
**ம. உஷாந்**
அம்பாறை

'மண்ணுக்குத் தெரியும்'
படைப்பாளர் :
**சி . கதிர்காமநாதன்**
சுழிபுரம்

ஆயிரத்து எண்பது
படைப்பாளர் :
**அ.ஜ.அர்ஷத் ஆஹாஸ்**
மருதமுனை

'இடம் மாறிப் பெய்யும் மழை'
படைப்பாளர் :
**ருஷ்தியா ஹாபிஸ்**
தர்கா டவுன்

பழைய அப்பா
படைப்பாளர் :
**அம்பிகை கஜேந்திரன்**
கோண்டாவில்

'கிரீடம்'
படைப்பாளர் :
**பிரேமினி பொன்னம்பலம் (தாட்சாயணி)**
சாவகச்சேரி

பூவா? தலையா?
படைப்பாளர் :
**மோகன்ராஜ் ஜதுர்சன்**
வத்தளை, கொழும்பு

காலக்கேள்வி
படைப்பாளர் :
**இ. நா .ஸ்ரீ ஞானேஸ்வரன்**
திருகோணமலை

6.15 மணி பஸ்
படைப்பாளர் :
**லோஹிதா திலீபன்**
திருகோணமலை

'ஜினதாச அல்மெய்ட்டாவின் ஏழு சந்திரன்கள்'
படைப்பாளர் :
**உக்குவளை அக்ரம்**
மடவெல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓவியராகும் கவிஞர் க. ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org